# திருக்கோயில்

"என் கடன் பணி செய்து கிடப்பதே"


GAZETTEER UNIT
NOV '69



கலைமகள்

மாலை 12] சௌமிய - ஐப்பசி - நவம்பர் 1969 [மணி 2

தமிழ் நாடு அரசின் அறநிலைய



திருவண்ணுமலை அருணுசலேசுவரர் கோயிலுக்கு இந்தியக் குடியரசின் உதவித் தலைவர் மேன்மை சான்ற திரு. ஜி. எஸ். பதக் அவர்கள் தம் குடும்பத்தினருடன் வருகை தந்தபோது, சென்னைத் துணையாணையர் திரு. கே. இராஜா, B.A., B.L. அவர்களும், அறங்காவலர்களும், நிர்வாக அதிகாரியும் வரவேற்றல். (20-9-69)

## பொருளடக்கம்


1. அம்மை வழிபாடு
2. சக்தியும் சிவமும்
3. சக்தி பேதங்கள்
4. அறநிலையத்துறையின் அரும்பணிகள்
5. அபிராமி அந்தாதி
6. பெண்ணின் நல்லாள்
7. அத்துவைத தத்துவ ஆசாரியர்கள்
8. தருமம் அறிந்தவன்
9. மகாபாரதம்
10. திருவண்ணுமலைக் கார்த்திகைத்தீபம்
11. செய்திச்சுருக்கம்
12. பொய்யாவிளக்கு
13. ஐன்ஸ்டனும் அண்டப்பகுதியும்
14. திருவள்ளுவர் கண்ட மெய்ந்நெறி


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்


ஆண்டுச் சந்தா ரூ. 10/- | தனி இதழ் விலை ரூ. ஒன்று

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள் ''திரு. ஆணையர் அவர்கள், அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-34'' என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையாளர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்




மாலை 12] சௌமிய-ஐப்பசி-நவம்பர், 1969 [மணி 2

NOV 69
RECORD OFFICE BUILDINGS, MADRAS
45/9

# அம்மை வழிபாடு

அம்மை வழிபாடு அல்லது சக்தி வணக்கம் என்பது, மிகத்தொன்னெடுங் காலமாக, நம் இந்திய நாட்டில் இனிது நிகழ்ந்து வருகின்றது. மொகஞ்சதாரோ, அரப்பா என்னும் இடங்களில் நிகழ்த்தப் பெற்ற அகழ்வாராய்ச்சிகளிற் கிடைத்த பல பொருள்களில், உலக அன்னையின் மண்சிலைகள் பலவும் காணப்படுகின்றன. ஆராய்ச்சியாளர்களின் கருத்தின்படி, சிந்து வெளி நாகரிக காலம் ஏறத்தாழக் கி. மு. 4000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று புலனாதலின், சக்தி வழிபாடு அதற்கும் முன்னரே நிலவி வந்த பழைமையுடையது என்பது புலனாகும்.

தொல்பொருள் ஆராய்ச்சித்துறைப் பேரறிஞர் ஆகிய சர்ஜான் மார்ஷல் என்பவர், சிந்து வெளிப் பகுதியிற் கிடைத்த அன்னையின் சிலைகளைப் போலவே, பாரசீகம் ஏஜியன் எலம் மெசபட்டோமியா டிரான்ஸ்காஸ்பியா துருக்கி சிரியா பாலஸ்தீனம் சைப்ரஸ் கிரீட் பால்கன் எகிப்து முதலிய பல்வேறு பகுதிகளிற் கிடைத்த சிலைகளும் இருப்பதனால், அன்னை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பலநாடுகளிலும் பரவியிருந்திருத்தல் வேண்டும் என்று விளக்குகின்றார்.

இருக்கு வேதத்தில் அம்மை வழிபாடு பற்றிய குறிப்புக் காணப்படுகின்றது. அதன்கண் 'தேவிசூக்தம்' என்றும் ஒரு தனிப்பகுதியுள்ளது. உஷஸ், ராத்ரி, அதிதி, வாக், புரந்தி, திஷணா, ஈளா, வாருணி போன்ற பெண் தெய்வங்களின் பெயர்கள் பல இருக்கு வேதத்தில் வருகின்றன. எனவே, அன்னை வழிபாடு இருக்கு வேதத்திற்குப் புதியதோ புறம்பானதோ அன்றி, அதற்கும் மிக முற்பட்டதென்று உணரலாம்.

கேனோபநிடதம், பொன்நிறம்உடைய உமையம்மை பற்றிக் குறிப்பிடுகின்றது. மகாபாரதம் அம்பிகையைக் கண்ணபிரானின் தங்கையாகவும், சிவபிரானின் மனைவியாகவும் சிறப்பிக்கின்றது. தேவி பாகவதம், தேவி மகாத்மியம், பிரமவைவர்த்த புராணம், ஸ்காந்த மகாபுராணம், பிரமாண்ட புராணம் முதலிய பல நூல்கள், சக்தி வழிபாட்டின் பெருமையினை விரித்துரைக்கின்றன.

Q2ை211, N58

ஐதரேய பிராம்மணம், காத்தியாயன சிரௌத சூத்திரம், தைத்திரிய ஆரண்யகம், இருக்குசம்மிதை முதலியவற்றிலும், அன்னை வழிபாடு பற்றிய குறிப்புகள் அறியப்படுகின்றன.

அன்னை வழிபாடு அல்லது சக்தி வணக்கம் என்பது, நம் இந்திய நாட்டில் மட்டுமேயன்றி, உலகின் பல பகுதிகளிலும் பரவி இருந்ததெனத் தெரிகின்றது. நாகரிக மேம்பாட்டில் ஓங்கிச் சிறப்பும் பழமையும் மிக்குத் திகழ்ந்திருந்த எகிப்து நாட்டு மக்கள், முழுமுதற் கடவுளை ஓஸைரிஸ் (Osiris) என்னும் தந்தையாகவும், ஐஸிஸ் (Isis) என்னும் தாயாகவும் வழிபட்டு வந்தனர்.

சாலடியர் என்னும் பழம்பெரு மக்கட்டொகுதியினரும், ஊர் (Ur) என்னும் தம்முடைய சிறந்த தலைநகரில் தாம் எழுப்பிய மாபெருங் கோயிலின்கண் ஒளிவடிவாக விளங்கும் கடவுளை ஸமஸ் (Samas) எனப்பெயரிய அப்பன் ஆகவும், இஸ்தர் (Istar) என்னும் பெயருடைய அன்னையாகவும் அமைத்து, வழிபாடு செய்துபோந்தனர்.

சுமேரிய நாட்டு மக்கள் நம்மைப் போலவே அன்னை அல்லது தேவி வழிபாடு உடையவர்களாக விளங்கியிருந்தனர். சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகத்திற்கும் காலத்தால் மிகப் பழமையானது.

இந்தியச் சிந்து வெளி மக்களிடையும், சுமேரிய நாட்டு மக்களிடையும் நிலவி வந்த தேவி வழிபாட்டிற் பலதிற ஒப்புமைப் பண்புகள் இருந்தமை புலனாகின்றது.

(1) காளைமாடும் சிங்கமும் முறையே சிவபிரானுக்கும் அம்மைக்கும் உரிய ஊர்தியாக நம்மாற் கொள்ளப்படுவது போன்று, சுமேரிய மக்களும் தம்முடைய ஆண் தெய்வத்திற்குக் காளைமாட்டையும், பெண் தெய்வத்திற்குச் சிங்கத்தையும் ஊர்தியாகக் கொண்டு வழிபட்டு வந்தனர்.

(2) சுமேரிய மக்களும் சிந்துவெளி மக்களும், தேவியைப் போர்க்கு உரிய தெய்வமாகவே கருதிப்போற்றினர்.

(3) தேவியை நாம் 'பார்வதி' எனவும் 'மலைமகள்' எனவும் கூறுதற்கு ஏற்ப, சுமேரிய மக்களும் தமது பெண் தெய்வத்தை மலைநிலப் பகுதிக்கு உரிய தெய்வமாகவே கருதிப்போற்றினர். கன்னிமை நிலையிலும், மணந்தநிலையிலும் வைத்து வழிபட்டனர்.

(4) சுமேரிய நாட்டுப் பெண்தெய்வம் ஆகிய நானா (Nana) என்பதே, நானாதேவி எனப்படும் இந்தியப் பெயரில் இடம் பெற்றுள்ளது. குஜராத்தில் இங்க்ளாஜ் (Hinglaj) என்னும் இடத்தில் நானாதேவிக்குப் புகழ்மிக்க கோயில் ஒன்று அமைந்திருப்பதும், ஈண்டு நாம் உணர்ந்து இன்புறுதற்குரியது.

(5) உமா என்னும் இந்தியச் சொல்லே, பாபிலோனில் உம்மா (Umma) என்றும், ஆர்க்கேடியாவில் உம்மி (Ummi) என்றும், சித்தியாவில் உம்மோ (Ummo) என்றும், மருவி வழங்கி வருவதாக அறிஞர்கள் (Dr. R. C. Hazra) கருதுகின்றனர்.

(6) அன்னை மரியாள் (Mary) சிறப்பைப் புகழ்ந்து கொண்டாடுவதன் மூலம் கிறித்துவ சமயமும் தாராதேவியின் புகழைப் போற்றுவதன் மூலம் பௌத்த சமயமும்கூட, ஒருவகையில் தாய்மைத் தெய்வத்தின் தன் நிகரற்ற மாட்சிமையினை உடன்பட்டுத் தழுவிக் கொண்டுள்ளன எனலாம்.

இந்து மதத்தின் ஒரு சிறந்த பகுதி, சாக்த மதம். சிவபிரானைப் போற்றும் சைவமும், விஷ்ணுவை வழிபடும் வைணவமும், கணபதியை வணங்கும் காணபத்தியமும், குமாரனாகிய முருகனைப் பணியும் கௌமாரமும், சூரியனைத் துதிக்கும் சௌரமும்போலச் சக்தியை வழுத்தும் சாக்தம் என்னும் சமயமும், நம் இந்திய தேசம் முழுதும் பரவியுள்ளது. சாக்தசமயம் இடையிற் சில குறைபாடுகளை அடைந்ததாயினும், அஃது இந்து மதத்தின் ஆற்றல் மிக்க ஒரு பெருங்கூறு என்பதில் ஐயமில்லை. ஒன்றிடுென்று முரண்பட்டு நின்ற பிறகூறுகளின் வேற்றுமைகளைப் போக்கி, அவற்றைச் சாக்தமதம் ஒற்றுமைப் படுத்தி வைத்துள்ளது.

சக்தியைச் சிவபிரானுக்கு மனைவி, திருமாலுக்குத் தங்கை, கணபதி முருகனுக்குத் தாய் என்பதனால், பௌராணிக ஒற்றுமை ஏற்படுகின்றது. மேலும் சாக்தேய மதத்தினரின் அவிகார பரிணாமவாதம், தார்க்கிகர்களின் ஆரம்ப வாதம், சாங்கியர்களின் பரிணாம வாதம், வேதாந்திகளின் விவர்த்த வாதம் ஆகியவற்றின் வேற்றுமைகளைப் போக்கி, ஒருமைப்பாடு உடையதாகச் செய்கின்றது. கபில முனிவரின் சாங்கியம், பதஞ்சலி முனிவரின் யோகம் என்னும் இரு

N 69.12.2

127



பெருந்தரிசனங்களையும் ஒருங்கே இணைத்துத் தழுவிக்கொண்டுள்ளது, சாக்தமதம். கபிலரின் நிரீசுவர சாங்கியம் இதனால் தூய்மையுற்று, இறையுண்மையை உடன்படும் ஈசுவர சாங்கியம் ஆக மாறிநின்றது.

சக்தி வழிபாடு நாட்டிற் பரவியிருக்கும் பான்மையை, நமது கிராமப் புறங்களிற் பெரிதும் காணலாம். ஒவ்வொரு கிராமத்திலும் வெவ்வேறு பெயரிலும் வடிவிலும் சக்தி வழிபாடு நடைபெறுகின்றது திருவொற்றியூர் வட்டப் பாறையம்மன், மாமல்ல புரத்துக் கருக்கினில் அமர்ந்தாள், பெரியபாளையத் தம்மன், திருமுல்லை வாயிற் பச்சையம்மன், இரேணுகா புரம் படை வீட்டம்மன், தில்லை மாகாளியம்மை, தஞ்சாவூர் மாரியம்மன், சமயபுரம் மகாமாயியம்மன், கோயம் புத்தூர்க் கோனியம்மன். பாரியூர்க் கொண்டத்துக்காளி, நாட்டரசன் கோட்டைக் கண்ணாத்தாள், காரைக்குடிக் கொப்புடையம்மன், திருநெல் வேலி உச்சயினி மாகாளி, திருவாரூர் இரேணுகையம்மன் முதலிய பல தேவதைகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் ஆங்காங்கே வழிபடப் பெறுகின்றன.

மகாராஷ்டிரத்தில் துளஜாபவானியும், காஷ்மீரத்தில் க்ஷீரபவானியும், குஜராத்தில் அம்பாஜியும், உத்தரப் பிரதேசத்தில் விந்தியாவாசினியும், வங்காளத்தில் காளியும், அசாமில் காமரூபியும், மைசூரில் சாமுண்டியும், கேரளத்தில் பகவதியும், காஞ்சியில் காமாட்சியும், மதுரையில் மீனாட்சியும், காசியில் விசாலாட்சியும், தமிழகத்தின் தென்கோடியில் கன்னியாகுமரியும் சிறப்பாக வழிபடப் பெற்றுத் திகழ்ந்துவருதல், அம்மை வழிபாட்டின் அருமை பெருமைகளைப் புலப்படுத்துவதாகும். இந்தியநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அம்மையின் அருட்டலங்கள் பல அமைந்திருக்கின்றன. அவற்றைச் சக்திபீடங்கள் என்பர். தந்திர சூடாமணி, குப்ஜிகா தந்திரம், ஞானார்ணவ தந்திரம், தந்திரசாரம், மத்ஸ்யபுராணம், ஸ்காந்த புராணம், பத்ம புராணம், தேவிபாகவதம் முதலியனவற்றில் சக்தி பீடங்களின் பெயரும் எண்ணிக்கையும் சிறு சிறு வேறுபாடுகளுடன் கூறப்படுகின்றன. சக்திபீடங்கள் மொத்தம் 64 என்பர். அவைகள் இந்தியநாடு முழுவதும் பல்வேறு பாகங்களிலும் பரவலாக அமைந்திருத்தல், மிகப்பழங்கால முதலே நிலவி வந்த இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டையும், அம்மை வழிபாடு ஆகிய சக்தி வணக்கத்தின் செல்வாக்கினையும் வலியுறுத்தும் சான்றாகும் என்பர், இராதாகுமுத முக்கர்ஜி என்னும் சரித்திரப் பேராசிரியர்.

இந்தியாவிற் காஷ்மீரம் வங்காளம் அசாம் திபெத்து முதலிய மாநிலங்களில் சக்தி வணக்கம் அல்லது அம்மை வழிபாடு மிகவும் பிரசித்தமாக இன்றும் நிலவி வருகின்றது.

தத்தாத்திரேயர் பரசுராமர் அகத்தியர் துர்வாசர் திருமூலர் காளிதாசர் சங்கரர் மூககவி அபிராமிபட்டர் குமரகுருபரர் சிவஞான முனிவர் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் இராம கிருஷ்ண பரமஹம்சர் அரவிந்தர் ஆகிய சான்றோர்கள் பற்பலரும், அம்மையை வழிபட்டு அருள் பெற்றவரேயாவர்.

கல்கத்தாவில் உயர் மன்ற நீதிபதியாக விளங்கியிருந்தவரும், ஆர்தர் அவலான் என்னும் புனைபெயர் கொண்டவரும் ஆகிய சர்ஜான் உட்ராப் என்பவர், அம்மையின் வழிபாட்டை விவரிக்கும் சாக்தசமய இலக்கியங்களையெல்லாம் ஆராய்ந்து அவற்றின் நுட்பங்களை விளக்கியதுடன், சாக்தசமயம் பற்றி நிலவியிருந்த தவறான கருத்துக்களையும் மறுத்துரைத்துப் போக்கினார்.

அம்மையை ஆற்றலும் ஆவேசமும் மிக்கவளாக மறக்கருணை நெறியில், புரட்சி நிலையில் (Revolutionary way) வழிபடுவது வடநாட்டவர் மரபு. அம்மையை அழகும் அருளும் மிக்கவளாய் அறக்கருணை நெறியில் கிளர்ச்சி நிலையில் (Evolutionary way) வழிபடுவது தென்னாட்டவர் பண்பு. இத்தென்னாட்டு முறையினையே ஸ்ரீ வித்யை என்பர். மந்திரம் தந்திரம் எந்திரம் என்னும் மூன்றும், ஸ்ரீவித்யையின் மூன்று கோணங்களாக விளங்குகின்றன. ஸ்ரீ வித்யையில் தேர்ச்சிபெற்ற ஒருவன், உள்ளத்தால் சாக்தனாகவும், நோக்கத்தால் சைவனாகவும், அனுட்டானத்தால் வைணவனாகவும் இருத்தல் இயலும். இங்ஙனம் அம்மை வழிபாடு பலவகைகளிலும் சிறந்து நம்மனோர்க்கு இம்மையிலும் மறுமையிலும் நன்மை விளைவிக்கும் நலம் சார்ந்ததாகத் திகழ்கின்றது.

—ஆசிரியர்

# சக்தியும் சிவமும்

உலகங்களையெல்லாம் படைத்துக் காத்து ஒடுக்கியருளும் ஒப்புயர்வற்ற பரம் பொருளைச் சிவம் என்றும், அதன் ஆற்றலைச் சக்தி என்றும் சான்றோர்கள் வழங்கினர். சிவம் வேறு, சக்தி வேறு அன்று. சிவம் அமைதி நிலை (Static) உடையது. சக்தி ஆற்றல் நிலை (Dynamic) வாய்ந்தது. இறைவனின் அருட்பண்பே சக்தி எனக் குறிப்பிடப் பெறுகின்றது. பண்பாவது பொருட்குப் பின்தோன்றுது உடன் நிகழும் தன்மை. பொருளினின்று அதன் பண்பைத் தனியே பிரித்தல் இயலாது என்பது தருக்க நூல் கூறும் உண்மை. ஆதலின் சக்தியும் சிவமும், தம்முள் ஒன்றினென்று பிரிவில்லன வாகத் திகழும். சிவம் இன்றிச் சக்தியில்லை. சக்தியின்றிச் சிவம் இல்லை.

உலகப் பொருள்கள் அனைத்தும் சக்தி சிவ மேயாகும். சக்தியும் சிவமும் உலகப் பொருள்கள் அனைத்திலும் யாண்டும் பிரிவற விரவி நிற்கின்றன. ''சக்தியும் சிவமும் ஆய தன்மை இவ்வுலகம் எல்லாம்'' என்பர் அருள் நந்திசிவம். பொன்னும் அதன் நிறமும், சூரியனும் அதன் ஒளியும், மரமும் அதன் வயிரமும் போல, சக்தி சிவத்தின்பால் பிரிவறத் தாதான்மியமாய் இயைந்து நிற்கும். சக்தியின் இயக்கத்தினலேயே இவ்வுலகங்களெல்லாம் தொழிற்படுகின்றன. அதனலேயே ''அவளால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்'' எனச் சிவஞான சித்தியார் தெளிவிக்கின்றது.

சிவம் சக்தியோடு கூடிய வழியே, எல்லாத் தொழில்களையும் செய்ய வல்லதாகின்றது. சக்தியோடு கூடாதபோது சிவம் எதனையும் செய்வதில்லை. 'உனக்கு இதனைச் செய்யச் சக்தி இல்லாவிட்டால், சிவனே என்று சும்மா கிட' என்பது உலக வழக்கு. ''சிவம் எனும் பொருளும் ஆதிசக்தியொடு சேரின் எத் தொழிலும் வல்லதாம்; இவள் பிரிந்திடின் இயங்குதற்கும் அரிது அரிது என மறை இரைக்கும்'' என்பது சௌந்தரியலகரிச் செய்யுள்.

இவ்வுண்மையினையே, வங்காளப்பகுதியில் வழிபடப் பெறும் காளியின் திருவுருவச் சிலைகள், நமக்கு உணர்த்தி நிற்கின்றன. தமிழ் நாட்டில் நடராசப் பெருமானின் திருவுருவம் முயலகனை மிதித்துக் கொண்டு நிற்பது போலத் திகழ்தலையே நாம் அறிவோம். ஆனல் வங்காளப் பகுதியில் சிவபிரானை மிதித்துக் கொண்டு நிற்பது போலக் காளியின் திருவுருவங்கள் காணப்படும். நமக்கு அஃது, ஒரு சிறிது பொருந்தாதது போலத் தோன்றினும், அதுவும் ஒரு நுட்பத்தினை யுணர்த்துவதாக உள்ளது.

சிவபரம்பொருள், தனக்கென ஒரு செயலும் இன்றி அசைவற்று இயல்பாகத் தன் நிலையில் திகழ்வது என்பதும்; அதனைப் பற்றுக்கோடும் அடிப்படையுமாகக் கொண்டே, அதன் ஆற்றலாகிய சக்தி இயக்கம் பெற்று ஐந்தொழில்களை நிகழ்த்துகின்றது என்பதுமே, அந்நுண்பொருட் கருத்தாகும்.

சிவமானது, தான் இயங்காமல் இருந்து, தனது ஆற்றலாகிய சக்தியை இயங்குவித்து, படைத்தல் காத்தல் ஒடுக்கல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் நிகழ்த்துகின்றது. நாம் நம்முடைய கையினல் பல்வேறு செயல்களைச் செய்தல் போலவே சிவமும், சக்தியின் துணைகொண்டு எல்லாச் செயல்களையும் நிகழச் செய்கின்றது. ''நம் கையினல் நாம் அனைத்தும் செய்தாற் போல், நாடு அனைத்தும் நங்கை (சக்தி) யினற் செய்

தளிக்கும் நாயகன்'' என்னும் திருக்களிற்றுப் படியார் செய்யுள், இதனை இனிது உணர்த்தி நிற்கின்றது. சிவபிரான் கிரியாசத்தியாற் படைத்தலையும், ஞானசத்தியாற் காத்தலையும், இச்சாசத்தியால் ஒடுக்கலையும், ஆதிசத்தியால் மறைத்தலையும், பராசத்தியால் அருளலையும் புரிந்தருள்கின்றார் எனச் சமயஞான நூல்கள் சாற்றுகின்றன.

சிவபரம்பொருள் ஒன்றே, சத்தனும் சத்தியும் ஆக இருதிறப்பட்டு நின்று இங்ஙனம் பல்வேறு தொழில்களை நிகழ்த்தியருளும். இதனை

''சத்தியாய் விந்து சத்தியாய்
மனோன்மணி தான் ஆகி,
ஒத்துறும் மகேசை ஆகி,
உமைதிரு வாணி ஆகி,
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன்
வரும்சத்தி ஒருத்தி ஆகும்;
எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்''

என அருள்நந்திசிவம், தாம் இயற்றியருளிய சிவஞான சித்தியார் செய்யுளில் விளக்கியிருத்தல் கொண்டு தெளியலாம். துர்க்கை காளி விசயை வைஷ்ணவி குமுதை சண்டிகை கிருஷ்ணை மாதவி கன்னிகை மாயை நாராயணி ஈசானை சாரதை அம்பிகை பிராமி மகேசுவரி குமாரி வராகி மகேந்திரி சாமுண்டி எனச் சக்தியின் கூறுகளாக, எத்துணையோ மற்றும் பலப்பல தெய்வத்திருவுருவங்கள் வழிபடப் பெறுவது உண்டு. உருவங்களால் இவை பலவாயினும், பொருளால் இவையனைத்தும் சக்தி என்ற ஒன்றே யாகும்.

சக்தியையும் சிவத்தையும் உலகியல் நிலையில் உருவக முறையில், மனைவியும் கணவனும் போல வைத்து, நூல்கள் கூறும் நுட்பத்தினை யுணரமாட்டாமல், 'கடவுளுக்கும் மனைவி யுண்டா' எனச் சிலர், ஏளனமாக வினா நிகழ்த்துவது உண்டு.

''சிவம் சக்தி தன்னை ஈன்றும்,
சக்திதான் சிவத்தை ஈன்றும்,
உவந்து இருவரும் புணர்ந்திங்கு
உலகுயிர் எல்லாம் ஈன்றும்,
பவன்பிரம சாரி ஆகும்;
பால்மொழி கன்னி ஆகும்;
தவம்தரு ஞானத் தோர்க்கு
இத்தன்மைதான் தெரியும்
அன்றே''

என்பது சிவஞான சித்தியார் செய்யுள்! சக்தியும் சிவமும் மனைவியும் கணவனும் மட்டும் அல்லர். அவர்கள் உலகங்களை எல்லாம் ஈன்றெடுத்த தாயும் தந்தையும் கூட ஆவர்; இங்ஙனம் உலகங்களையும், உலகத்துயிர்களையும் எல்லாம் தாயும் தந்தையுமாகப் பெற்றெடுத்திருப்பினும், சிவபிரான் பிரமசாரியாகவே திகழ்கின்றார்; சக்தி கன்னியாகவே விளங்குகின்றாள். நுண்ணிய இச்சிறந்த உண்மையினையே, மேலைச் சிவஞான சித்தியார் செய்யுள் அழகுற விளக்குகின்றது.

இங்ஙனமே திருமூலர், சக்தி சிவத்திற்குத் 'தாயும் மகளும் நல்தாரமும் ஆகும்' (1154) என்றும்; குமரகுருபரர் மனைவி தாய் தங்கை மகள் ஆவள் (சி. செ. கோவை, 38) என்றும்; மாணிக்கவாசகர் சக்திக்குச் சிவபிரான் கேள்வன் மகன் தகப்பன் தமையன் (பொற்சுண்ணம், 13) என்றும்; சுவையமையவும் நயம்பொலியவும் குறிப்பிட்டிருக்கும் சிறப்பு, சிந்தித்துத் தெளியற்பாலது.

— ஆசிரியர்

# சக்தி பேதங்கள்

## முன்னுரை :

'பொருள் ஒன்றே உள்ளது ; அதனை அறிஞர்கள் பலவாகக் கூறுவர்.' (ஏகம் சத் விப்பிரா பகுதா வதந்தி) என்பது வேதமொழி. அம்முறையில் சக்தி என்பது ஒன்றேயாயினும், அதன் தொழிற்பாட்டால் அது பலவகையாகக் கூறப்படும். 'சத்திதான் பலவோ ? என்னில், தான் ஒன்றே ; அநேகமாக வைத்திடும் காரியத்தால்' என்பது சிவஞான சித்தியார். திருவாசகத்தில் வரும் திருவெம்பாவைப் பாடல்களை அனைவரும் அறிவர். திருவெம்பாவை என்பது மனோன்மணி சர்வபூததமனி பலப்பிரதமனி பலவிகரணி காளி இரவுத்திரி சேட்டை வாமை என்னும் நவசக்திகளின் செயலைக் குறிக்கின்றது என்பர். அதனாலேயே 'சக்தியை வியந்தது' என அதற்கு நுண்பொருள் தலைப்புக் கொடுக்கப் பெற்றிருக்கின்றது. சக்தி ஒன்றே பலவேறு வடிவபேதங்கள் கொண்டு வெவ்வேறு தொழில்களை இயற்றி உயிர்கட்கு நலம்புரியும் என்பது தாற்பரியம். இந் நவசக்திகளின் இயல்கள் செயல்கள் வருமாறு :—

## நவசக்திகள் :

(1) மனோன்மணி, பக்குவம் எய்திய உயிர்களை மலத்தினின்று நீக்கிச் சிவத்துடன் சேர்க்கும். (2) சர்வபூத தமனி, உயிர்களிலெல்லாம் ஒன்றி உடன்கலந்து நின்று, அவற்றின் புண்ணியபாவங்களை அகற்றுவிக்கும். (3) பலப்பிரதமனி, சூரியனிடத்தில் பதிந்து நின்று தீய கிருமிகளை அழித்து, நல்ல பொருள்கள் பெருகி வளர்வதற்கு ஆக்கம் அளிக்கும். (4) பலவிகரணி, சந்திரனிடத்தில் நிலைபெற்று அமுதத்துளிகளைச் சொரிவித்துப் பயிர்பச்சைகளும் உயிர்த்தொகுதிகளும் தழைத்துச் செழித்தோங்க உதவி செய்யும். (5) கலவிகரணி வானத்தில் இருந்து, எல்லாப்பொருள்களையும் ஏற்று நின்று அவைகள் தன்னிற் கலந்து இணைய இடம்தந்து நிற்கும். (6) காளி, காற்றின்கண் கலந்து பிராணமயமாய் விளங்கி, உயிர்களுக்கு நலம் விளைவிக்கும். (7) இரவுத்திரி, நெருப்பின் கண் தங்கி அதற்கு வெப்பம் அளித்து நிற்கும். (8) சேட்டை, நீரில் நிலைபெற்று அதற்குக் குளிர்ச்சியும் சுவையும் உண்டாக்கும். (9) வாமை, மண்ணில் விளங்கி ஐம்பூதங்களின் இயல்புகளும் செயல்களும் நிகழுமாறு செய்யும்.

## சத்த மாதர்கள் :

உலகை இயக்கி ஐந்தொழில்கள் புரிந்து வரும் அருளாற்றலாகிய சக்தியானது, தனக்கென்று ஒரு பெயரும் வடிவமும் இல்லாததாயினும், அன்பர்களின் பொருட்டுப் பலபெயரையும் வடிவங்களையும் கொள்ளும். இம்முறையில் பிராமி மகேசுவரி கௌமாரி வைஷ்ணவி வராகி இந்திராணி சாமுண்டி என்னும் சத்த மாதர்களாகவும் வடிவங்கொண்டு சக்தி ஒன்றே திகழ்வது உண்டு. இவ் எழுவருடைய இயல்களையும் செயல்களையும் இலக்கியங்கள் ஆங்காங்கே சிறப்புறக் குறிக்கும். யானைத்தோலைப் போர்த்தவள் மாகேசுவரி. வானரங்கள் குவித்த மலைகளால் கடலை அடைத்தவள் நாராயணி. கடலின் வயிறு கிழியும்படி வேற்படையை ஏவியவள் கௌமாரி. கற்பக மலரைக் கூந்தலில் அழகுறச் சூடியவள் இந்திராணி. சிங்கத்தை ஊர்தியாகக் கொண்டவள் காளி. வேதங்களால் மிகவும் புகழ்ந்து சிறப்பிக்கப் பெறுபவள் அபிராமி. பிரளயத்தினின்று உலகை மீட்டருளியவள்வராகி எனப் பலவகைகளில் சக்தியின் வடிவ பேதத்தைச் சாத்திரங்கள் புகழ்ந்து கூறும்.

சிலப்பதிகாரம் என்னும் செந்தமிழ்க் காப்பியத்தில் சத்திவழிபாடு பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. கொற்றவை பிடாரி பத்திர

காளி காளி துர்க்கை ஆகிய சக்தியின் வடிவ பேதங்கள், சிலப்பதிகாரத்தின் வழக்குரை காதையில் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வாற்றால், இற்றைக்கு ஏறத்தாழ 1800 ஆண்டுகட்கு முற்பட்ட மிகப் பழங் காலத்திலேயே தமிழ்நாட்டிற் சக்திவழிபாடும், சக்தியின் வடிவபேதங்களும் பரவிப்பெருகியிருந்தமை தெரியலாம். சக்திவழிபாட்டை விளக்கும் சாக்தேய சமயத்தின் தந்திர நூல்களில், சக்தியின் வடிவபேதங்கள் பற்பல கூறப்பெறுகின்றன. அவற்றுட் சிலவற்றைப் பற்றிய தியான சுலோகங்களின் குறிப்புக்களை மட்டும் இங்கு இயன்றவரையில் காண்போம்

(1) **பாலாம்பாள் :** நான்கு திருக்கைகளை உடையவள். அவற்றில் முறையே அக்கமாலை புத்தகம் அபயமுத்திரை வரதமுத்திரை என்பவற்றைக் கொண்டிருப்பவள். நீலோற்பல மலரில் வீற்றிருப்பவள், செந்நிற மேனியினள். ஆகமங்களில் இவளுக்கு 14 வகையான திருவுருவ அமைப்புக்கள் கூறப்பெற்றிருக்கின்றன. இவளது மூலமந்திரம் மூன்று அல்லது ஆறு எழுத்துக்களைக் கொண்டது.

(2) **லலிதாம்பாள் :** சிந்தாமணி என்னும் சிறப்பு மிக்க நவமணித் திரளால் அமைந்த மாளிகையில், பிரம்மா விஷ்ணு உருத்திரன் ஈசுவரன் என்னும் நால்வரையும் நான்கு கால்களாகக்கொண்ட கட்டிலில், காமேசுவரரின் மடியில் வீற்றிருப்பவள் ; பதினாறு வயதினள். பாசம் அங்குசம் பஞ்சபாணம் கரும்புவில் ஏந்தியவள். தலையில் பிறை சூடி இருப்பவள். செந்நிற மேனியள். இவளது மூலமந்திரம் 15 எழுத்துக்களைக் கொண்டது. அது 12 வகைகளில் வெவ்வேறாக அமையும். 16 எழுத்துக்கொண்ட இவளது மூலமந்திரம் ஷோடசி எனவும், 18 எழுத்துக் கொண்டது சௌபாக்ய வித்யை எனவும் வழங்கப்பெறும். அனந்தபைரவம், அயக்கிரீவம், தட்சிணமூர்த்தம் என இவளை வழிபடும் நெறிகள் மூன்று வகைப்படும். இவள் அனைத்துலகுக்கும் பேரரசி நிலையிற் பிறங்குபவள். இராஜமதங்கி, மந்திரிணி ஆகியோர் இவளது அமைச்சர்களாவர். காஞ்சி காமாட்சியம்மையே ஸ்ரீ லலிதாதேவியாகக் கருதப்படுகின்றாள்.

(3) **இராஜராஜேசுவரி :** இவள் லலிதா தேவியைப்போன்றே திருவுருவம் உடையவள். இவளது மூலமந்திரம், 28 எழுத்துக்கள் கொண்ட மகாஷோடசி எனப்படும். ஸ்ரீவித்யையே இப் படிவங்களுக்கெல்லாம் உரிய பொதுவான சாத்திரமாகும். இராஜராஜேசுவரி ஞானத்தின் முழு நிறைவைக் குறிக்கின்றாள். இவள் 40 வயதினள். சித்திரை மாதத்தில் வரும் வசந்த நவராத்திரிவிழா இராஜேசுவரிக்கு மிகவும் சிறப்பானதாகும்.

(4) **நவாட்சரிபாலா :** இத்தேவி, பாலாம்பாளின் வடிவத்தையே கொண்டவள். ஒன்பது எழுத்துக்களைக் கொண்ட மூலமந்திரத்தை உடையவள். அங்கம் உபாங்கம் பிரத்தியங்கம் என்னும் மூன்றனுள், லலிதாதேவியின் அங்கமாகத் திகழ்பவள்.

(5) **அன்னபூரணி :** லலிதாதேவியின் உபாங்கமாகத் திகழ்பவள். வலக்கையில் பொன் அகப்பையும், இடக்கையில் மணிகள் பதித்த பொற்கலசத்தில் பாற்சோறும் ஏந்தி, உயிர்களுக்கெல்லாம் உணவு வழங்கும் தாயாக விளங்குபவள். பொன்நிறம் வாய்ந்தவள். பொற்கலனும் பூமாலைகளும் அணிந்திருப்பவள். காசி க்ஷேத்திரத்தைத் தனக்கே உரிய சிறப்புத் தலமாகக் கொண்டவள்.

(6) **அசுவாரூடாம்பாள் ;** லலிதா தேவியின் பிரத்தியங்கமாகத் திகழ்பவள். சிவந்த மேனியுடன் சிவப்புநிற ஆடைகளும் சிவந்தநிற அணிகலன்களும் தரித்துச் சிவப்புநிறக் குதிரையில் இவர்ந்து வருபவள். ஒளிமுகமும் முக்கண்களும் கொண்டவள். தனது நான்கு கைகளிலும் முறையே பல்லம் (சவுக்கு) என்னும் படையும், சர்ப்பாத முத்திரையும், பகைவரைப் பிணிக்கும் பாசமும், தீயவரை அச்சுறுத்தும் பொற்பிரம்பும் ஏந்தியிருப்பவள்.

(7) **இராஜமதங்கி :** கடம்பமலர் சூடியவள் ; அமிழ்தக்களிப்பில் திளைப்பவள். மடியில் வீணையை வைத்துக் கொண்டு வாசிப்பவள். செந்நிற ஆடை உடுப்பவள். நெற்றியிற் கஸ்தூரி திலகம் அணிந்தவள் பிறைசூடியவள். காதில் சங்கக் குழைதரித்தவள். புன்முறுவல் பூத்த முகத்தவள். கலைகளின் அறிகுறியாகக் கிளியை ஏந்தியிருப்பவள். மரகதமணியின் நிறம் வாய்ந்தவள். இராஜராஜேசுவரியின் அறிவியற் கலையியல் ஆற்றலாக விளங்குபவள். மாசி மாதத்தில் வரும் நவராத்திரி விழா இவளுக்கு உரியது. மதுரை மீனாட்சியம்மையை இராஜமதங்கியாகவே பெரியோர்கள் கருதுவர்.

(8) லகுஷியாமா: மதங்க முனிவரின் மகள். வைரமணிகள் பதித்த வீணையை வாசிப்பவள். அமிழ்தக்களிப்பு உடையவள். இந்திர நீல நிறம் கொண்ட ஒளிமேனியளாய்ப் பேரழகுற்றுத் திகழ்பவள். இராஜமதங்கியின் அங்க தேவதை.

(9) வாக்வாதினி: வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள். பாரதி என்னும் பெயரினள். தன் இருகைகளிலும் எழுதுகோலும் புத்தகமும் ஏந்தியவள். இளம்பிறை சூடியவள். வெண்ணிறம் உடையவள். உலக வாழ்வின் அச்சத்தைப் போக்குபவள். இராஜமதங்கியின் உபாங்க தேவதை. இவளைக் கலைமகளின் கூருகக் கருதுவர்.

(10) நகுளி: இராஜமதங்கியின் பிரத்தியங்கதேவதை. முத்துப் போன்ற முறுவலள். பகைவராகிய நாகங்களின் நாக்கை அறுப்பவள். பக்தர்களுக்குப் பரிந்து உதவி புரிபவள்.

(11) வராகி: லலிதாதேவியின் படைத்தலைவி. தண்டினி எனவும் வழங்கப்படுவாள். ஜம்புகேசுவரம் என்னும் திருவானைக்காவில் உள்ள அகிலாண்டேசுவரி, தண்டினியாகவே கருதப்படுகின்ருள். இவளது இருக்கை தாமரைமலர். கார்கால மேகத்தின் நிறம் கொண்டவள். தன்பால் அடைக்கலம் புகுந்த அடியவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றி அருள்பவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம் வாள் உலக்கை கலப்பை அபயம் வரதம் சங்கு கேடயம் ஆகியனவற்றைக் கொண்டிருப்பவள். ஆஷாடமாதத்தில் வரும் நவராத்திரி விழாவிற்கு உரியவள். இலகுவராகி, சொப்பன வராகி, திரஸ்கரணி ஆகிய மூவரையும் முறையே அங்கம் உபாங்கம் பிரத்தியங்கம் என்னும் தேவதைகளாகக் கொண்டவள்.

(12) புவனேசுவரி: தேவி பாகவதம் என்னும் நூலில், மிகவும் புகழ்ந்து போற்றப் பெறுபவள். உதயசூரியன் போன்ற ஒளி நிறம் உடையவள். திருமுடியில் பிறையும், காதுகளில் தோடு முதலிய அணிகலன்களும் தரித்தவள். தனது நான்கு கைகளிலும் முறையே பாசம் அங்குசம் அபயம் வரதம் என்பவற்றைக் கொண்டவள். சாக்த வழிபாட்டின் தலைமைத் தெய்வம் புவனேசுவரியே ஆவள். ஸ்ரீவித்யையின் பஞ்சதசாட்சரி மந்திரம் இவளுக்கு உரியது. இவளது ஓரெழுத்து மந்திரத்தை உச்சரிப்போர் முற்றுணர்வும் பேரின்பமும் எய்துவர்.

(13) சண்டி: மின்னல் ஒளியுடையவள் சிங்க ஊர்தியினள். பயங்கரத் தோற்றத்தினள். ஒன்பது மாதர்களாற் சூழப்பட்டவள். முக்கண்ணும் பிறை முடியும் உடையவள். சண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக் கைகளிலும் முறையே சக்கரம் கதை வாள் கேடயம் அம்பு வில் பாசம் கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள். இவளது மூலமந்திரம் 9 எழுத்துக்கள் கொண்டது.

(14) துர்க்கை: பராசக்தியின் காவற்படைத்தலைவி. ஆபத்துக் காலத்தில் அடைக்கலம் புகுந்தவர்க்கு அச்சம் போக்கி அருள்புரிபவள். துர்க்கம் என்பது அகழி. அது மதிலைப் பகைவர் அணுகமுடியாமல் செய்வதுபோல, தன்னை வழிபடும் அன்பர்களைத் துன்பங்கள் அணுகாவகையிற் காத்தலால் இவள் துர்க்கை எனப்பெயர் பெற்ருள். அரசர்க்கும் வீரர்க்கும் உரிய வழிபடு தெய்வம். ஐப்பசி மாதத்தில் வரும் நவராத்திரி விழாவில், கௌரி லட்சுமி சரசுவதி ஆகிய மூவரும் சேர்ந்த ஓருருவமாகத் திகழ்பவள் துர்க்கை. அக்னிகலை சூரியகலை சோமகலை என்னும் முக்கூறும் தன்பாற் கொண்டவள். ஆபத்துக் காலத்தில் தேனில் தோய்த்த வெட்சிப் பூவைத் தூவி, துர்க்கசூக்தம் என்னும் மந்திரம் ஓதி அருச்சனை செய்து வழிபட்டால், எல்லா இன்னல்களும் பிணிகளும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஒழியும். இவள் தனது நான்கு கைகளிலும் முறையே சங்கு சக்கரம் வில் அம்பு ஏந்தியிருப்பாள். தலையில் முடியும் பிறையும் சூடி இருப்பாள். சிங்கவாகனமும் பசும்புல்லின் நிறமும் கொண்டவள்; மானும் இவளுக்கு வாகனம் ஆகும்.

(15) மகிஷாசுரமர்த்தினி: இவளைக் கொற்றவை எனவும் கூறுவர். எருமைத்தலையை உடையவனுக இருந்த மகிஷன் என்னும் கொடிய அசுரனை வென்று கொன்றதனுல், இவளுக்கு மகிஷாசுரமர்த்தினி எனப்பெயர் வழங்குவதாயிற்று. தமிழகத்திற் பலகோயில்களிலும் மகிஷாசுரமர்த்தினியின் அழகிய சிற்பங்களைக் காணலாம். மகாபலிபுரம் கங்கை கொண்ட சோழபுரம் நாமக்கல் முதலிய இடங்களில், மகிஷாசுரமர்த்தினியின் அழகிய அற்புத

சிற்பத் திருவுருவங்கள் அமைந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில், இளங்கோ வடிகள் மகிஷாசுரமர்த்தனியின் திருவுருவத் தினைச் சிறந்ததொரு சொல்லோவியமாக வரைந்து காட்டியுள்ளார்.

அவள் யானைத்தோல் போர்த்துப் புலியின் உரியை உடுத்துள்ளாள். கானத்து எருமைக் கருந்தலைமேல் நிற்கின்றாள் வானோர்கள் வணங்க மறைமேல் மறையாகி, ஞானக்கொழுந் தாய் விளங்குகின்றாள். வளையணிந்த கைகளில் வாளேந்தி இருக்கின்றாள். மான் ஊர்தியில் ஏறி, மகிஷனை அழித்தாள். அரி அரன் அயன் என்னும் மூவரின் இதயமலர்களில் சோதி விளக்காகச் சுடர்வீசி வயங்குகின்றாள். அவளது தாமரைபோன்ற கைகளில் சங்கும் சக்கரமும் தவழ்கின்றன. சிவந்த கண்களை உடைய சிங்கத்தின்மீது இவர்ந்து வருகின்றாள். சிவபிரானின் திருமேனியின் ஒரு பகுதியில் உறைகின்ற அவளை, வேதங்களெல்லாம் தொழுதேத்திப் பணிகின்றன.

## முடிவுரை :

இத்தகைய வெவ்வேறான பற்பல திருவுருவங்களைக் கொண்டு திகழும் அருளாற்றலாகிய சக்தி என்னும் அம்மையின் அரியபெரிய சிறப்புக்களை உணர்ந்து, நாம் அனைவரும் அவளை அன்புடன் துதித்து வழிபட்டு உய்ய முயலுவோமாக.

— ஆசிரியர்.

---

# செய்திச் சுருக்கம்

**ஆவணிப் பெருவிழா :** திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவத்தானத்தின் ஆவணி மாதப் பெருவிழாவில், 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள், M. A., M.O.L., அவர்கள் 'செந்திலாண்டவன்' என்னும் பொருள் பற்றிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினார்கள், நிர்வாக அதிகாரி திரு. கே. சிதம்பரம், B.A., அவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் வழங்கினார்கள். (11—9—1969)

**மாதாந்தர வழிபாடு :** சென்னைத் தியாகராயநகர்த் தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையத்தின் மாதாந்தர வழிபாட்டுக் கூட்டம், நங்கை நல்லூர் ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில், கணேஷ் மண்டலியின் சார்பில், வித்துவான் ஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது திரு. சீனிவாச ஐயங்கார் அவர்கள் வரவேற்புரை கூறினார். 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., வித்துவான் திரு. இரா. செல்வகணபதி, வித்துவான் திருமதி மீனாட்சிசுந்தரசிவை ஆகியோர், சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நன்றியுரை நவில, இறை வணக்கத்துடன் விழா இனிது நிறைவேறியது. (28—9—1969)

# அறநிலையத் துறையின் அரும்பணிகள்

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா அவர்கள், B. A.,

அறநிலைய அமைச்சர், தமிழ்நாடு அரசு

முன்னுரை :

தமிழ்நாடு, கோயில்களுக்கு மிகவும் புகழ் பெற்றது. தமிழ் நாட்டிற்போல மிக்க பழமையும், பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் வாய்ந்த கோயில்கள் பலவற்றை வேறு எங்கணும் காண்டல் அரிது. ஆழ்வார்களும் நாயன்மார்களும், துதித்துப் பாடிப் போற்றிய சிறந்த கோயில்கள் பற்பல, இற்றைக்கு ஏறத்தாழ 1500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, நம் தமிழ் நாட்டில் மிக்க சிறப்புடன் விளங்கி வருகின்றன. பல்லவர், சோழர், பாண்டியர், விசயநகர அரசர், நாயக்க மன்னர் என்பவர்களால் அமைக்கப் பெற்ற கோயில்களும், தமிழ்நாட்டிற்குப் பெருஞ் சிறப்பையும் புகழையும் அளித்து வருகின்றன.

இக்கோயில்களையும், இவற்றைச் சார்ந்த பல்வேறு அறக்கட்டளைகளையும், தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை, கண்ணும் கருத்துமாகப் போற்றிப் புரந்து வருகின்றது. இச்செயலில், நமது தமிழ்நாடு அரசு, ஏனைய மாநில அரசுகளுக்கெல்லாம் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து வருதல், குறிப்பிடத் தக்கது.

## குடமுழுக்கு விழாக்கள் :

நமது தமிழ்நாட்டு அறநிலைய ஆட்சித் துறையின் கீழ், 9347 கோயில்களும், 787 அறக்கட்டளைகளும், 105 திருமடங்களும் ஆக, மொத்தம் 10239 சமய நிறுவனங்கள் இருந்து வருகின்றன.

அறநிலையத்துறை ஆற்றிவரும் சிறந்த பணிகளினால், அண்மைக் காலத்தில் நூற்றுக்கணக்கான கோயில்கள் பழுதுபார்த்தும், புதுப்பித்தும், திருப்பணிகள் பல செய்யப் பெற்றுள்ளன. நூற்றுக்கணக்கான கோயில்களில், குடமுழுக்கு விழாக்கள், சிறந்த முறையில் நிகழ்த்தப் பெற்றிருக்கின்றன. 1—1—1968 முதல் இதுவரையில் மட்டும், திருத்தணி, வைத்தீசுவரன் கோயில், குமாரவயலூர் முதலிய 24 கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள், சிறப்புற நடைபெற்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## அரசு உதவித்தொகை :

1—1—1968 முதல் 31—3—1969 வரையில் மட்டும், நம் தமிழ்நாடு அரசு பல்வேறு மாவட்டங்களில் உள்ள 60 கோயில்களுக்கு, 4 லட்சம் ரூபாய் உதவித்தொகை வழங்கியுள்ளது. 1959—ஆம் ஆண்டின் அறநிலையச் சட்டம், 66—ஆம் பிரிவின் கீழ், வருவாய் மிக்க கோயில்களில் இருந்து வருவாய் இல்லாத கோயில்களுக்கு நிதியுதவும் திட்டத்தின்படி, 509 கோயில்கள் நன்மையடைந்துள்ளன. இதன் மூலம் அக்கோயில்களில் இயன்ற அளவு பூசை முதலியன நடைபெறுவதற்கு வழிவகைகள் செய்யப் பெற்றுள்ளன.

## ஆக்கப் பணிகள் :

அறநிலையத் துறையின் கண்காணிப்பிலும் பராமரிப்பிலும், கோயில்களின் வருவாய் சமீப ஆண்டுகளில் கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. அண்மையில் ஓராண்டில் 122 கோயில்களின் வருவாய், பாராட்டத் தக்க வகையில் மிகுதிப் படுத்தப் பட்டுள்ளது. கடந்த ஓர் ஆண்டிற்குள் சுமார் 266 சமய நிறுவனங்

---

தமிழ்நாடு அரசின் அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B. A. அவர்கள், சென்னை வானொலியில் 20—10—69 அன்று நிகழ்த்திய சிறப்புரை இங்கு வெளியிடப்பெறுகின்றது. —ஆசிரியர்

கள், அறநிலையத்துறைப் பாதுகாப்பின் கீழ்ப் புதியதாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன.

கோயில்களில் துப்புரவும், தூய்மையும், புனிதத் தன்மையும் நிலவுவதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் அவ்வவ் வட்டாரங்களில் உள்ள கோயில்களில், தூய்மையும் துப்புரவும் போற்றி வரும் கோயில்களை ஆராய்ந்து அவற்றுள் தலைசிறந்து நிற்கும் கோயிலுக்கு வெள்ளிச் சுழற்கோப்பைப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2 ஆண்டில் மட்டும் கோயில்களில் சுண்ணம் தீட்டப் பெற்றவை 56 ; வௌவால் தொல்லை ஒழிக்கப் பெற்றவை 133 ; செடிகொடிகள் களையப் பெற்றவை 132 ; பழுதுபார்த்துப் புதுப்பிக்கப் பெற்றவை 144 ; பாசி நீக்கித் துப்புரவு செய்யப் பெற்ற திருக்குளங்கள் 51. இவற்றினாலெல்லாம் கோயில்களில் நாளுக்கு நாள் வழிபட வருவோர் தொகை பெருகி வருகின்றது. திருமயிலை, வடபழனி, திருப்போரூர், திருத்தணி, வைத்தீசுவரன், கோயில், பழநி, திருச்செந்தூர், இராமேசுவரம் முதலிய பல கோயில்கள், இவ்வுண்மைக்குச் சான்று பகரும.

கடந்த 2 ஆண்டில் மட்டும் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள கோயில்களில், மொத்தம் 106 அறக்கட்டளைகள் புதியனவாக, அன்பர்கள் பலரால் ஏற்படுத்தப்பட்டிருத்தல், குறிப்பிடத் தக்கது. இங்ஙனமே வருவாயின் அளவு மிகுதிப்பட்டு, 51 கோயில்கள் அறநிலையப் பட்டியலிற் புதியனவாகக் கொண்டு வரப் பெற்றுள்ளன.

## வழிபடுவோர்க்கு வசதிகள் :

பக்தர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் வசதிகள் செய்து தரும் முறையில், ஒளி விளக்குகள் அமைத்தல், குடி தண்ணீர் வசதி செய்தல், வழிபாட்டிற்குரிய திருநீறு குங்குமம் சந்தனம் பன்னீர் பஞ்சாமிர்தம் முதலியன, தூயனவாகவும் நியாயமான விலைக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்தல் ஆகியவற்றில், அறநிலையத் துறை பெரும்பணி புரிந்துள்ளது.

பெருகி வரும் யாத்திரிகர்களுக்குப் பயன்படுவதற்காக, திருச்செந்தூர், பழநி, திருக்குற்றாலம், திருத்தணி, சுவாமிமலை, வைத்தீசுவரன்கோயில் என்னும் இடங்களில் முன்பே அமைந்திருப்பது போல, கடந்த ஓர் ஆண்டிற்குள் சாத்தூர் பரமக்குடி, உத்தரகோசமங்கை, காளையார் கோயில், திரு வாடானை, குமாரவயலூர் என்னும் எட்டு இடங்களில் ஓய்வு விடுதிகள் (Rest houses) கட்டப்பட்டுள்ளன அண்மையில் (4—7—1969 அன்று) இராமேசுவரத்தில் யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு, ரூபாய் 1,90,000/-செலவில் "விவேகானந்தர் இல்லம்" என்னும் விடுதி ஒன்றும் கட்டி முடிந்து திறக்கப் பட்டிருக்கின்றது.

## சித்த மருத்துவ நிலையங்கள் :

கோயில்களும் சமய நிறுவனங்களும், சமுதாய வாழ்விற் பெரிதும் பங்கு கொண்டு, பொது மக்களுக்குப் நன்மை விளைவித்து வருதல் வேண்டும் என்னும் உயரிய குறிக்கோளுடன், பல சிறந்த ஏற்பாடுகள், அறநிலையத் துறையால் பெரிதும் செய்யப்பட்டு வருகின்றன.

பொது மக்களுக்குப் பெரிதும் பயன்படும் பொருட்டும், தமிழ்நாட்டுக்கேயுரிய சித்த மருத்துவ முறையை ஆதரித்து வளர்க்கும் பொருட்டும், திருப்புகலூர், திருக்குற்றாலம், திருச்செந்தூர், திருநெல்வேலி, சுவாமிமலை, வைத்தீசுவரன் கோயில், சமயபுரம், பழநி, பைம்பொழில் முதலிய இடங்களில் சித்த மருத்துவ இல்லங்கள் தொடங்கப் பெற்று நன்கினிது நடைபெற்று வருகின்றன.

## அனாதை இல்லம் :

"திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை" என்னும் தமிழ்ப் பழமொழியின் பொருளை விளக்கி மெய்ப்பித்து உணர்த்தும் வகையில், திக்கற்ற ஏழைச் சிறுவர்களைப் பேணிப் புரந்து, கல்வியளித்து நல்ல முறையில் வளர்த்து, வாழவைக்கும் சிறந்த நோக்கத்துடன், அறநிலையத்துறையின் ஆதரவில், கோயில்களின் சார்பில், திருத்தணி, சிக்கல், நாச்சியார்கோயில், வைத்தீசுவரன் கோயில், கல்லுப்பட்டி, பழநி, திருநெல்வேலி, திருச்செந்தூர், சென்னை ஆகிய இடங்கள் பலவற்றில் "திக்கற்றோர் இல்லம்" (Orphanages) நன்கினிது நடத்தப் பெற்று வருகின்றது. பல கோயில்களில் இளம் பள்ளிக் குழந்தைகளுக்குக் காலை மாலைகளில் கடவுளுக்கு அபிடேகம் செய்யப்பெற்ற பால் விநியோகமும், மதிய

உணவளிப்பும், மிகவும் நல்ல முறையில் சிறப்புற நடந்து வருகின்றன.

### தேவார பாடசாலைகள் :

இளஞ்சிறுவர்களுக்கு ஆழ்வார்களும் நாயன்மார்களும், அருளிச் செய்துள்ள தெய்வத் தீந்தமிழ்ப் பாடல்களை, இளமையிலேயே இசையுடன் கற்பித்து, அவர்களைச் சமயவுணர்வும் ஒழுக்கமும் உடையவர்களாய் வாழச் செய்வதற்குரிய வகையில், திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடவூர், பழநி, கோயம்புத்தூர், திருவாரூர் திருக்களர், திருமயிலை ஆகிய கோயில்களில் தேவார பாடசாலைகளும்; கும்பகோணம் சாரங்கபாணி கோயில், மாயூரம் விளநகர் வரதராசப் பெருமாள் கோயில், ஆகியவற்றில் திவ்வியப் பிரபந்த பாடசாலைகளும், தொடங்கி நடத்தப் பட்டு வருகின்றன. இங்ஙனமே திருமயிலை, சிக்கல், காஞ்சிபுரம், சிதம்பரம், தருமபுரம், அள்ளூர் முதலிய இடங்களில் வேதசிவாகம பாடசாலைகள் உள்ளன.

### திருமண மண்டபம் :

பொதுமக்களின் நலன் கருதியும், சமய சமுதாயத் தொண்டுகளுள் ஒன்றாகவும், அனைவருக்கும் பயன்படும் பொருட்டும், பல கோயில்களில் பெருஞ் செலவில், எல்லா நவீன வசதிகளுடனும் கூடிய, திருமண மண்டபங்கள், கட்டப்பெற்று, மிகவும் குறைந்த வாடகைக்கு விடப் பெறுகின்றன. அண்மையில் 19-6-1969 அன்று, திருவாரூரில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட "திருவாரூரான் திருமண மண்டபம்" ஒன்று, நமது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால், திறந்து வைக்கப் பெற்றுள்ள செய்தி, இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடத் தக்கது. பல கோயில்களில் திருமணப் பதிவாளர்கள் இருந்து வருவதும் குறிப்பிடற்பாலது.

### கல்லூரிகள் :

"ஞானம் உண்டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே" எனச் செந்தமிழ் நாட்டுச் சிறந்த பெருஞ் சித்தர் ஆகிய திருமூலதேவர் அருளிச் செய்தபடி, நாட்டு மக்களைக் கல்வியறிவுடையவர்களாக ஆகும்படி செய்தல், சிறந்த சமயப் பெருந்தொண்டு ஆதலின், கோயில்களின் சார்பில், பழநி, திருக்குற்றாலம், பூம்புகார், கன்னியாகுமரி, ஆகிய இடங்களில் கல்லூரிகளும்; திருநெல்வேலி, திருவெண்காடு, மதுரை, இராமேசுவரம், திருமலை, கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் உயர்நிலைப் பள்ளிகளும் நடத்தப் பெற்று வருகின்றன. இவற்றுள், பெண்களுக்காக ஒரு கலைக்கல்லூரியும், 6 உயர்நிலைப் பள்ளிகளும் அமைந்திருத்தல் மகிழ்ச்சிக்குரியது.

இத்தகைய கல்வி வளர்ச்சிப் பணிகளுக்கு அறநிலையத்துறையின் பொதுநலநிதியில் இருந்து உதவியளிப்பதற்கு வழிவகைகள்செய்து, அதற்கு ஏற்றபடி அறநிலையச் சட்டம் (97) அண்மையில் திருத்தப் பெற்றிருப்பதையும், இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடலாம்.

### 'திருக்கோயில் இதழ்' :

சமய உணர்வையும், பக்தியையும், சமய தத்துவ நூற்கருத்துக்களையும். பொதுமக்களிடையே பரப்பும் பொருட்டுத் "திருக்கோயில்" என்னும் திங்கள் இதழ் ஒன்றும், கடந்த 11 ஆண்டுகளாக மிகவும் சிறந்த முறையில் நடத்தப்பெறுகின்றது. சமயத்துறையில் தலைசிறந்த பேரறிஞர்கள் பலர், அதன்கண், அரிய சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை எழுதி வருகின்றனர். தமிழகத்தில் மட்டுமின்றி இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் உள்ள சமயப் பற்று வாய்ந்த தமிழன்பர்கள் பலர் இதன் உறுப்பினராகிப் பயன்பெறுகின்றனர்.

### தெய்விகப் பேரவை :

இந்துசமய மக்கள் தங்கள் சமயத்தின் பெருமையை உணர்ந்து கொள்ளவும், தங்களுக்குரிய சமய நம்பிக்கையை வலிமைப்படுத்திக் கொள்ளவும், தங்களது வாழ்க்கையை இந்து தருமத்திற்கும் ஒழுக்கப் பண்பாடுகளுக்கும் ஏற்ப நடத்தத் துணைசெய்யவும், அறநிலையத் துறையின் சார்பில், தென்னாட்டின், திருமடங்களையும் திருக்கோயில்களையும் இணைத்துத் "தமிழ் நாடு தெய்விகப் பேரவை" என்னும் சமய நிறுவனம், அண்மையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களும், திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மதுரை, குன்றக்குடி முதலிய ஆதீனங்களின் தலைவர்கள் பலரும், அதன் உறுப்பினராக உள்ளனர். அறநிலைய ஆணையர் அதன் துணைத் தலைவராக இருக்கின்றார்.

இந்துசமயப் பிரிவினரிடையே கருத்துவேறுபாடுகள் உள்ளவற்றை விலக்கி, அவர்களி

டையே பொதுவானவைகளை மட்டும் வலியுறுத்தி, இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் நம்பிக்கையுடைய, இந்துக்கள் அனைவருக்கும் பயன் விளைவிக்கும் வகையில், பேரவையின் பணிகள் விரிவாக்கப்பட்டு வருகின்றன.

**சமய வளர்ச்சி :**

சமய நிறுவனங்களும், கோயில்களும், அறக்கட்டளைகளும், எந்தெந்த நோக்கத்திற்காக ஏற்பட்டனவோ, அந்தந்த நோக்கங்களுக்குரிய செயல்களையும் கடமைகளையும், அவைகள் சரிவரப் புரிந்து வருவதற்கு, எல்லா வகையாலும் தமிழ்நாடு அரசு, ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்றது. அறநிலையத்துறையின் சார்பில், சமய வளர்ச்சி குறித்துப் பலதிறப் பணிகள் நடைபெறுகின்றன. சமயப் பிரசாரகர்கள் பலர் (36), கோயில்களில், பணியாற்றி வருகின்றனர். போதிய வருவாய் உள்ள கோயில்களில், திருமுறையும் திவ்வியப் பிரபந்தமும் பாடுவதற்கு 58 ஓதுவார்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். காலை மாலை வேளைகளில், ஏற்றபடி பக்திப் பாடல்கள் 367 கோயில்களில் ஒலிபரப்பப்படுகின்றன. விழாக்காலங்களிலும், சிறப்பு நாட்களிலும், ஏறத்தாழ 409 கோயில்களில், சமயச் சொற்பொழிவுகள் ஆற்றப்படுகின்றன. மார்கழி மாதத்தில் நூற்றுக்கணக்கான கோயில்களில், திருவெம்பாவை திருப்பாவை மாநாடுகள் சிறப்புற நடத்தப் பெறுகின்றன.

**கோயிற் பாதுகாப்பு :**

இத்தகைய செயல்கள் பலவற்றிற்கும் இன்றைய தமிழக அரசு, பெரிதும் ஆதரவு அளித்து வருவதுடன், தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், ஸ்ரீ ரங்கம், இராமேசுவரம், முதலிய பல பழம்பெரும் கோயில்களை எல்லாம், போற்றிப் பாதுகாத்துத்திருப்பணி செய்வதற்கு விழைந்து பெரிதும் முயன்று வருகின்றது. இத்துறையில் நமது முதலமைச்சர் கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ஆழ்ந்த பற்றும், அளவிலா ஆர்வமும் கொண்டு முயன்று வருகின்றார்கள்.

**முடிவுரை :**

தமிழ்நாடு அரசு மட்டுமேயன்றி, தமிழகப் பொதுமக்களும், அறநிலையத்துறை ஆற்றிவரும் அரிய பல சிறந்த பணிகளைப் பெரிதும் அறிந்து போற்றிப் பாராட்டிப் பயன்கொள்வர் என்பதில் ஐயமில்லை. —(நன்றி : சென்னை வானொலி).

## மதிப்புரை

சென்னைக்கு அருகே உள்ள திருவேற்காடு என்னும் தலம் மிகவும் புகழ்வாய்ந்தது. சைவ சமயத்தினர் போற்றும் அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராகிய மூர்க்கநாயனுர் என்பவர் தோன்றியருளிய தலம் இதுவேயாகும். இத்தலத்தைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத் திருப்பதிகத்தில் பெரிதும் சிறப்பித்து ஓதியுள்ளார். இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் பெயர் வேதபுரீசர். அம்பிகை வேற்கண்ணம்மை கயிலையில் நிகழ்ந்த தமது திருமணக்கோலத்தை அகத்திய முனிவருக்கு இங்கு அவர்கள் மீட்டும் காட்டியருளினர் என்பது வரலாறு. இங்குள்ள பாலசுப்பிரமணியப் பெருமான் வேற்கண்ணியம்மையிடத்தில் வேல்பெற்று, பாலி நதிக்கரையில் வேலாயுதத் தீர்த்தம் அமைத்தருளிய புண்ணிய தலம் இது. இத்தலத்தைச் சேக்கிழார் தமது பெரிய புராணத்திலும், அருணகிரிநாதர் தமது திருப்புகழிலும் புகழ்ந்து போற்றியுள்ளனர்.

இத்தகைய பலசிறப்புக்கள் வாய்ந்த திருவேற்காட்டில், சமீப காலத்தில் மிகவும் புகழோங்கி, சிறந்த திருக்கோயில் கொண்டு ஸ்ரீ தேவி கருமாரியம்மை மிகுந்த வரப்பிரசாதியாய் எழுந்தருளி விளங்கித் திருவருள் புரிந்து வருகின்ருள் என்பது, அன்பர்கள் அனைவரும் அறிந்த செய்தி. உலக உயிர்களுக்கெல்லாம் ஒப்புயர்வற்ற அருட்பெரும் தாயாக விளங்கிவரும் அம்பிகை, கருமாரியாகவும் விளங்கி அருள் விளையாடல் புரிந்து வருகின்ருள். ஸ்ரீதேவி கருமாரியம்மையின் திருவருட் சிறப்பை, அவளை வழிபட்டுப் பேறுகள் பலபெற்ற அன்பர்கள் பெரிதும் நன்குணர்வர். தேவியின் அருமை பெருமைகளைப் பலரும் அறிந்து பயன் எய்தச் செய்யும் பெருநோக்கம் கொண்டு, அருட்கவி ஸ்ரீதேவி கருமாரிதாசர் அவர்கள், தமது குருநாதராகிய ஸ்ரீமத் சுவாமி இராமதாசர் அவர்களின் ஆசியால் இப் புராணத்தினைப் பாடியுள்ளார். இந்நூல் 96 தத்துவங்களைக் குறிக்கும் முறையில் 96 படலங்களாக அமைந்துள்ளது. அம்பிகையின் வடிவபேதங்களாகிய சப்தமாதர்களைக் குறிக்கும் வகையில் 7000 பாடல்களால் இயன்றுள்ளது. ஓதுபவர்களின் எழுவகைப் பிறவிகளையும் ஒழிக்கும் என்னும் உண்மையை உணர்த்துதற்காக, இந்நூல் முழுதும் எழுசீர் விருத்தப் பாக்களாலேயே இயற்றப் பெற்றிருக்கின்றது. பராசக்தியின் அருட்பண்பையும், திருநீற்றின் புனிதச்சிறப்பையும், மாரியம்மையின் தெய்வத் தன்மையையும், அவளுக்குரிய வேதாகம விதிக்கு இயைந்த நித்தியநியம பூசை நெறிகளையும் பற்றியெல்லாம், அறிந்து கொள்ள விழையும் அன்பர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும்.

தேவியின் பக்தர்கள் சிறப்பாக வாங்கிப் படித்து, பயன்பெற வேண்டிய நல்ல இனிய தெய்விக நூல். திருத்தமான நல்ல பதிப்பு. விலை—இரண்டு தொகுதிகளும் சேர்ந்து ரூபா முப்பத்தைந்து. கிடைக்குமிடம். சூப்பர் பவர் பப்ளிகேஷன்ஸ், 21 சுங்குராமச் செட்டித் தெரு, சென்னை—1

—ஆசிரியர்

# அபிராமி அந்தாதி

(மூலமும் உரையும்)

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள், பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்புஇருக்க,
இழவுற்று நின்றநெஞ்சே! இரங்கேல் உனக்கு என்குறையே?

(பொழிப்புரை) துன்பம் எய்தி வருந்திநிற்கின்ற நெஞ்சமே! தனது அழகிற்கு வேறு ஒருவரும் ஒப்பு ஆகாத கொடிபோன்றவளும், அரிய வேதங்கள் பழகிப் பணிவதனல் கன்றிச் சிவந்த தாமரைபோன்ற திருவடிகளை உடையவளும், குளிர்ச்சியும் பெருமையும் உடைய பிறைச்சந்திரனைத் தனது திருமுறையிற் சூடிய மெல்லிய யாமளையும், ஆகிய அபிராமி என்னும் கற்பகப் பூங்கொடி துணை இருக்கும் பொழுது, உனக்கு என்ன குறை உள்ளது? நீ வருந்துதலை விடுக.

(குறிப்புரை) அம்பிகை தனக்கு உவமை இல்லாதவள்! ஆதலின் அவளது அளப்பரிய பேரழகினை 'அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி' என்று சிறப்பித்தார். வல்லி—பூங்கொடி. அன்பு அரும்பி, அறம் மலர்ந்து, அருள்மணம் கமழ்ந்து, ஆனந்தத்தேன் சொரியும் அம்பிகையின் இயல்பு கருதி, அவளைப் பூங்கொடியாக உருவகித்தார். அழகுக்கு ஒருவரும் ஒவ்வாமை சொல்லியது, அம்பிகையின் ஏனைய சிறந்த குண நலங்களுக்கும் உபலக்கணம். அம்மையின் தாமரை மலர் போன்ற திருவடிகள் இயல்பாகவே சிவந்து சிறந்திருப்பினும், அவற்றின் சிவந்த தன்மைக்குக் காரணம் கூறுவார் 'அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தாள்' என்ருர். பழகுதல்—இடைவிடாது பற்றித் துதித்தல். 'கோமள யாமளை' என்பது வழி எதுகை (பிராசம்)! கோமளம்—மென்மைத்தன்மை. 'கொடி' எனற்பாலதனைக் கொம்பு என்ருர், பற்றிக் கொள்ளத்தக்கதாதல் உணர்த்துதல் குறித்து. இழவு—துன்பம். இரங்கேல்—வருந்தாதே. ஒரு குறையும் இல்லை என்பார் 'என்குறை?' என வினவினர். சென்று அடைக்கலம் புகுந்து தனது திருவடிகளைப் பற்றிக் கொள்ளுபவர்களைப் பிழைபொறுத்துக் காத்து வாழ்வித்தருளும் மாட்சிமையுடையவள் என்பது புலப்பட, 'பனிமாமதியின் குழவித் திருமுடிக் கோமள யாமளை' என்று அருளிச் செய்தார். (71)

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்;இனி யான்பிறக்கின்,
நின்குறை யேஅன்றி, யார்குறை காண்? இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர, எம் கோன்சடை மேல்வைத்த தாமரையே.

(பொழிப்புரை) அகன்ற உயர்ந்த வானத்தின்கண் தோன்றும் மின்னலுக்கும் ஒரு குறையைத் தோற்றுவித்து, மெலிந்து நிற்கின்ற நுணுகிய இடையையும், மென்மையாகிய இயல்பையும் உடைய அபிராமியே! எங்கள் தலைவராகிய சிவபெருமான், தனது குறை தீரும்படி தன் முடியின் மீது எடுத்து வைத்துக்கொண்டு பணிகின்ற, தாமரைபோன்ற நின் திருவடிகளை, என் குறை தீரும் பொருட்டு யான் இடைவிடாது துதித்துப் போற்றுகின்றேன். இங்ஙனம் துதித்துப் போற்றுவதன் பிறகும், யான் பிறக்க நேர்ந்தால் அது நின்குற்றம் ஆகுமே அல்லது, யாருடைய குற்றமாகும் என்பதனை நீ சிறிது எண்ணிப்பார்.

(குறிப்புரை) அம்பிகையின் அழகுத் திருவுருவத்தை 'நேரிடை மெல்லியலாய்' எனக் குறிப்பிட்டார். அம்பிகையின் அருட்காட்சி வாய்க்கப்பெற்றவராதலின், அவளது அருளியல்பை மட்டு

மேயன்றித் திருவுருவின் இயல்பையும் கூடப் புகழ்ந்து பாடிப்போற்றுதல், இவருக்கு இயல்பாயிற்று. அம்பிகையினது இடையின் நுண்ணிய தன்மையினை 'இருநீள் விசும்பின் மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை' என வருணித்து மகிழ்ந்தார். 'மின்னலுக்கும் குறையைத் தோற்றுவித்து' என்பது பொருள். 'மெலிகின்ற நேரிடை' என்றது, அம்பிகை அகிலாண்ட கோடியெலாம் ஈன்ற அன்னையாக விளங்கியும், பின்னரும் கன்னியெனவே திகழும் தன்மையைப் புலப்படுத்தும். சிவபெருமானை 'எங்கள் தலைவன்' என்னும் பொருளில் 'எம்கோன்' என்று சிறப்பித்தார். அம்பிகையினுடைய திருவடிகளின் மாண்பை 'எம்கோன் தன்குறை தீரச் சடைமேல் வைத்த தாமரை' என்று சுட்டிப் புகழ்ந்தார். ஊடற்காலத்திற் சிவபிரான் அம்பிகையின் திருவடிகளைத் தனது சடைமுடிமேல் வைத்துத் தொழுது பணிகின்றார் என்பது கருத்து. இஃது உலகியலை அருளியலில் ஏற்றிச் சுவைமிகப் பாடும் ஒருவகைக் கவிமரபு. இங்ஙனம் முன்னரும் பன்முறை வந்தவாறு (11, 35, 60) காண்க. சிவபிரான் தன்குறை தீரச் செய்வது போல, யானும் என்குறை தீர நின் திருவடிகளை ஏத்துகின்றேன் என்றார். குறை தீர்தல்—கவலை நீங்குதல். அம்மையை ஏத்தி வழிபடும் அடியவர்களின் பிறவி ஒழிதல் திண்ணம் ஆதலின் 'பிறக்கின்' என்றார். யான் என் கடமையைச் செய்கின்றேன், நீ நின் கடமையைச் செய்தல் வேண்டும். செய்யின் எனக்குப் பிறவி நேராது. நேரின் அது நின் குற்றமேயாய் முடியும் என்பார் 'யான் பிறக்கின் நின்குறையே யன்றி யார்குறை? காண்' என்றார்.

72

தாமம் கடம்பு, படைபஞ்ச பாணம், தனுக்கரும்பு,
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது, எமக்கு என்றுவைத்த
சேமம் திருவடி, செங்கைகள் நான்கு, ஒளிசெம்மை ; அம்மை
நாமம் திரிபுரை, ஒன்றோடு இரண்டு நயனங்களே.

(பொழிப்புரை) உலகத்தில் உள்ள உயிர்களுக்கெல்லாம் தாயாக விளங்குகின்ற அபிராமிக்குரிய மாலை கடம்பு ; படை ஐந்து மலரம்புகள் ; வில் கரும்பு; அவளது அடியவர்களாகிய வயிரவர்கள் துதிக்கின்ற காலம் நள்ளிரவு ; எங்களுக்கு உய்வைத் தருவதற்கென்று அவள் அமைத்து வைத்திருக்கின்ற பாதுகாப்பு அவளது திருவடிகள் ; அவளுக்குச் சிவந்த திருக்கைகள் நான்கு ; அவளது திருமேனியின் நிறம் சிவப்பு ; அவளது திருப்பெயர் திரிபுரசுந்தரி. அவளுக்குக் கண்கள் மூன்று.

(குறிப்புரை) ஆசிரியர் அபிராமியம்மையின் அருட்கடலில் குளித்துக் களித்துத் திளைத்தவராகலின், அவளுக்குரிய அடையாளங்களை அறிந்து அறிவிக்கின்றார். அனைத்துயிர்களுக்கும் தாயாதலின் 'அம்மை' எனவே சிறப்புறக் குறிக்கின்றார். தாமம்—மாலை. பஞ்சபாணம்—ஐந்து மலர் அம்புகள். தனு—வில். யாமம் — நள்ளிரவு. வயிரவர் — மயானவாசினி ஆகிய அம்பிகையின் மந்திரங்களைச் செபித்து உருவேற்றி வழிபடும் அடியவர்கள். சேமம் —பாதுகாப்பு. வாழ் முதலாகிய பொருளாய், எய்ப்பினில் வைப்பாய் நின்று என்றும் உதவுவன ஆகலின் 'சேமம் திருவடி' என்றார். தனக்குரிய இருகண்களுடன், தன் கணவருக்குரிய நெற்றிக் கண்ணையும் பெற்று விளங்கும் சிறப்புத் தோன்ற, மூன்று நயனங்கள் என்னுமல், அப்பொருளே அமைய 'ஒன்றோடு இரண்டு நயனங்களே' என்று அருளிச் செய்தார். நயனம்—கண். 'ஒடுவென் கிளவி உயர்பின் வழித்தே' எனவரும் தொல்காப்பிய நூற்பா, இங்கு நினைந்து இன்புறற்குரியது. அம்பிகைக்கும் மூன்று கண்கள் உண்டு என்பது, 'கன்னங் கரிய குழலும், கண்மூன்றும் கருத்தில் வைத்துத் தனந்தனி இருப்பார்க்கு இதுபோலும் தவம் இல்லையே' என்புழியும் (53) கண்டு கொள்க. 'திரிபுரசுந்தரி' என்பதே 'திரிபுரை' என வந்தது. 'திரிபுரை பாதங்கள் சேர்மின்களே' (54) என வந்தமை காண்க.

73

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும், பரவும் அபிராம வல்லி அடியிணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தபனியக் காவினில் தங்குவரே.

(பொழிப்புரை) மூன்று கண்களை உடைய சிவபிரானும், வேதங்களும், திருமாலும், பிரமதேவனும் துதித்து வழிபடுகின்ற அபிராமி அம்மையாகிய பூங்கொடியின் இரண்டு திருவடிகளையே

தம்முடைய உயிருக்குப் பயன் என்று தெளிந்துகொண்டு அன்புடன் வழிபடுபவர்கள், அரம்பை முதலிய தேவமகளிர் நடனமாடவும், இனிய பாடல்களைப் பாடவும், பொன்னால் அமைந்த பள்ளிக் கட்டில் பொருந்துகின்ற, பொன்மயமான கற்பகச் சோலையில் நிலையாகத் தங்கி இன்புற்று வாழ் வார்கள்.

(குறிப்புரை) அபிராமியம்மையின் அரும்பெருஞ் சிறப்பு இணையதெனற்கு, சிவபிரானும் வேதமும் திருமாலும் அயனும் பரவுதலைக் குறிப்பிட்டார். வணங்குபவரின் சிறப்பைப் பொறுத்தே வணங்கப் படுபவர்க்குச் சிறப்பு அமையுமாதலின், வணங்குபவர் பலருளராதலை எடுத்துக் காட்டினர். வணங்கத் தக்காரைப் பணிந்து வணங்குதல் சிறப்பே யன்றி இழிவாகாமையின், அனைவரும் அம்பிகையைப் பணிந்து வணங்குதற்கு முனைந்து, முற்படுதலைக் குறித்தபடியுமாம். சிவபெரு மானின் தனிப்பெருந் தலைமையினை யுணர்த்துதற்குச் சிறப்பு அடையாளமாதலின் 'நயனங்கள் மூன்றுடைய' என்றும், 'நாதன்' என்றும் சுட்டினர். 'நயனங்கள் மூன்றுடைய நாயகன்' என மணிவாசகரும் அருளிச் செய்வர். 'முக்கட் செல்வர்' என்று புறநானூறும் இதனை யுணர்த்தும். சயனம்—படுக்கை, கட்டில். தமனியம்—பொன். கா—சோலை. அம்பிகையை வழிபடுவோர் சுவர்க்க இன்பங்களெல்லாம் துய்க்கப்பெறுவர் என்பதும், நாம் அபிராமியம்மையின் அடியிணையையே பயன் என்று கொள்ளுதல் வேண்டும் என்பதும், நாம் இப்போது பற்றியுள்ள பிற புல்லிய பொருள்களைக் கைவிடுதல் வேண்டும் என்பதும், இப்பாடலின் முடிந்த முடிவான கருத்து. 74

**தங்குவர், கற்பக தாருவின் நீழலில்; தாயர்இன்றி**
**மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்,**
**பொங்குஉவர் ஆழியும், ஈரேழ் புவனமும், பூத்தஉந்திக்**
**கொங்குஇவர் பூங்குழ லாள்திரு மேனி குறித்தவரே.**

(பொழிப்புரை) பெரிய எட்டுத்திக்கு மலைகளையும், அலைபொங்குகின்ற உவர்ப்புத்தன்மை யுடைய 7 கடல்களையும், 14 உலகங்களையும் தோற்றுவித்த திருவயிற்றையும், மணம்மிகுந்த மலர் களை அணிந்த கூந்தலையும் உடைய அபிராமி அம்மையின், அழகிய ஒளிமிகுந்த திருவுருவத்தைத் தியானிப்பவர்கள், தேவருலகில் உள்ள கற்பகச் சோலையின் நிழலில் தங்கி இன்புற்று வாழ்வார்கள்; வினைவயத்தால் தம்மைப் பெற்றெடுக்கும் தாய்மார் இல்லையாகி, உலகத்தில் தவறாமல் தொடர்ந்து வரும் பிறவியை, மங்கி ஒழியும்படி செய்வார்கள்.

(குறிப்புரை) அபிராமியம்மையின் ஒப்புயர்வற்ற பெருமையை, நம்மனோர் மனத்திற் பதியுமாறு உணர்த்துவதற்கு, மிகப்பெரிய மலைகளையும் கடல்களையும் உலகங்களையுமெல்லாம் குறிப்பிட்டு, இவை யனைத்தையும் எளிதாகத் தோற்றுவித்தருளியவள் என்னும் குறிப்பு அமைய 'மால்வரையும் ஆழியும் ஈரேழ்புவனமும் பூத்த உந்தியள்' எனஞர். மலைகள் எட்டாவன, நிடதம் ஏமகூடம் இமயம் நீலம் சுவேதம் சிருங்கவான் மாலியவான் காந்தமாதனம் என்பன. ஏழுகடல்கள் ஆவன, உவர்க்கடல் பாற்கடல் தயிர்க்கடல் நெய்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல் மதுக்கடல் நீர்க்கடல் என்பன. பதி னன்கு புவனங்கள் ஆவன, பூலோகம் புவலோகம் சுவலோகம் மகலோகம் சனலோகம் தவலோகம் சத்தியலோகம், அதலம் விதலம் சுதலம் தராதலம், ரசாதலம் மகாதலம் பாதலம். அம்மையின் கூந்தல் இயல்பாகவே நறுமணம் உடையதாகலின், 'கொங்கு இவர் குழல்' எனவே கூட்டுக. கொங்கு—மணம். இவர்தல்—மேலே சிறந்து விளங்குதல். குழல்—கூந்தல். மணம்கமழ்தல் தெய்விகக் கற்புடைமைக்கும், பூவுடைமை சுமங்கலித் தன்மைக்கும் அடையாளமாகும். திருமேனி குறித்தல்—திருவுருவத்தைத் தியானித்தல். அம்மையைத் தியானித்து வழிபடுபவர்கள் துன்பநீக்க மும், இன்ப ஆக்கமும் பெறுவர் என்பது கருத்து. இன்பத்தின் மேல் எல்லை இணையதெனற்குக் 'கற் பக தாருவின் நீழலில் தங்குவர்' எனவும், துன்பத்தின் கீழ் எல்லை இணையதெனற்கு 'மண்ணில் வழுவாப் பிறவி' எனவும் சுட்டிக் குறிப்பிட்டார். மங்குவர்—மங்கச் செய்வர். அம்மை யையே தாயாகக் கொண்டு வழிபடுபவர்க்கு, வேறு தாயார் இலராவர் என்பது கருத்து. வழிபடும் அன்பர்க்குப் பிறவி என்பது இன்றி அறவே ஒழியுமாகலின், அவர்க்குத் தாயார் இலராவர். முன்ன ரும் 'ஈன்றெடுப்பாள் ஒரு தாயும் இல்லை' (37) என வந்தமை காண்க. 75.

—ஆசிரியர்




ஸ்ரீ மீனாட்சியம்மை, மதுரை

# 'பெண்ணின் நல்லாள்'

முன்னுரை :

'பெண்ணின் நல்லாள்' என்பது, உலக அன்னையாகிய அம்பிகைக்கு உரிய ஒரு பெயர். 'பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே' என ஞானசம்பந்தர் பாடியிருத்தல் காணலாம். 'பெண்ணின் நல்லவள் ஆயின பெருந்தவக் கொழுந்து' என்பது சேக்கிழார் திருவாக்கு.

'உலகப் படைப்பில் மிகவும் அழகும் கவர்ச்சியும் உடையவர்கள். கடவுளின் கலைத்திறனில் இறுதியாயும், இணையற்றும் சிறந்து விளங்குபவர்கள். காணவும் கருதவும்படக் கூடிய எல்லா நலங்களும் பொருந்திப் புனிதமான தெய்விக நல்ல விழைதக்க இனிய நிலையில் திகழ்பவர்கள்' என்று, ஜான்மில்ட்டன் (1) என்னும் ஆங்கிலப் பெரும்புலவர் பெண்குலத்தைப் புகழ்ந்து கூறுகின்றார்.

ஒரு சிறந்த பெண்ணுக்கு எத்தனையோ பல நல்ல குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். அவை அத்தனையையும் உள்ளடக்கிச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின், ஒரு சிறந்த பெண் குடித்தனம் செய்வதிலும், துரைத்தனம் செய்வதிலும் வல்லவளாக இருத்தல் வேண்டும்.

---

"O! Woman! Fairest of creation!
Last and best
Of all God's works! Creature
in whom excelled
Whatever can to sight or thought
to be formed!
Holy, Divine, Good, Amiable
and Sweet"

—John Milton

ஒரு சிறந்த நல்ல பெண்ணானவள், குடும்ப வாழ்க்கைக்கு ஏற்ற குணங்கள் உடையவளாக இருத்தல் வேண்டும். குடும்ப வாழ்க்கைக்குரிய குண நலங்களையே திருவள்ளுவர் மனைமாட்சி என்றும், மனைத்தக்க மாண்பு என்றும் குறிப்பிடுகின்றார். கணவனைத் தெய்வமாகக் கருதித் தொழுவதும், கணவனின் வருவாய்க்கு ஏற்றபடி அளவறிந்து குடும்பம் நடத்தத் தெரிந்திருப்பதும், ஒரு சிறந்த பெண் பெற்றிருத்தற்குரிய இன்றியமையாத இனிய குண நலங்கள் ஆகும். சிக்கன இயல்பும், செய்வினைத் திறனும், அவள்பால் அமைந்திருத்தல் வேண்டும்.

ஒரு குடம் நீராற் சோறு சமைத்து உண்ணும் நிலையிற் பஞ்சமும் வறுமையும் நேர்ந்த காலத்தும், இனிமை கலந்த நன்மொழியும், குடும்ப வாழ்க்கைக்குரிய நல்லியல்புகளும் உடையவளாய்; கடல்நீரை எல்லாம் வற்ற உண்ணும் அளவிற்குப் பெருந்திரளான சுற்றத்தார் ஒருங்கேவரினும் செல்வம் நிறைந்திருந்தாற் போன்ற மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரிப்பவளாய், மிகவும் திறம்படக் குடும்பம் நடத்து தலையே குறிக்கோளாகக் கொண்டு, ஒரு சிறந்த நல்ல பெண்மகள் ஒழுகுதல் வேண்டும்; என நாலடியார் செய்யுள் ஒன்று நவில்கின்றது.

இதுமட்டும் அன்று. ஒவ்வொரு பெண்ணும் தன்னை மணந்து கொண்ட கணவனுக்குப் பலவகை மாட்சிமைகளும் அமையும்படி ஒழுகுதல் வேண்டும். செல்வம் மிக்க கணவனை மணந்துகொண்டு, அவ்வாற்றல் தான் மேலும் புதிய சிறப்பைப் பெற்று வாழ்தலைவிட, ஏழைக் கணவனேயாயினும், தன்னால் அவன் சிறப்புற்று வாழும்படி செய்யவல்ல பெண்மகளே சிறப்பு உடையவள் ஆவாள். கணவனாற் சிறப்பைப் பெறும் மனைவியைவிட, கணவனுக்குத் தன்னாற் சிறப்பு ஏற்படும்படி செய்யவல்ல மனைவியே,

சிறந்த பெண்ணின் நல்லாள் என மதிக்கப்பெறுவாள். மனைவியின் குணமாட்சிமையால், வறுமை மிக்க கணவனும் பெருவளம் எய்துவது உண்டு. 'இவள் வந்துசேர்ந்த பின்னரே, இவ் வீட்டில் செல்வச் செழிப்பும் விழாப்பொலிவும் ஏற்படலாயின' என ஊரவர் கூறுமாறு, ஒரு பெண் வாழ்தல் சிறப்பாகும். "இஃதோ ஓர் ஆன் வல்சிச் சீரில் வாழ்க்கை, பெருநலக் குறுமகள் வந்தென, இனிவிழவு ஆயிற்று என்னும் இவ்வூரே" என வரும் குறுந்தொகைப்பாடல், இக்கருத்தினை வலியுறுத்தும்.

சுருக்கமாகக் கூறுதல் வேண்டின், ஒரு பெண் குடித்தனம் நடத்தும் திறமையும், துரைத்தனம் செலுத்தும் வல்லமையும் ஒருசேரப் பெற்றிருத்தல் வேண்டும் எனலாம். இங்ஙனம் பெண்குலத்திற்கு அமைய வேண்டிய அரும் பெறற் பண்புகள் இவையிவை என்பதனை, உலக அன்னையும் பெண்ணின் நல்லாளும் ஆகிய அம்பிகை, காஞ்சியிற் காமாட்சியம்மையும் மதுரையில் மீனாட்சியம்மையும் ஆக இருந்து விளக்கிக் கொண்டிருக்கின்றாள் என்றல் பொருந்தும். தமிழ் நாட்டுப் பெண் மகளிர் ஒவ்வொருவரும் எவ்வகைப் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதற்குக் காஞ்சி காமாட்சியும், மதுரை மீனாட்சியும், எடுத்துக்காட்டாக விளங்குகின்றனர் எனலாம்.

## காஞ்சி காமாட்சி :

சிக்கன இயல்பும், செய்வினைத் திறனும், கணவனைப் பேணி வழிபடலும், கற்பிற் சிறந்த குடித்தனப் பாங்குடைய பெண்ணின் நல்லாள் ஒருத்தியின் பண்பாகும். காஞ்சி காமாட்சியம்மை, தன் கணவர் ஆகிய சிவபெருமான் அளித்த இருநாழி நெற்கொண்டே, இவ்வுலகில் முப்பத்திரண்டு அறங்களையும் குறைவறச் செய்து முடித்தனள் என்பது வரலாறு. "தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்டுவரை எல்லை இருநாழி நெற்கொண்டே, மெல்லியலாள் ஓங்குலகில் வாழும் உயிர் அனைத்தும் ஊட்டுமால் ஏங்கொலிநீர்க் காஞ்சியிடை" என்பது தண்டி அலங்காரச் செய்யுள். 'பொருட்குறை விசேடம்' என்னும் அணியை விளக்கவந்த மேற்கோட் பாடல் இது! இரு நாழி நெல்லேயாகிய பொருட் குறை இருந்தும், 32 அறங்களையும் விசேடமாகச் செய்து முடித்தாள் காஞ்சி காமாட்சியம்மை என, இச்செய்யுள் விளக்கியிருத்தல் காணலாம். இதனாற் குடித்தனப்பாங்குடைய பெண்கள் பெற்றிருத்தற்குரிய சிக்கன இயல்பும், செய்வினைத்திறனும், காஞ்சி காமாட்சியம்மையின்பாற் சிறந்து விளங்குதல் தெளியலாம்.

காமாட்சியம்மையின் வேறு சில பண்புகளும் ஈண்டுக் கருதத்தக்கன. கற்புடைய மனைவிக்குக் கணவனை என்றும் நீங்காதிருந்து போற்றி வழிபடுதல், தலைசிறந்த பெருங்கடமையாகும். கொழுநற் றொழுதெழுதல், குடும்ப நலம் பேணும் குலமகளிர்க்கு உரிய அழகு. கணவனை அன்பினால் வழிபடுதல் கற்புடைய மகளிர்க்கு இன்றியமையாப் பண்பு என்றும், அங்ஙனம் வழிபடும் மகளிர் வானுலகில் தேவரும் வணங்கப்பெறும் சிறப்பை அடைவர் என்றும், திருவள்ளுவர் குறிப்பிட்டார். "பெற்றாற்பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு" என்பது திருக்குறள். காமாட்சியம்மை திருவேகம்பநாதரை 'என்றும் முடிவிலாப் பூசை' இயற்றிவரும் திறனைப் பெரிய புராணம் காஞ்சிப்புராணம் முதலிய அருள் நூல்கள் விரிவுற விளக்கியுரைக்கின்றன.

கம்பையாறு வெள்ளப் பெருக்கெடுத்து ஓடி வந்தபொழுது, தான் வழிபடும் சிவலிங்கத் திருவுருவிற்கு ஊறு ஏதும் நிகழாதபடி வெருவி ஓடித் தழுவிக்கொண்டு காத்த காமாட்சியம்மையின் செயல், "தற்கொண்டாற் பேணும்" கற்புடை நங்கையின் காதல் அன்பின் திறனை விளக்குவதாகும். மேலும் "எம்பிராட்டிக்கு மெல்லியர்ஆனார் என்றும் ஏகம்பர்" என்று சான்றோர் பலரும் போற்றும் வண்ணம், காமாட்சியம்மை திருவேகம்பநாதரின் திருமேனியைத் தழுவிக் குழைவித்த தன்மை, கணவன் ஒரோவழி முரடனாக இருப்பினும், மனைவி தன்னுடைய இனிய மென்மைப் பண்பினால், அவனை நல்வழிப்படுத்தும் கடப்பாடு உடையவளாவள் என்பதைப் புலப்படுத்துகின்றது எனலாம். இங்ஙனம் இன்னோரன்ன மனைமாட்சியாகிய குடும்பநலப் பண்புகளுக்கெல்லாம், காமாட்சியம்மை சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்தல் கருதியுணர்ந்து மகிழற்பாலது. மனைமாட்சியாகிய குடித்தனப் பாங்கிலும், வினைமாட்சியாகிய செய்வினைத் திறனிலும் சிறந்து, 'அனந்தகோடிப் பிள்ளைகள் பெற்றுடைய பெருமனைக்கிழத்தியாய், இருநாழி நெற்கொண்டே எண்நான்கு (32) அறங்களும் செய்து, குடும்பம் பேணிய காமாட்சியம்மையின்

பெருஞ்சிறப்பு, நம் சமயப் பெருஞ் சான்றோர் களால் மிகவும் புகழ்ந்தோதப் பெற்றுள்ளது.

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன்
தரும்இரு நாழி நெல்லால்,
வினைமாட்சி கொண்டு உயிர்எல்லாம்
அளித்தருள் மேன்மையினால்,
மனைமாட்சி எய்தும் உனக்கே
பெருங்கற்பு மாட்சி, அன்றிப்
பினைமாட்சி யார்க்குண்டு? உலகீன்ற
குன்றைப் பெரியம்மையே.

எனத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் திறந்தெரிந்து பாராட்டிப் போற்றியிருத்தல், இங்கு நாம் அறிந்து இன்புறுதற்குரியது.

**மதுரை மீனாட்சி :**

இங்ஙனமே, மதுரை மீனாட்சியம்மையும், தன்னை மணந்து கொண்ட கணவன் ஏழையாயி னும், தான் அவனை ஒரு பெருஞ் செல்வனுக்கித் தன்னால் அவனுக்கு எல்லாவகைச் சிறப்புக் களும் ஏற்படும்படி செய்து மகிழ்கின்ற, ஓர் ஒப் புயர்வற்ற சிறந்த பெண்ணின் நல்லாளாகப் பிறங்குகின்றாள்.

மீனாட்சியம்மையாகிய தடாதகைப் பிராட் டியை மணந்துகொண்டதனாலேயே, சுந்தர பாண்டியன் ஆகிய சிவபெருமான் பல சிறப்புக் களைப்பெற்றான். சடை கட்டியிருந்த அவன், மணிமகுடம் தரித்தான். கொன்றை மாலையைப் போட்டிருந்த அவன், பாண்டியர் குலத்து வேந்தர்களுக்குரிய வேப்பம்பூமாலையைச் சூடி னான்; நச்சுப் பாம்புகளைத் தாங்கிக் கொண்டி ருந்த அவன், மாணிக்கச் சுடர்ப்பூண்களை ஏந்தி னான்; ஆண்டியாகப் பிச்சையேற்றுழன்ற அவன், பாண்டியனின் மருமகன் ஆகி உலகம் முழுவதையும் அரசாட்சி செய்தான். இவை களெல்லாம் மீனாட்சியம்மையால் வந்த வாழ்வு தானே, சோமசுந்தரப் பெருமானுக்கு! இவ்வுண் மையினை,

''சடைமறைத்துக்கதிர்மகுடம்தரித்து நறும்
கொன்றையந்தார் தணந்து, வேப்பம்
தொடைமுடித்து, விடநாகக் கலன்அகற்றி
மாணிக்கச் சுடர்ப்பூண்ஏந்தி,
விடைநிறுத்திக் கயல்எடுத்து, வழுதிமரு
மகன் ஆகி, மீன நோக்கின்
மடவரலை மணந்துலகம் முழுதாண்ட
சுந்தரனை வணக்கம் செய்வாம்''

எனப் பரஞ்சோதி முனிவர், தாம் அருளிச் செய்த திருவிளையாடற் புராணச் செய்யுளில் நயம்மிக விளக்கியிருத்தல், நாம் அறிந்து இன் புறுவதற்கு உரியது.

இங்ஙனம் சொக்கநாதர் ஆகிய சிவபெரு மான் பெற்ற சிறப்பெல்லாம், அவர் சொக்க நாயகி ஆகிய மீனாட்சியை மணந்துகொண்ட மாட்சிமையாய் விளைந்த பயன்களேயாகும் என லாம். ஏனெனில், மீனாட்சியை மணப்பதற்கு முன்னர்ச் சொக்கநாதர் ஆனையை உரித்து அதன் தோலைத்தான் போர்த்துக் கொண்டி ருந்தார்; அருச்சுனன் அரிமர்த்தனன் ஆகி யோர்பால் அடியும்பட்டார்; மானம் அழிந்து அங்கங்கே இரந்து பிச்சை எடுத்துத் திரிந்து கொண்டு இருந்தார். சொக்கநாயகி ஆகிய மீனாட்சியை மணந்துகொண்ட பின்னரோ, பாண்டியனின் மருமகனாகி, எல்லாப் பெருமை களையும் பெற்று, உலகங்களையெல்லாம் ஆளத் தலைப்பட்டார். இத்தகைய பெருவாழ்வு மீனாட் சியினால்தான், சோமசுந்தரப் பெருமானுக்குக் கிடைப்பதாயிற்று. ஏர் பிடித்தவன் யாது செய் தல் கூடும்? யாவும் பானை பிடித்தவள் பாக் கியமே யன்றோ?

ஆனை யுரித்தும், அதள்தனைப்
போர்த்திட்டு அடியும்பட்டு,
மானம் அழிந்து அங்குஇரந்தே
திரிந்த மதுரைச் சொக்கர்
ஞானம் மிகப்பெற்று வாழ்வது
எல்லாம், சொக்க நாயகியாள்
பானை பிடித்த முகூர்த்தத்தினால்
வந்த பாக்கியமே.

இங்ஙனம் மீனாட்சியம்மையினால்தான், சொக்கநாதப் பெருமான் அரசவாழ்வு பெற்றார், சுந்தரபாண்டியன் என்னும் பெயர் தாங்கிப் பாண்டிய நாட்டை அரசாண்டார் என்பது வர லாறு. இதனை ''விண்ணரசும் பிற அரசும் சிலர் எய்த விடுத்து ஒரு நீ, பெண்ணரசு (மீனாட்சி) தரக்கொண்ட பேரரசு செலுத்தினை

யே'' எனவும்; ''ஊன்கொண்ட முடித்தலை யிற் பலிகொண்டார்க்கு, உலகேழும் தான் கொண்ட அரசாட்சி தந்த நின்னைப் பாடு வனே'' எனவும்; குமரகுருபரசுவாமிகள் குறிப் பிட்டுப் புகழ்ந்திருத்தல் கொண்டு உணரலாம்.

**இரு கூறுகள் :**

(1) மீனாட்சியம்மை கணவனை உயர்த் தும் மனைவியாக விளங்குகின்றாள்; காமாட்சி யம்மை கணவனை வழிபடும் மனைவியாகத் திகழ் கின்றாள்.

(2) "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிற்பெண்கள் நடத்த வந் தோம்'' எனப் பாரதியார் பாடுவதுபோல, மீனா ட்சியம்மை அரசியல்வினைமாட்சியில் வல்ல புது மைப் பெண் போலப் பொலிகின்றாள்; காமாட்சி யம்மையோ சிக்கனமும் செம்மைத்திறமும் உடையவளாய், இல்லறம் நடாத்தும் மனைமாட் சியில் வல்லவளாக வயங்குகின்றாள்.

(3) சுருங்கக் கூறலுறின், துரைத்தனத் தனத்திற்கு மீனாட்சியும், குடித்தனத்திற்குக் காமாட்சியும் இணையற்ற இனிய எடுத்துக் காட் டாக இலங்குகின்றனர்.

(4) பெண்மையின் பெருமிதம் மீனாட்சி யாகவும், பேரருட்டிறன் காமாட்சியாகவும்பிறங் குகின்றன.

(5) மீனாட்சி பசுமைநிறம் (செல்வச் செழி ப்பு) வாய்ந்தவள்; காமாட்சி பொன்மைநிறம் (பண்பாட்டின் தூய்மைநலச் சிறப்பு) வாய்ந்த வள்.

(6) உலகியல் வாழ்வில் மக்களுக்குச் செல்வச் செழிப்பும், பண்பாட்டுச் சிறப்பும் ஆகிய இரண்டும் வேண்டும் என்னும் உண் மையை, அருளுருவாகிய அம்பிகையின் இவ் விருகூறுகளும் நமக்குச் செவ்விதிற் புலப்படுத்து கின்றன.

**மீனாட்சி—பெயர்க்காரணம் :**

இனி, மீனாட்சி காமாட்சி என்னும் பெயர் களின் சொற்பொருள் நலங்களும் அறிந்து சுவை த்து மகிழத் தக்கவையாக விளங்குகின்றன. கோழி, தனது முட்டையின் மேல் அமர்ந்து அடைகாத்துக் கிடந்து பக்குவம் நோக்கி முட் டையினின்று பிரித்துக் குஞ்சுகளை வெளிப்படுத் தும். ஆமை, கடலின்கண் தக்க இடத்திலே சேமித்து வைத்த தனது முட்டைகளைத் தான் சேய்மையிற் சென்று நினைவு கூர்ந்து, அந் நினைவின் ஆற்றலாற் குஞ்சு பொரிக்கச் செய்யும். மீன் தன் சினைகளைக் கண்ணுற் கூர்ந்து நோக் கிப் பார்த்து, அக்கட்பார்வைத் திறனால், அவற்றி னின்று குஞ்சுகள் தோன்றச் செய்து காப்பாற் றும்.

(1) இங்ஙனம், கட்பார்வையின் ஆற்றலி னால் முட்டைகளினின்று குஞ்சுபொரித்து வெளி ப்படச் செய்து, மீன் தன் குஞ்சுகளைப் பாதுகாக் கும் செய்தி போல, உலகத் துயிர்களை யெல் லாம் தனது அருள் கனிந்த கடைக்கண் நோக் கத்தின் ஆற்றலினால் பாதுகாத்து நலம்புரிந்தரு ளும் திறம்பற்றி, அம்பிகைக்கு மீனாட்சி எனச் சான்றோர்கள் பெயரிட்டு வழங்குவாராயினர்.

மீனாட்சியம்மை தன் கடைக்கண் பார்வை நலத்தால் உலகத்துயிர்களை யெல்லாம் பாது காத்து அருள்செய்யும் திறனை, ''ஒளியால் உல கீன்று உயிர் அனைத்தும் மீன்போற் செவ்வி யுற நோக்கி, அளியால் வளர்க்கும் அங்கயற் கண் அன்னே கன்னி யன்னமே'' எனவரும் பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணச் செய்யுளானும் தெளியலாம்.

(2) இனி வேறொரு வகையாகவும் கருத லாம். மீனின் கண்களுக்கு இமைகள் இல்லை. இமைகள் இல்லாமையால், மீனின் கண்கள் இரவும் பகலும் மூடுதல் இன்றித் திறந்துகொண் டே இருக்கும். அதனாலேயே, ''மீன்கண் துஞ் சும் பொழுதும் யான் கண்துஞ்சலன்; யாது கொல் நிலையே?'' எனக்கூறித் தலைவி ஒருத்தி வருந்தியதாக நற்றிணை என்னும் சங்க நூல் குறிப் பிடுகின்றது. இவ்வாறு, மீனனது இரவும் பகலும் கண்களை மூடாது விழித்துக் கொண் டிருக்கும் தன்மைபோல, ஒரு கணப்பொழுதும் ஒழிவின்றிக் கண்இமையாமல் இருந்து, உயிர் களைக் கருணையுடன் பாதுகாத்து நலம்புரியும் திறத்தால், அம்பிகைக்கு மீனாட்சி எனக் காரணப் பெயர் வழங்குவதாயிற்று.

(3) அம்பிகையின் கண்கள் அருளுடன் திறந்து மலர்வதனால் தோன்றும் இவ்வுலகும், அவள்

தன் கண்களைச் சற்றே மூடி இமைப்பாளாயின், அவ்வளவில் அழிந்தொழிதல் கூடும். அங்ஙனம் நேராமைப் பொருட்டு, மீன்போலத் தன் கண்களை இமைக்காமல் இருந்து உலகங்களையெல்லாம் அம்பிகை அருளாற் பாதுகாத்து வருகின்ருள். அதுபற்றியே மீனுட்சி எனப் பெயர் பெற்ருள் எனினும் பொருந்தும். இவ்வுண்மை,

இணைவிழி இமையா நாட்டம்
எய்தியது, அலரத் தோன்றும்
பணைநெடும் புவனம் இந்தப்
பார்வைசற் றிமைக்கும் ஆயின்
துணைஇழந்து அழிவ தெண்ணித்
துணிந்தநின் கருணை என்ருல்
கணையினும் கொடிய தென்னக்
கடவதோ? கடவுள் மாதே!

எனவரும் சௌந்தரிய லகரித் தமிழ்ச் செய்யுளால் விளக்கப் பெற்றிருத்தல் கொண்டு, தெளியப்படும். மீனுட்சி என்பதனையே ஞானசம்பந்தர் **அங்கயற்கண்ணி** என்றும், மாணிக்கவாசகர் **கயல் மாண்ட கண்**ணி என்றும், பரஞ்சோதி முனிவர் **மீனநோக்கின் மடவரல்** என்றும், தமது பாடல்களில் வழங்கியுள்ளனர்.

### காமாட்சி—பெயர்க்காரணம்:

இங்ஙனமே காமாட்சி என்னும் கவின்மிகு பெயரும், பற்பல சிறந்த பொருள் நலங்களையுடையது. இப்பெயர், கா+மா+அட்சி எனப் பிரியும். கா—சரசுவதி. மா—இலட்சுமி. அட்சம்—கண். அட்சி—கண்ணுக உடையவள். கல்விக்குரிய சரசுவதியையும், செல்வத்துக்குரிய இலட்சுமியையும், தனக்குக் கண்களாகக் கொண்டவள், காமாட்சி எனப்படுவள். எனவே, கல்விநலனையும் செல்வநலனையும் ஒருசேரத்தன் அடியார்களுக்குத் தன் கடைக்கண்ணின் பார்வையால் ஒருங்கே விளைவித்துக் கொடுத்துதவி, நலம்புரியும் திறம்வல்லவள் காமாட்சி என்பது கருத்து.

"திருமகள் வலக்கண், வாக்கின்
சேயிழை இடக்கண், ஞானப்
பெருமகள் நுதற்கண் ஆகப்
பெற்று, வான் செல்வம் கல்வி
அருமைவீடு அளிப்பாள் யாவள்?
காமாட்சி அவளே என்க..."

இனி இவ்வாறன்றி, காமம்—விருப்பம்; காம+அட்சி—காமாட்சி எனக்கொண்டு, அடியார்கள் விரும்பி நினைத்தவற்றையெல்லாம் நிறைவேற்றித்தரும் அருள்நோக்கம் உடையவள் என்றும்; க+அ+ம+அட்சி எனப் பிரித்துக் கொண்டு, க—பிரமனையும், அ—திருமாலையும், ம—உருத்திரனையும், அட்சி—கண்ணுற்படைத்து, உலகின் தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழில்களையும் நிகழ்த்துபவள் என்றும்; பிறவாறும் பெரியோர்கள் பல பொருள்கள் கூறுவர்.

### முடிவுரை:

இங்ஙனம் பெண்மைக் குணநலங்களுக்கெல்லாம் ஒரு நிலைக்களமாகத் திகழ்ந்து, பெண்குலத்திற்கே சிறந்த எடுத்துக்காட்டாய், மீனுட்சியாகவும் காமாட்சியாகவும் விளங்கி, அருளாளர் அனைவரும் 'பெண்ணின் நல்லாள்' எனத் துதித்துத் தொழுதேத்தும் சிறப்புப் பெற்று, உலகுயிர்களை யெல்லாம் பாதுகாத்துத் தண்ணளி புரிந்து வரும் அருளுருவாகிய அம்பிகையின் திருவடிகளை, நாம் நம் மனமொழி மெய்களினுல் வழிபட்டு இறைஞ்சி, அவளது திருவருளைப் பெற்று உய்வதற்கு முயல்வோமாக!

—ஆசிரியர்

[சென்னைத் திருமயிலைக் கபாலீசுவரர் கோயிலில், நவராத்திரி விழாவில், நிகழ்த்திய சொற்பொழிவினைத் தழுவியது. (18—10—69) —ஆசிரியர்]

# அத்துவைத தத்துவ ஆசாரியர்கள்

(23) **அநுபூதிசொரூபர் :** இவர் கி. பி. 12-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். சாரஸ்வதம் என்னும் புகழ்மிக்க இலக்கண நூல் இயற்றியவர். ஆனந்தபோதரின் நியாயமகரந்தம், நியாயதீபாவலி, பிரமாணமாலா என்னும் மூன்றிற்கும் முறையே சங்கிரகம், சந்திரிகை நிபந்தம் எனப் பெயரிய உரைகள் எழுதினர். சங்கரரின் பிரம்மசூத்திர பாஷ்யத்திற்குப் பிரகதார்த்த விவரணமும், மாண்டூக்ய காரிகா பாஷ்யத்திற்குத் திப்பணமும், விமுக்தாத்மரின் இஷ்டசித்திக்கு விவரணமும், ஸ்ரீ அர்ஷரின் கண்டனகண்ட கத்தியத்திற்கு வியாக்கியானமும், இவரால் எழுதப்பெற்றன. சங்கரரின் பிரம்மசூத்திரபாஷ்யத்திற்குப் பிரகதார்த்த விவரணம் எழுதியமையால், இவரைப் பிரகதார்த்தகாரர் எனவும் போற்றிவழங்குவர். இவ்வாறு இவரை அமலானந்தரும், அப்பைய தீட்சிதரும் குறிப்பிடக்காணலாம்.

இவர் மாயையின் கூறே அவித்யை என்றும், மாயையும் அவித்யையும் ஒன்றே என்றும் கூறுவர். அவித்யையின் நிகழும் உணர்வின் பிரதிபலிப்பே ஆன்மா என்பது இவர் கொள்கை. இது பிரதிபிம்பவாதம் எனப்படும். மாயையின் கூறுகிய அஞ்ஞானம் பலவகைப்படுதலின், உயிர்களும் பலவாயின. மாயையைக் கடந்து நிற்றலே சுத்த சைதன்யம் அல்லது பிரம்மம் ஆகும். பிரம்மத்தை அறியும் ஞானம் கைவரப்பெற்ற ஆன்மா, மாயையினின்று விடுதலை பெறுகின்றது, மாயையின் பரிணாமமே உலகம். நிறங்கள் பற்பல இருப்பினும், குருடன் அவற்றை அறியாதவாறு போல, மாயையினின்று விடுதலை பெற்ற முத்தான்மாவை உலகபந்தபாசங்கள் பற்றுவதில்லை என்று, இவர் விளக்குகின்றார். சங்கரரின் கொள்கைக்கு மாறுபடும் பாஸ்கராசாரியரின் பேதாபேத வாதக்கொள்கையையும், நியாய வைசேடிகரின் கொள்கையையும் இவர் பெரிதும் மறுக்கின்றார். வாசஸ்பதி மிச்ரரின் கருத்துக்கள் சிலவும் இவரால் மறுக்கப்படுகின்றன.

(24) **அமலானந்தர் :** இவர் இந்நாளில் தௌலதாபாத் என வழங்கும் பழைய தேவகிரியை ஆண்ட யாதவகுல மன்னர் ஆகிய கிருஷ்ணர் (கி. பி. 1248—1259), அவரது சகோதரர் ஆகிய மகாதேவர் (கி. பி. 1247—1260) என்பவர்களின் காலத்தில் வாழ்ந்தவர். இவருக்கு வியாசாஸ்ரமர் எனவும் பெயர் வழங்கும். வாசஸ்பதி மிச்ரரின் பாமதிக்கு வேதாந்தகல்பதரு என்னும் உரையை எழுதினர். 'புஷ்பக விமானம் தன்மீது ஏறுவோர் பலருக்கும் விரிந்து இடங் கொடுத்தல்போல, வேதாந்த கல்பதருவும் அறிஞர்களின் பல்வேறு வகையான கொள்கைகளுக்கும் விரிந்து நின்று இடம் கொடுக்கின்றது' என அப்பையதீட்சிதர் தாம் வேதாந்த கல்பதருவுக்கு எழுதிய பரிமளம் என்னும் உரையில் குறிப்பிடுகின்றார். பிரம்மசூத்திரத்தினை விளக்கி, இவர் சாஸ்திர தர்ப்பணம் என்னும் ஒரு நூலும் இயற்றியிருக்கின்றார். நாசிக் திரியம்பகம் என்னும் தலத்தில் இவர் வாழ்ந்திருந்தார். இவரது ஞானகுரு அனுபவானந்தர். வித்தியாகுரு சுகப்பிரகாசர். சீடர் சிற்சுகர்.

(25) **அனந்தபூரணவித்தியாசாகரர் :** சுவேதகிரி என்பவரின் சீடர். தம்முடைய நியாய கல்ப லதிகையிலும் வித்தியாசாகரியிலும் தமது குருவைத் துதித்துள்ளார். வித்தியாசாகரி என்பது ஸ்ரீ அர்ஷரின் கண்டனகண்ட கத்தியம் என்னும் நூலுக்கு இவர் எழுதிய உரை ஆகும். நியாயம் பிரபாகரம் பாட்டம் சுகதம் ஆகிய

கொள்கைகளில் உள்ள சிக்கல்களை, இவர் இதன் மூலம் தீர்த்துச் சுலபம் ஆக்கித் தெளிவு படுத்தினர். சங்கரரின் பிருகதாரண்யக உபநிட தபாடியத்திற்குச் சுரேசுவரர் எழுதிய வார்த்தி கத்திற்கு இவர் எழுதிய விளக்கவுரையே நியாய கல்ப லதிகை என்பது. இவர் இயற்றியுள்ள வேறுபிற நூல்களும் வருமாறு :— (1) கண்டன டீகை (2) பிருகதாரண்ய வார்த்திக வியாக்கி யை (3) நியாய சந்திரிகை (4) பிரமசித்தி வியாக்கியை (5) சமன்வய சூத்திர விருத்தி (6) பஞ்சபாதிகா வியாக்கியை (7) மகாவித் தியா விடம்பன வியாக்கியை (8) நியாயசார வியாக்கியை (9) காசிகா வியாக்கியை (10) மோட்ச தர்ம வியாக்கியை.

இவர் தம்மை 'அபயானந்த பூஜ்யபாத சிஷ்யர்' என்று கூறிக் கொள்வதனுல். அபயா னந்தர் இவரது தீட்சாகுரு என்பது தெரிகிறது. நியாயகல்ப லதிகையின் முதலிலும் முடிவிலும், இவர் கோகரணேசுவரரைத் துதிக்கின்ருர். தமது பிரக்கிரியா மஞ்சரி (காசிகா வியாக் கியை) என்னும் நூலில் கோகரணத்தைக் காம தேவன் என்னும் அரசன் ஆண்டபொழுது (கி. பி. 1350), இவர் அந்நூலைச் செய்த தாகக் குறிப்பிட்டுள்ளார்.

(26) **இராமத்துவயாசார்யர் :** இவர் வேதாந்த கௌமுதியின் ஆசிரியர். இவரது காலம் கி. பி. 1515. இவர் விவரணக் கொள்கையைப் பின்பற்றியவர். ஜனுர்த் தனர் (ஆனந்தகிரி) என்பவரைக் குறிப் பிடுகின்ருர். ஆதலின் இவர் கி. பி. 1515-இல் வாழ்ந்தார் எனலாம்.

(27) **பிரத்தியக் சொரூபர் :** 'வித்தியா நதிமூலம் வித்தியாகுரும்' என்று பிரத்தியக் பிர காச பூஜ்யபாதர் என்ற தம் குருவைத் துதிக் கின்ருர். சித்தகாசிரியரின் தத்துவப் பிரதீபிகை என்னும் நூலுக்கு நயனப்பிரசாதினி என்னும் டீக்கை ஒன்றினை மட்டும் இவர் எழுதினுர். மகாவித்தியாநுமானம் இயற்றிய குலார்க்கபண்டி தர், மானமனேகரம் இயற்றிய வாதி வாகீசுவரர் ஆகியோர் இவருக்குச் சிறிது முற்பட்டு வாழ்ந்த வர்கள்.

(28) **சங்கரானந்தர் :** அனந்தாத்மர், வித்தியாதீர்த்தர் ஆகியோரின் சீடர். இவர் வித்தியாரண்யரின் குரு. ஆத்மபுராணம் அல்லது, உபநிடதரத்தினம் என்னும் நூலின் ஆசிரியர். இது செய்யுள் வடிவில் அமைந் துள்ளது. பகவத்கீதை உரை, பிரம்மசூத்திர விருத்தி, உபநிஷத தீபிகை, யதி அநுட்டான பத்ததி, விவேகசாரம், சுருதிதார்ப்பரிய நிர்ண யம் முதலிய பலநூல்களை இவர் இயற்றியிருக் கின்ருர்.

(29) **வித்தியாரண்யர் :** விசயநகரத்து முதலாம் அரிஹரர், முதலாம் புக்கர் ஆகி யோரின் குலகுருவாக விளங்கிப் புகழ்பெற்றவர். இவர்தம் அருளாசியினுலேயே விசயநகரப் பேரரசு அமைந்து வளர்ந்தோங்கியது என்பர். பஞ்சதசி, விவரணப் பிரமேய சங்கிரகம், திருக்கு திருசிய விவேகம், சீவன் முக்திவிவேகம் என் னும் நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. பஞ்ச தசி என்னும் நூல் பாரதிதீர்த்தரும் வித்தியா ரண்யரும் சேர்ந்து செய்தது என்று சிலரும், பாரதிதீர்த்தருக்கே வித்தியாரண்யர் என்று மற்ருெரு பெயர் உண்டு என்று சிலரும் சொல்வது உண்டு. இந்நூல் விவேக பஞ்சகம், தீபபஞ்சகம், ஆனந்த பஞ்சகம் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டதாய். மொத்தம் 15 பிர கரணங்களைக் கொண்டதாகலின், இதற்குப் பஞ்சதசி என்னும் பெயர் அமைந்தது. வேதாந்த நூல்களுள் பஞ்சதசி என்பது ஒப்புயர் வற்ற சிறப்பு இலக்கியம். அதன் கவிதையழகு எவர் உளத்தையும் கவரும். தமிழில் உள்ள மிக வும் புகழ்பெற்ற கைவல்லிய நவநீதம் என்னும் வேதாந்த நூல், வித்தியாரண்யர் இயற்றிய பஞ் சதசி என்னும் இந்நூலையே பெரும்பான்மையும் முதல் நூலாகக் கொண்டு அமைந்தது என்பது அறிஞர்கள் கருத்து.

(30) **கோவிந்தானந்தர் :** இரத்தினப் பிரபை இயற்றியவர். பத்மபாதர், பிரகாசாத்மன் ஆகியோர் கொள்கைகளில் திளைத்தவர். அநு பூதி சொரூபாச்சாரியரின் 'பிருகதார்த்த விவ ரணம்' என்னும் நூலில் மிகவும் ஈடுபட்டவர். இவர்தமது நூலில் பத்மபாதரைப் பெரிதும் பின் பற்றிச் செல்கின்ருர். அவரது பிரதிபிம்ப வாதத் தை உடன்படுகின்ருர். சில இடங்களில் வாச ஸ்பதி மிச்ரரோடு மாறுபட்டு, அவரை மறுத் துள்ளார்.

(31) **சங்கபாணி :** பிரம்மசித்திக்கு விரி வான உரை எழுதியுள்ளார். இவர் மலபார்

நம்பூதிரி பிராம்மணகுலத்தவர். தமது உரையில் வாசஸ்பதி மிச்ரரின் தத்துவ சமீட்சாவைப் பின்பற்றுகின்றார்.

(32) இலட்சுமிதரர் : அனந்தானந்த ரகுநாத யதியின் சீடர். நரசிம்மரின் மைந்தர். அத்துவைத மகரந்தம், ஸ்ரீமத்பாகவதம், பகவந்நாம கௌமுதி என்னும் நூல்களின் ஆசிரியர். பகவந்நாம கௌமுதிக்கு அநந்ததேவ பாரதி உரை எழுதினர். பிரம்மாண்ட பாரதி தாம் இயற்றிய வாக்கியசுதாவில், இவரது நூலை மேற்கோள் காட்டுகின்றார். இவர் முதலாம் தேவராயர் (கி பி. 1400) காலத்தில் இருந்தவர் என்றும், வித்யாரண்யரின் சகோதரியாகிய சியாமளாவின் புதல்வர் என்றும் சிலர் கூறுவர்.

விசயநகர்த் திருமலைராயர்: (கி. பி. 1567—75) காலத்தில் இருந்த இலட்சுமிதரர் என்பவர் இவரின் வேருவர் இவரது அத்துவைதரந்தம் 27 சுலோகங்கள் கொண்டது. கைவல்யானந்த யோகீந்திரரின் சீடர் ஆகிய சுயம்பிரபிரகாச யதி, இதற்கு உரை எழுதியுள்ளார். கண்ணபிரான் இவரது வழிபடு கடவுள். அனந்தானந்த கிருஷ்ணர் என்னும் தமது குருவையும் குறிக்கும் முறையில், இவர் ஸ்ரீ கிருஷ்ணனைத் துதித்துப் புகழ்ந்துள்ளார். அகம் பிரம்மாஸ்மி, ஆனந்தம் பிரம்மா, தத்துவமசி என்னும் மகாவாக்கியங்களை இவர் அழகுற விளக்கியிருக்கின்றார்.

(33) சதானந்தர் : 16-ஆம் நூற்றாண்டினர். வேதாந்த சாரம் இயற்றியவர். அத்துவைத பிரம்மசித்தி இயற்றிய சதானந்தர் என்பவர் இவரின் வேறு ஆவர். தமது நூலின் மங்கள சரணப் பகுதியில் அத்துவயானந்தர் என்பவரைத் தம்முடைய குருவாகப் புகழ்கின்றார். இவரது வேதாந்தசாரம் எளிய இனிய தெளிவான சிறந்த நூலாதலின் பல அயல் நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றது. இந்நூலுக்கு நரசிம்ம சரசுவதி, அபதேவர், இராமதீர்த்தர் ஆகியோர் முறையே சுபோதினி, பாலபோதினி, வித்துவந் மனோரஞ்சினி என்னும் உரைகளை எழுதியுள்ளனர். சிவனைப் பற்றிய கொள்கைகளில் பஞ்சதசியை இவர் தழுவுகின்றார்; ஆனால் மாயை பற்றிய கொள்கைகளில் அதனோடு மாறுபடுகின்றார். பஞ்சதசி மாயையும் அவித்தையும் வேறுவேறு என்கின்றது; இவர் மாண்டுக்கிய காரிகையினின்று தாம் எடுக்கும் அத்யாரோப அபவாதக் கொள்கையோடு இயைப்பதற்காக, மாயையும் அவித்தையும் ஒன்று என்று கொள்கின்றார். சாதன சதுட்டயம், சீவன் முக்திநிலை ஆகியவற்றை இவர் தெளிவுற விளக்கியுள்ளார். கௌடபாதரின் மாண்டுக்யகாரிகை, வித்யாரண்யரின் பஞ்சதசி, சங்கரரின் உபதேசசகஸ்ரி, சுரேசுவரரின் நைஷ்கார்மிய சித்தி ஆகிய நூல்களின் கருத்துக்களை, இவர் தம்முடைய நூலில் பெரிதும் தழுவிக் கொண்டுள்ளார்.

(34) சதானந்த காஷ்மீரகர் :

அத்துவைத பிரம்மசித்தி, சொரூபப் பிரகாசிகை என்னும் நூல்களின் ஆசிரியர். மதுசூதன சரஸ்வதி என்னும் புகழ் மிக்க ஆசிரியர் காட்டும் மேற்கோள்கள், இவற்றினின்றே எடுக்கப்பட்டன போலத் தோன்றுகின்றது. அத்வைத பிரம்மசித்தியில் நியாயவைசேடிகரின் ஆரம்பவாதம், சாங்கியரின் சற்காரியவாதம், மற்றும் மாத்தியமிகர், யோகாசாரர், வைபாடிகர், சௌத்திராந்திகர் என்னும் நால்வகைப் பௌத்தர்களையும், சமணர் உலகாயதர் ஆகியோர்களையும் மறுக்கின்றார். பேதம் பேதாபேதம் பற்றியும், அவிச்சையை ஒழிக்கும் முறை பற்றியும் விளக்குகின்றார். ஞானமும் கருமமும் பற்றி ஆராய்கின்றார்.

ஈசுவரனும் சீவனும்பற்றி மூன்றுவகையான கொள்கைகள் அத்துவைதத்தில் வழங்கும். அவற்றுள் பத்மபாதர் பிரகாசாத்மன் என்போர் பிரதிபிம்பவாதம் என்னும் கொள்கையைக் கடைப்பிடித்தனர். அவிச்சேதவாதம் என்பதனை வாசஸ்பதிமிஸ்ரர் கைக்கொண்டார். ஆபாசவாதம் என்பதனை சுரேசுவரர் தமது பிருகதாரண்ய வார்த்திகத்தில் விளக்கியருளினர். இம்மூன்றின் வேருக 'திருஷ்டி சிருஷ்டிவாதம்' என்னும் ஒரு கொள்கையும் உண்டு. இதனை ஏகசீவவாதம் எனவும் வழங்குவர். இந்நான்கினையும் பற்றி ஆராய்கின்ற இவர், இறுதிக்கொள்கையையே பெரிதும் தழுவுகின்றார். இவரதுநூல், வித்தியாரண்யரின் விவரண பிரமேய சங்கிரகத்துடனும், சிற்சுகாசாரியரின் தத்துவப் பிரதீபிகையுடனும் சமமாக வைத்துக் கருதத் தகுந்த சிறப்புடையது.

## (35) அப்பைய தீட்சிதர் :

இவர் 16-ஆம் நூற்றுண்டில் விளங்கியவர்-கி. பி. 1520 முதல் 1593 வரை எழுபத்துமூன்று ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். இவரது காலத்தில் விசயநகரப் பேரரசர் சதாசிவராயர் (கி. பி. 1542—1567) என்பவர் பெயரளவில் ஆண்டு வந்தார். இராமராயர் என்பவர் இவருக்கு ஆட்சித்துணைவராக இருந்து வந்தார். அவர் ஸ்ரீ தாதாசாரியார் (கி. பி. 1508—1583) என்னும் அரசகுருவின் ஆதிக்கத்திற்குப் பெரிதும் உட்பட்டிருந்தார். சதாசிவராயர், திருமலைராயர் (கி. பி. 1567—1574), அரங்கராயர் (கி. பி. 1574—1585), வேங்கடபதிராயர் (கி. பி. 1585) ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் ஸ்ரீ தாதாசாரியார் மிக்க செல் வாக்குப் பெற்றிருந்தார். அவரது ஆதிக்கத்தின் கீழ் வைணவ சமயம் தழைத்து மேலோங்கி இருந்தது. அக்காலத்தில் சைவசமயத்தின் தளர்ச்சியைப் போக்கி அது வளர்ச்சியடைவதற்கு அப்பைய தீட்சிதர் பெரிதும் பாடுபட்டார்.

அப்பைய தீட்சிதர் தாதாசாரியருக்கு 12 ஆண்டுகள் இளையவர். அவருக்குப் பிறகு 10 ஆண்டுகள் இவர் மேலும் வாழ்ந்திருந்தார். ஸ்ரீகண்டா சாரியர், அரதத்தாசாரியர் ஆகிய இருவரையும் போல, இவரும் ஒரு சிறந்த சைவ சமய ஆசாரியர் ஆவர். காஞ்சிபுரத்திற்கு அருகே உள்ள அடையப்பலம் என்பது இவர் தோன்றியருளிய தலமாகும். அங்குள்ள ஒரு கல்வெட்டு (கி. பி. 1582), 'சதுரதிக சதப்ரபந்த கர்த்தா' என்று இவரைப் புகழ்ந்து கூறுகின்றது.

தலைக்கோட்டைப் போருக்குப்பின் விசயநகர ஆட்சியின் சிறப்புக்குன்றியது. ஆங்காங்கு சிற்றரசர்கள் சிலர் ஆட்சி செலுத்த முற்பட்டனர். அவர்களில் தஞ்சையில் அரசுபுரிந்த செவ்வப்ப நாயக்கர், திருச்சிராப்பள்ளியில் அரசு செலுத்திய சின்னதிம்மநாயக்கர், வேலூரை ஆட்சிபுரிந்த சின்ன பொம்ம நாயக்கர் (கி. பி. 1549—1578) விசயநகரப் பேரரசராகிய பெனுகொண்டா வெங்கடபதிராயர் ஆகியோர், அப்பைய தீட்சிதரைப் பெரிதும் ஆதரித்துப் போற்றினர்.

அப்பைய தீட்சிதர் சைவசமயத் தத்துவக் கொள்கைகளை விளக்கி, அதன் வளர்ச்சிக்காகப் பெரிதும் பாடுபட்டார். ஆயினும் வைணவ சமயத்திலும் வெறுப்பின்றி, சமரச உணர்வுடன் அவர் மிக்க ஈடுபாடு கொண்டு விளங்கினர். வேதாந்த தேசிகர் அருளிய யாதவாப்யுதயம், பாதுகாசகஸ்ரம் ஆகிய நூல்களுக்குச் சிறந்த உரைகள் இயற்றியுள்ளார். காஞ்சிபுரம் அத்திகிரியில் உள்ள தேவப்பெருமாள் மீது வரதராஜஸ்தவம் என்னும் துதி நூலைப் பாடியுள்ளார். குவலயானந்தம் என்னும் அலங்கார நூலில் இவர் நாராயணனைத் துதித்துள்ளார். இரத்தினத்திரயப் பரிட்சை என்னும் நூலில் சிவபிரான் தேவி ஆகியோருடன் விஷ்ணுவுக்கும் பரப்பிரம்மத்துவம் உண்டு எனக் குறிப்பிட்டுள்ளார். தில்லைத் திருச்சித்திர கூடத் ஸ்ரீ தொட்டாச் சாரியர் என்பவரின் முயற்சியால் இராமராயர் காலத்தில் கோவிந்தராஜப் பெருமாள் எழுந்தருளுவிக்கப்பட்ட பொழுது, அந்நிகழ்ச்சிக்குப் பெரிதும் மகிழ்ந்து அரிஹர ஸ்துதி என்னும் இனியநூலை இவர் பாடியிருக்கின்றார். இதனால் இவரது பரந்த மனப்பான்மையும், சைவ வைணவ சமரசநோக்கமும் செவ்விதிற் புலப்படும்.

அப்பையர் ஒரு சிறந்த பல்கலைப்புலவர். நிரம்பவும் நூல்கள் எழுதியவர். ஒப்புயர்வற்ற நல்ல கவிஞர். அவரது கவிதையின் நடை திருத்தமும் கவர்ச்சியும் உடையதாகும். இவர் தம் கவித்திறன் மிகவும் வியக்கற்பாலது. சொற்கள் இயல்பாகவும் எளியனவாகவும் விருவிருப்பு மிக்கதாகவும் இருக்கும். பலதுறைகளில் இவர் நூல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய நூல்கள் பின்வருமாறு :—

(1) சிகாரிணிமாலை (2) சிவதத்துவ விவேகம் (3) சிவகர்ணாம்ருதம் (4) இராமாயண தாத்பரியசங்கிரகம் (5) பாரததாத்பரியசங்கிரகம் (6) பிரம்மதர்க்கஸ்தவம் (7) சிவமகிம்ந காளிகாஸ்துதி (8) சிவாத்வைத நிர்ணயம் (9) சதுர்மத சாரம் (10) நயமஞ்சரி (11) நயமணிமாலை (12) நயமயூக மாலிகை (13) நயமுக்தாவளி (14) நியாயரட்சாமணி (15) சித்தாந்தலேச சங்கிரகம் (16) விதி ரசாயனம் (17) குவலயானந்தம் (18) சித்திரமீமாம்சம் (19) துர்க்கா சந்திர ஸ்துதி (20) ஆதித்ய ஸ்தவரத்தினம் (21) ஆத்மார்ப்பணஸ்துதி (22) அபீத குஜாம்பா ஸ்தவம் (23) மானசோல்லாசம் (24) மார்க்கபந்து ஸ்தோத்திரம் (25) சிவார்க்க மணி தீபிகை

(26) ஆதித்ய ஸ்தவரத்னம் (27) நிக்கிரக அஷ்டகம் முதலிய பல நூல்கள் இவரால் இயற்றப்பட்டுள்ளன.

அமலானந்தர் என்பவரின் கல்பதரு என்னும் நூலுக்கு இவர் 'பரிமளம்' என்னும் உரை எழுதியுள்ளார். கல்பதரு என்பது வாசஸ்பதி மிஸ்ரர் என்பவர் இயற்றிய பாமதி என்னும் நூலுக்கு உரிய உரையாகும். பாமதி என்பதோ சங்கரர் இயற்றிய பிரம்மசூத்திரபாஷ்யத்தின் வியாக்கியானம் ஆகும். பிரம்மசூத்திரம் சங்கர பாஷ்யம், பாமதி, கல்பதரு, பரிமளம் என்னும் இவ்ஐந்து நூல்களும் வேதாந்தத் துறையில் மிகவும் புகழ்மிக்க சிறந்த நூல்களாகும். இவற்றை வேதாந்த பஞ்சகிரந்தி என அறிஞர்கள் வழங்குவர்.

இவர் தமது இறுதிக்காலத்தில் தில்லைக் கருகே வாழ்ந்துவந்தார். நாடொறும் தவருமல் தில்லை நடராசப் பெருமானை வழிபட்டு மகிழும் வழக்கமுடையவராக விளங்கினர். சித்தாந்த கௌமுதி, தத்துவ கௌஸ்துபம் என்னும் நூல் இயற்றிய பட்டோஜி தீட்சிதர் இவருடைய மாணவர். நீலகண்ட தீட்சிதர், சின்ன அப்பைய தீட்சிதர், சமர புங்கவ தீட்சிதர், குருராமகவி, பாலகவி, இராஜநாத டிண்டிம சர்வ பூமகவி ஆகியோர் தத்தம் நூல்களில், அப்பைய தீட்சிதரை மிகவும் அன்புடன் போற்றிப் புகழ்ந்து குறிப்பிட்டுள்ளனர். 19-ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த சிவானந்தயதி என்பவர், தீட்சிதேந்திர விஜயம் என இவரது வரலாற்றை ஒரு நூலாக இயற்றியுள்ளார். இவர் இயற்றிய நூல்களுள் சிவார்க்கமணி தீபிகை என்பது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பெற்றபோது, வேலூர்ச் சின்ன பொம்மநாயக்கர் என்பவர், இவருக்குக் கனகாபிஷேகம் செய்து சிறபித்தார் என்பர்.

உவமை என்னும் ஓர் அணியில் இருந்தே, ஏனைய பிற எல்லா அணிகளும் தோன்றுகின்றன என்று அறிஞர்கள் கூறுவர். ஆசிரியர் தொல்காப்பியருக்கும் இதுவே கருத்தாகும். அதனுலேயே தமது தொல்காப்பிய நூலின் பொருளதிகாரத்தில் உவமை அணி ஒன்றனை மட்டுமே தொல்காப்பியர் விளக்கியருளினர். உவமை அணி என்பதே பல்வேறு அணிகளுக்கும் நிலைக்களமாக விளங்குகின்றது என்பதனை சித்ரமீமாம்சை என்னும் தமது நூலில், அப்பைய தீட்சிதர் மிகவும் அழகுற விளக்கியுள்ளார். அதன் தமிழாக்கம் வருமாறு.

கற்பனை செறிந்த நல்ல
 கவிதையாம் அரங்கம் தன்னில்
பொற்புறும் உவமை என்னும்
 புகழ்மிகும் விறலி தானே
பற்பல வேடம் பூண்டு
 பண்பமை சுவைஞர் உள்ளம்
நற்பெரு மகிழ்ச்சி பொங்க
 நடனம்செய் தின்பம் நல்கும்!

நலமிகும் உவமை என்னும்
 நல்லெழில் விறலி தானே
பலவகைச் சிறந்த கோலம்
 பாங்குறப் புனைந்து போந்து,
கலைநிறைந் துயர்ந்து நிற்கும்
 காவிய அரங்கில் தோன்றிப்
புலவர்தம் உள்ளத் தின்பம்
 பொங்கிட நடிப்பள் நன்றே

— தமிழாக்கம், ந. ரா. முருகவேள்

அப்பைய தீட்சிதரின் மேற்குறித்த சித்திரமீமாஞ்சைச் சுலோகத்தின் பொருளையே பரிதிமாற் கலைஞர் என்னும் புனைபெயர் கொண்டு விளங்கிய திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் என்பவர், 'உவமை என்னும் தவலரும் கூத்தி, பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து, காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி, யாப்பறி புலவர் இதயம், நீப்பரும் மகிழ்ச்சி பூப்ப நடிக்கும்மே!' எனச் சிறப்புற மொழிபெயர்த் திருத்தலும் இங்கு அறிந்து இன்புறத்தக்கது.

(தொடரும்)

—ஆசிரியர்

# ‘தருமம் அறிந்தவன்’

மகாவித்வான் ஸ்ரீமத் பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்

## விராத வதம் :

விராதனென்னும் அரக்கனை வதம் செய்தது பெருமாளும் பிராட்டியும் கூடியிருந்த காலத்தில் தானே? கரன் தூஷணன் முதலிய பதினாலாயிரம் அரக்கர்களின் வதமும் பிராட்டியோடு கூடியியிக்கும் போது தானே நடைபெற்றிருக்கிறது? ஆகவே, பிராட்டியருகே யிருக்கும் போது பெருமாள் ஒருவரையும் வதஞ் செய்ததே கிடையாதென்று சொல்லுவது எப்படி பொருந்தும்? என்று சிலர் கேட்கக்கூடும். அவர்களுக்குச் சொல்லுகிறோம். விராதனுடைய பிரஸ்தாவம் ஆரணிய காண்டத்தில் இரண்டாவது சர்க்கத்தில் வருகிறது. அங்கே கதைப் போக்கு உள்ள விதத்தை நன்கு கவனிக்க வேணும். விராதன் வந்ததும் பிராட்டியைக் கொள்ளை கொள்கிறான். பிறகு அவளை விட்டுவிட்டு, இராமனையும் இலக்குமணனையும் தூக்கிக்கொண்டு வேறொரு வனத்தில் நுழைகிறான். அப்போது பிராட்டி தான் தனித்து நின்று போனதைக் குறித்த புலம்புகிறாள். இவ்விஷயம், ஆரணிய காண்டம் மூன்றாவது ஸர்க்கத்தின் முடிவிலும் நான்காவது ஸர்க்கத்தின் முதலிலும் ஸ்பஷ்டமாகவுள்ளது. சீதை தன்னைத் தனியாக விட்டுவிட்டு ஸ்ரீராம லக்ஷ்மணர்களை விராதன் வேறொரு காட்டுக்குத் தூக்கிச் சென்ற போது ‘ஓ அரக்கனே! இனி என்னைச் செந்நாய்களும் புலிகளும் சிறுத்தைகளும் கொன்று தின்று விடும்; அவ்விருவரையும் விட்டு என்னைக் கொண்டு போகலாகாதா?’ என்று கதறுகின்றாள். இதனால் விராதவதம் செய்யப்படுகிற காலத்திலும் இடத்திலும் பிராட்டியின் சந்நிதான மில்லை என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. இங்கு மற்றொரு விஷயம் முக்கியமாகக் கவனிக்கத் தக்கதுண்டு; ராமலக்ஷ்மணர்கள் விராதனை எவ்வளவு நலிந்தும் அவன் மடியவே யில்லை. பல அம்புகளைப் பிரயோகித்தும், இருவரும் இரண்டு கத்திகளினால் வெட்டியும் தரையில் தள்ளிப் பலவாறு உதைத்துங்கூட அவ்வரக்கன் மரணமடையவேயில்லை; பிறகு அவன் எவ்வாறு மரணம் அடைந்தான் என்னில்; அவன் தனது வரலாறுகளைத் தானே சொல்லிக் கொண்டு, ‘இராமா’ இப்பொழுது உன்னால் நான் ஒரு சாபத்தின்று விடுபட்டவனாயினேன் என்னைப் பள்ளம் வெட்டிப் புதைத்து விடு’ என்றான். பிறகு அவ்விதமே செய்யப் பட்டிருக்கிறது. இதனால், விராதன் தன் வதையைத் தானே வேண்டிச் செய்வித்துக் கொண்டான் என்பது விளங்குகின்றது இதுவும் பிராட்டியின் முன்னிலையில் நடைபெறவில்லை என்றும் தெரிந்து கொள்வது.

## கரதூஷண வதம் :

158573

இனி, பிராட்டியின் முன்னிலையிலேயே கரதூஷணாதிகளின் வதம் நடந்திருக்கிறதே என்கிற ஆட்சேபத்திற்கும் பரிகாரம் கேண்மின்; ஜனஸ்தானத்து ராக்ஷசப் பெருஞ்சேனைகள் இராமனைக் கிட்டி வந்த போது இராமன் லக்ஷ்மணனை நோக்கிக் கூறியதாவது, ‘லக்ஷ்மணா! நீ அம்புகளையுங் கொண்டு சீதையுடன் அப்பால் போய்விடு; அதோ மரங்களால் மறைக்கப்பட்டு நுழையக் கூடாமலிருக்கின்ற குகைக்குள் சீதையையும் அழைத்துக் கொண்டு சென்று அவளைக் காத்துக் கொண்டிரு; தாமதம் செய்யாமல் விரைந்து செல். இத்தனை யரக்கர்களையும் நீயே வதைக்க வல்லையாயினும் இப்பொழுது நானே இவர்களை யெல்லாம் கொலை செய்யக் கருதியிருக்கிறேனாதலால் நீ சீதையுடன் இவ்விடம் விட்டுப் புறப்பட்டுப் போய்விடு’ என்று, அதன் பிறகு லக்ஷ்மணன் சீதையுடன் சென்று குகைக்குள் நுழைந்த பின்பே இராமன் கவசங்களைத் தரித்து வில்லையும் அம்புகளையும் எடுத்துக் கொண்டு போர் புரிய எழுந்தனன் என்று அரண்ய காண்டத்து இருபத்து நான்காவது சர்க்கத்தில் சொல்லப்பட்டுள்ளது. இது

கொண்டே வேதாந்த வாசிரியர் ரகுவீரகத்யத்தில் கரவதத்தைக் கூறும் பிரகரணத்தில் 'அஸஹாய சூரன்' என்றது. ஆகவே, பிராட்டியின் சந்நிதானம் இல்லாத இடத்தேதான் கரதூஷணுதிகளின் வதம்நடந்தது என்பது விளங்கிற்று

மாரீச வதம் :

இதற்கடுத்தபடியாக மாரீசவதம் நடந்திருக்கிறது. அப்போது பிராட்டியை விட்டுப் பெருமாள் (மாரீசன் பின்னே) நெடுந்தூரம் எழுந்தருளி யிருக்கிருரென்பது அனைவரும் அறிந்த விஷயம். அவனை வதைக்க வேண்டியிருந்த படியாலும், பிராட்டி அருகேயிருந்தால் அவன் வதம் பெறமாட்டானுகையாலும், இதற்காகவே அவனை வெகுதூரம் கொண்டு போனுர் பெருமாள் என்கிற மருமம் இங்கு உண்மையாகவும் முக்கியமாகவும் உணரத்தக்கது.

சூர்ப்பணகா பங்கம் :

விராத வதத்திற்கும் கரதூஷணுதி வதத்திற்கும் இடையில் சூர்ப்பணகா பங்கம் நடந்திருக்கின்றது. பெருமாள் தாடகையை வதஞ்செய்தது போல் சூர்ப்பணகையையும் வதஞ்செய்து முடித்திருக்கலாம். அப்படி செய்திருக்குமளவில், மேலே பெருந் தீங்கு விளையாமலுமிருக்கும். அவளை அங்கபங்கம் செய்து உயிரோடு விட்டதனுலன்ரே அவள் இலங்கையிற் சென்று முறையிட்டுச் சீதையின் அப்ஹாரத்திற்குக் காரணமாயினள். அவளைப் பஞ்சவடியிலேயே குழிவெட்டிப் புதைத்திருந்தால் மிகவும் நலமாயிருக்குமே ஸமர்த்தரான பெருமாள் ஏன் அது செய்யவில்லையென்று கேட்கில், பிராட்டி அருகேயிருந்ததே இதற்கு இடையூருயிற்றென்பது முக்கியஹேது. 'முக்கிய ஹேது' என்கையாலே அமுக்கிய ஹேதுவுமொன்றுண்டென்று தெரிய வருமே ; அதுவென்? என்னில் ; தாடகா வதத்தை விச்வாமித்திர முனிவர் கட்டளையிட்டபடியாலே செய்தார் ; அங்ஙனம்சூர்ப்பணகையின் வதத்தைக் கட்டளையிட யாரும் இல்லாமையினுல் அது நடைபெறவில்லை என்பதேயாம். இதுவுமொரு சமாதானம் எனினும், பிராட்டி அருகேயிருந்ததே வதஞ்செய்யாமைக்கு முக்கிய காரணம், என்று கொள்ளத்தக்கது.

வாலி வதம் :

பிராட்டி பெருமானை விட்டுப் பிரிந்து இலங்கை புக்கபின்பு, வாலிவதம் என்கிற மிகப் பெரிய காரியம் நடந்திருக்கின்றது. இது நியாயமா அநியாயமா? என்கிற விசாரணை இன்றைக்கும் அருது நிகழ்ந்து வருகின்றது. வேதாந்த குரு ஸங்கல்ப ஸூர்யோதத்தில் 'நிரவதி குணக்ராமே ராமே' என்னும் சுலோகத்தில் இதைச் சுட்டிக் காட்டியுமிருக்கிருர். வாலி வதம் நியாயமானதே என்று பண்டிதர்கள் எவ்வளவு பொருத்தமான சமாதானங்கள் சொன்னுலுங்கூட, அதை ஏற்றுக் கொள்வது மேட்டுமடையாகவே காண்கிறது. 'என்னை எப்படி நீ கொன்ருய்?' என்று வலிதாக ஆட்சேபித்த வாலி தானே தன்னை வதம் செய்ததற்குப் பொருத்தமான காரணம் இருப்பதைக் கண்டு பிடித்துத் தானே கூறிவிட்டதாகக் கம்பர் எழுதி வைத்துள்ளார் ; 'தேவியைப் பிரிந்த பின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை' என்பதே அது. 'இராமா! இப்போது பிராட்டி அருகேயிருந்தாளாகில் அநீதியான இவ்வதத்தை நீ செய்திருக்கமாட்டாய் ; அவள் அருகிலில்லாதது காரணமாகவே இது செய்யத் துணிந்தாய்' என்று வாலி கூறினவிது மிகப் பொருத்தமாகவே யுள்ளதன்ரே! இதுவொரு சமத்காரமான வார்த்தை போலும் என்று நினைக்காமல், இது தான் பரமார்த்தம் என்றே நினைக்கத் தக்க தன்ரே? பிராட்டி அருகேயில்லாத சமயங்களில் நடந்த வரலாறுகளை ஆராய்வது போலவே அவள் இராமனின் அருகே யிருக்குஞ் சமயங்களில் நடந்த வரலாறுகளையும் ஆராய வேணும். அடுத்து அதை ஆராய்கிரேம்.

காகத்தைக் காத்தது :

சூர்ப்பணகையின் விஷயமொன்று கீழே தெரிவிக்கப்பட்டது. அதற்கும் முந்தியதான காகத்தின் கதையைக் கொள்வோம். இது சித்திரகூட மலைச் சாரலில் நடந்தது. அயோத்யா காண்டத்தில் கூறப்படவேண்டிய கதை இது. ஆனுல், இது அங்குக் கூறப்படவில்லை. சுந்தர காண்டத்தில் முப்பத்தெட்டாவது சர்க்கத்தில் பிராட்டி அனுமானிடம் அடையாளமாகச் சொல்லி யனுப்புவதாக அமைந்துள்ளது அங்குச் சொல்லப்பட்டிருக்கிற விதம் யாதெனில் 'அனுமானே! முன்பு சித்திரகூட பர்வதத்தின் வடகிழக்கு மூலையிலுள்ள தாழ்வரையில் ஏகாந்தமானதோர் இடத்தில் வாழ்ந்திருக்குங்கால் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சமயம் நான் நீரில் விளையாடிக் களைப்புற்று இராமனது மடியில் உட்கார்ந்திருக்கையில் ஒருகாகம் மாமிசத்தின் விருப்

பத்தினுல் என் மார்பினிடையில் மூக்கால் குத்தியது. நான் எவ்வளவு அதட்டி யோட்டியும் அது போகாமல் என் தனங்களைக் குத்திக் கொண்டு அங்கேயே மறைந்திருந்தது. அதைக் கண்டு இராமன் என்னைப் பரிகசிக்கையில் நான் வெட்கமும் கோபமும் காட்டினேன். பிறகு இராமன் என்னை நல்வார்த்தைகளால் சமாதானப் படுத்தினன். நான் இளைப்புற்று இராமனது மடியில் படுத்துறங்கினேன். தூக்கந்தெளிந்து நான் எழுந்திருக்கையில் இராமனும் என் மடி மேல் படுத்துக் கண்வளர்ந் தருளினன் அப்பொழுது அக்காகம் மீண்டும் அவ்விடம் வந்து எனது மார்பிடையில் அதிகமாகப்பிறிப்புண்படுத்தியது அந்தப் புண்ணினின்று பெருகிய ரத்தத்தினுல் ராமன் நனைந்தனன். பிறகு என்னுலெழுப்பப்பட்ட இராமன் எனது கஷ்டத்தைக் கண்டு மிகச் சீறித் தனது தர்ப்பாசனத்தினின்றும் ஓர் தர்ப்பத்தை யெடுத்து அதைப் பிரமாஸ்திர மந்திரங்களினுல் மந்திரித்து அக்காகத்தின் மேல் எய்தனன். அக்காகம் இந்திரனது மகனும். அவனைப் பிரமாஸ்திரம் ஆகாயத்தில் துரத்திக்கொண்டே போயிற்று. அக்காகம் தன்னை எவரேனும் காப்பாற்றுவாரா வென்று மூவுலகும் திரிந்தது. தந்தை தாயார் தேவர் முனிவர் முதலிய யாவரும் கைவிட்டதனுல் முடிவில் இராமனிடமே வந்து சேர்ந்தது. சரண்யனுன ராமன் கருணையினுல் கொல்லாது விட்டனன்; ஆனுலும் தனது பிரமாஸ்திரம் வீணுகாதாகையால், அக்காகத்தின் விருப்பத்தின்படி அதன் வலதுக் கண்ணைக் குருடாக்கி உயிரோடு விட்டனன். பிறகு காகம் தன்னிருப்பிடம் சென்று சேர்ந்தது. என்றிங்ஙனே பிராட்டி கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிராட்டி விஷயத்தில் காகத்தினுடைய அபராதம் வலிதா? இராவணனுடைய அபராதம் வலிதா? என்று ஆராய்ந்துபார்க்குமளவில், இராவணனுடைய அபராதம் சிறிது, காகத்தின் அபராதமே மிகவும் வலிது என்று நிர்ணயிக்கத் தட்டில்லை. திரு மேனியை நலிந்து உதிர வெள்ளம் பெருகும் படியான மகா அபராதத்தை இராவணன் செய்ய வில்லையே! இதை மணவாள மாமுனிகளும் திருமந்திரார்த்தத்தில் விளங்கக் காட்டியருளினர். பிராட்டியைக் கவர்ந்து சென்ற இராவணன் இராமபிரானேடு போர் புரியும் போதும் பிராட்டியை அசோக வனத்தில் வைத்திடாமல் அருகிலேயே வைத்துக் கொண்டு யுத்தம் நடத்தி யிருந்தானுகில், காகம் போலவே அவனும் உயிர் பெற்றே உய்ந்திருப்பன் என்பது நம்ஆசாரியர்களுக்குத் திண்ணமான நம்பிக்கை. ஆகவேதான், 'இவள் சன்னிதியாலே காகம் தலை பெற்றது' என்றவுடனே, 'அதில்லாமையாலே இராவணன் முடிந்தான்' என்றருளிச் செய்தார் பிள்ளைலோகாசாரியர்.

## தடையும் விடையும் :

பிராட்டி அருகே யிருந்தால் மட்டும்போதுமா? சரணுகதி செய்தாலன்ருே பெருமாள் ரட்சிக்கக் கூடும். காகம் சரணுகதி செய்த படியாலன்ருே உயிர் பெற்றது? 'த்விதா பஜ்யேயமப்யவம்ந நமேயம் து கஸ்யசித்' என்று இராவணன் சரணுகதி செய்ய மாட்டானே; அப்படிப் பட்டவனுக்கு அருகே பிராட்டி இருந்துதான் என்ன பயனுகும்? என்றிப்படி சிலர் கேட்கக் கூடும். அவர்களுக்குச் சொல்லுகிருேம். 'காகம் சரணுகதி செய்தபடியினுல் உயிர்பெற்றது என்று நினைப்பது பொருத்தமற்றது. காகம் மூவுலகும் திரிந்தும் எங்கும் கால்பாவி நிற்க இடம் பெருமையாலே தரிப்பற்றுக் கீழே விழுந்த அத்தனையே யொழிய, பெருமாள்பக்கலில் சரணுகதி செய்ய வேணும் என்கிற எண்ணத்தோடு வந்ததன்று. 'புரத பதிதம் தேவீ தரண்யாம் வாயஸம்' என்று பாத்மபுராணத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லிற்று. இராமாயணத்திலும் 'ஸ தம் நிபதிதம் பூமௌ' என்று தரிப்பற்றுத்தரையில் விழுந்த மாத்திரமே சொல்லிற்று. ஆளவந்தார் ஸ்தோத்திரத்தில் (93) 'ரகுவர! யதபூஸ்த்வம் தாத்ருசோ வாயஸஸ்ய ப்ரணத இதி தயாளு:' என்றவிடத்து வியாக்கியானத்தில்—வேதாந்த குரு—'காகம் நமஸ்கரித்து சரணுகதி செய்யவில்லை யென்றும் கருணு காகுத்ஸ்தனுடைய திருவுள்ளத்தினுலே சரணுகதனுகக் கொள்ளப் பட்ட வித்தனை' என்றும் நன்கு காட்டியுள்ளார். இதைப்பற்றின விரிவு மற்ருெரு கட்டுரையிலாகும். காகம் உயிர் பெற்றது பிராட்டியினுலேயே. எனத் தெளிக.

# மகாபாரதம்

அருண்மொழியரசு

(திருமுருக. கிருபானந்தவாரியார் சுவாமிகள்)

அரங்கேற்றம் :

யுதிஷ்டிரர் தேர்ப்போரில் வல்லவரானார். பீமனும், சீறின மனமுள்ள துரியோதனனும் கதைப்போரில் வல்லவர்களாக ஆனார்கள். நகுலன் குதிரைப் போரில் வல்லவனாக ஆனான். சகாதேவன் வாட்போரில் வல்லவனானான். அர்ச்சுனன் எல்லாவற்றிலும் வல்லவனாக ஆனான். மழை ஒன்று போல்தான் பொழிகின்றது. காய்ந்த மணலில் வீழ்ந்த மழை சுவறி விடுகின்றது. தாமரை இலையில் வீழ்ந்த மழை முத்துப்போல் காட்சி தருகின்றது. முத்துச் சிப்பியில் விழுந்த மழை விலையுயர்ந்த முத்தாக விளைகின்றது. அதுபோல் துரோணர் ஒன்று போலவே தான் உபதேசிக்கின்றார். சிலரிடம் மணலில் வீழ்ந்த நீர்த்துளிபோல் அப்போழுதே மறந்து போகின்றது. சிலரிடம் தாமரையிலை நீர்போல் சிலகாலம் தங்கியிருக்கின்றது. அர்ச்சுனனிடம் மட்டும் சிப்பியில் விழுந்த நீர்போல் வித்தை மெருகுவிட்டு ஒளி செய்து சிறப்புப் பெற்றது. அர்ச்சுனனுக்கு வித்தை மிகுந்தது. துரியோதனனுக்குப் பொருமை மிகுந்தது.

எல்லோருக்கும் வித்தை நிறைவு பெற்றது. துரோணர், திருதராஷ்டிரன், பீஷ்மர், விதுரர், சோமதத்தன், பாகுலிகன் முதலிய மன்னர்களைப் பார்த்து, "உங்கள் குமாரர்கள் சகல வித்தையிலும் தேர்ச்சி பெற்றிருக்கின்றார்கள். இனி அரங்கேற்றம் நடைபெற வேண்டும். அவர்களுடைய வித்தையை நீங்கள் கண்குளிரக் காண்பீர்களாக" என்றார்.

திருதராஷ்டிரன் "ஆசாரியரே! தாங்கள் இந்தச் சிறுவர்கள் பொருட்டு மிகுந்த முயற்சி செய்தீர்கள். வருத்தத்தையடைந்தீர்கள். இரவு பகலாக உழைத்து இவர்களைக் கலைவீரர்களாகச் செய்தீர்கள். நீங்கள் என்ன கட்டளையிட்டாலும், நாங்கள் செய்யக் காத்துக் கொண்டிருக்கின்றோம். இக்குமாரர்களின் வில் விநோதங்களைக் காண நான் நற்றவம் புரிந்தேனில்லை. கண் படைத்தவர்க்கே அப்பெரிய வாய்ப்புக் கிடைத்துள்ளது." என்று கூறிவிட்டு "விதுரனே! ஆசாரியர் எதைச் சொல்லுகின்றாரோ, அதை உடனே செய்" என்று கட்டளையிட்டான்.

துரோணர், திருதராஷ்ரடினிடத்திலும் விதுரரிடத்திலும் அனுமதி பெற்று, அத்தினபுரத்துக்கு வடக்கே, விசாலமான மேடுபள்ளமில்லாத ஒரு இடத்தைச் சிற்பிகளை விட்டு அளக்கச் செய்தார். அரங்கமண்டபத்தை அமைத்தார். நாள் திதி நட்சத்திரம் கரணம் யோகம் எல்லாம் நன்மையாக இருக்கும்போது, அரங்கேற்ற மண்டபத்தில் வீரதேவதையை நிறுவினார். அதைச் சுற்றிப் படிப்படியாக உயர்ந்துள்ள ஆதனங்களை நிரம்ப அமைக்கச் செய்தார். அரங்கேற்ற நாளை நியமித்து நகரம் முழுவதும் பறைசாற்றச் செய்தார்.

குறித்த நாளில் எல்லோரும் அந்த இடம் போய்த் தக்க இடங்களில் அமர்ந்தார்கள். காந்தாரி குந்தி முதலிய அரசமாதேவியர்களும், தகுதியுள்ள அந்தப்புரத்துப் பெண்களும், நகரத்துள்ள மாதர்களும், ஒருபுறத்தில் அமர்ந்தார்கள். பூரிசிரவா, புகழ்பெற்ற பாகுலீகன், சோமதத்தன், பீஷ்மர், விதுரர் முதலிய அனைவரும் அமர்ந்தார்கள். பட்டினத்து மக்கள் மிகநெருங்கி இருந்தார்கள். உயர்ந்த ஆதனத்தில் திருதராஷ்டிரன் இருந்தான்.

அம்மண்டபம் முத்துச்சரங்கள் தொங்கவிட்டு, பூமாலைகளால் அலங்கரிக்கப் பெற்று வெகு அழகாக இருந்தது. அங்கே கூட்டம் அலையடங்கிய கடல்போல் இருந்தது. ஒரு புறம் வாத்தியங்கள் முழங்கின. வெண்மையான தாடியும் மீசையும் வெண்மலரும் வெள்ளையுடையும் உடைய துரோணாசாரியர், சந்திரன் வானில்

விளங்குவதுபோல், அங்கு வந்து வியாசருடைய உத்தரவு பெற்று வீரதேவதைக்குப் பூசை செய்தார். மறையவர்கள் மந்திரங்களை மொழிந்தார்கள். திருதராஷ்டிரன், கிருபருக்கும் துரோணருக்கும், பொன் முத்து இரத்தினம் பட்டு இவைகளைக் குருதட்சிணையாகத் தந்தான். ஏவலர்கள் ஆயுதங்களைக் கொணர்ந்து வைத்தார்கள்.

யுதிஷ்டிரர் முதலிய அரசகுமாரர்கள், இளங்கதிர்களைப்போல் அங்குவந்து பெரியோர்களை வணங்கி நின்றார்கள். செஞ்சந்தனம் செம்மலர்கள் அணிந்த அக்குமாரர்கள், முன்னமே பூசை செய்துவைத்துள்ள ஆயுதங்களைத், தாங்களே தங்கள் கைகளால், சிவந்த சந்தனமும் சிவந்த மலர்களும் இட்டுப் பூசித்தார்கள். கவசமும், உடும்புத்தோலால் செய்த விரலுறைகளும், தூணிகளையும் கட்டிக் கொண்டு, பெரியவன் சிறியவன் என்ற முறைப்படி அணியணியாக நின்றார்கள்.

ஆசாரியர் அனுமதி கொடுத்தபின், யுதிஷ்டிரர் சிலம்பச்சாலையில் நின்று வில்லையெடுத்து வளைத்து, நாணொலி செய்து, அங்குள்ளவரை மூர்ச்சிக்கச் செய்தார். கணைகளைச் சொரிந்தும், அவைகளை விலக்கியும், திசைகளை மறைத்தும், தமது திறமையைக் காட்டினார். இதுபோல் மற்றக் குமாரர்களும் முறையே, தம் திறமையைக் காட்டினார்கள். யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர், வாட்போர், கதைப்போர் முதலிய பலப்பல போர்த்திறங்களைக் காட்டினார்கள். அவ்வப்பொழுது கூட்டத்தில் மிகுந்த கரமுழக்கம் ஏற்பட்டது.

திருதராஷ்டிரனுக்கு விதுரரும், காந்தாரிக்குக் குந்தியும், அவ்வப்போது இன்ன இன்னார், இப்படி இப்படி இப்போது, இன்ன இன்ன செயல்களைச் செய்கின்றார்கள் என்று அறிவித்தார்கள்.

பீமனும் துரியோதனனும் கதையை ஏந்தி, இரு மகாசிம்மங்கள் நிற்பது போல் நின்று சுழன்றும், வலமும் இடமும் திரிந்தும், மிக வேகமாகத் தாக்கியும் வித்தையைக் காட்டினார்கள். அப்போது கூட்டத்தில் இருவகையாகப் பிரிந்து "துரியோதனா நீ வெற்றிபெறுக" "பீமசேனா நீ வெற்றி பெறுக" என்ற குரல்கள் எழுந்தன. இந்த வகையில் கிளர்ச்சியதிகப் பட்டதால், ஆச்சாரியர் "அசுவத்தாமா இதை நிறுத்து" என்று கட்டளையிட்டார். அசுவத்தாமர் "பீமா! துரியோதனா! குருவின் கட்டளை, வித்தையைக் காட்டியது போதும் நில்லுங்கள்" என்றார். பிரளயக் காற்றினால் கொந்தளிக்கின்ற இரண்டு கடல்கள் பெருங்கரைகளுக்கு அடங்குவதுபோல், பீமனும் துரியோதனனும் அடங்கி நின்றார்கள்.

அதன்பின் துரோணர் அவையின்முன் னின்று, "என் புதல்வனைவிட எனக்கு அன்புடையவனும், ஆயுதங்கள் அனைத்திலும் வல்லவனும், உபேந்திரனாகிய நாராயணருக்கு நிகரானவனும் ஆகிய இந்தப் பார்த்தனுடைய வில் விநோதத்தைப் பாருங்கள்" என்றார்.

விஜயன் வில்லை யேந்திக்கொண்டு, பொன்மயமான கவசத்தைத் தரித்து, மின்னலோடும் கதிரவனோடும் கூடிய சந்தியா காலத்துச் சிவப்பு மேகம்போல் காட்சியளித்தான். அவையில் ஒரு மலர்ச்சியுண்டாயிற்று. கண கண வென்று வாத்தியங்கள் முழங்கின.

"இவன் சிறந்தவன்; இவன் சீலம் உள்ளவன்; இவன் வில்லாளிகள் எல்லோரிலும் மேலானவன்; இவன் ஒழுக்கமும் உறுதியும் உடையவன்; இவன் குருகுலத்தைக் காப்பாற்றுகின்றவன். இவன் மேருமலையையும் பிளப்பவன்" என்ற சொற்கள் கூட்டத்தில் எழுந்தன. குந்தியின் மார்பில் பால்சுரந்தது. ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். அப்போது கூட்டத்தில் எழுந்த சலசலப்பான ஒலியைக் கேட்ட திருதராஷ்டிரன் "விதுரா! விண்ணைக் கிழிப்பது போன்ற இந்த ஒலிக்குக் காரணம் யாது?" என்று வினவினான். விதுரர், "அண்ணா! இப்போது பற்குனன் அரங்கத்தில் இறங்கியிருக்கின்றான். அதனால் இந்த ஒலி ஏற்பட்டுள்ளது" என்றார். "குந்தி பாக்கியசாலி" என்றான் அம்மன்னன்.

அர்ச்சுனன் அக்கினிக்கணை விடுத்து, நெருப்பு மழையை யுண்டாக்கினான். உடனே வருணப்படை விடுத்து, நீர் மழையை உண்டாக்கி நெருப்பைத் தணித்தான். வாயுப்படை விடுத்துக் காற்றை ஓங்கி வீசவைத்தான். நாகாஸ்திரத்தால் காற்றை யடக்கினான். பர்வதாஸ்திரத்தை விட்டு எங்கும் மலைகளை யுண்டாக்கி அவையிலுள்ளவர்களை அஞ்சவைத்தான். உடனே வச்சிராஸ்திரத்தை யேவி மலைகளைத் துகளாக்கினான். நாகாஸ்திரத்தைக் கருடாஸ்திரத்தாலும், மாயாஸ்திரத்தை ஞானாஸ்திரத்தாலும் மாற்றினான். எங்கும் ஒரே கணைமய

மாகச் செய்தான். ஒரே கணத்தில் அந்தர்த்தானம் என்னும் அஸ்திரத்தால் தானே மறைந்தான். கணத்துக்குக் கணம் அங்கும் இங்குமாகத் தேரில் காணப்பட்டான். மற்றும் வாள் கதை மல்யுத்தங்களையெல்லாம் தனித்தனியே காட்டிச் சபையோர்களைத் திகைக்கவைத்தான். காற்றில் தொங்கவிட்டு ஆடிக் கொண்டேயிருக்கும் மாட்டுக் கொம்பில் தவருமல் இருபத்தொரு தொளைகளைப் பாணங்களால் உண்டாக்கினன். இப்படிப் பலப்பல அற்புதமான காரியங்களைச் செய்தான். அவையில் கரக்கம்பம் அடிக்கடி தோன்றியது.

அரங்கேற்றம் முடிந்தது என்று, வாத்திய ஒலி ஓய்ந்திருக்கின்றபோது ஒருபுறம் ஒரு பேரொலி எழுந்தது. மலைபிளக்கின்றதா? மண் வெடிக்கின்றதா? என்ற எண்ணம் எல்லோருக்கும் உண்டாகியது.

உடன்பிறந்த கவசகுண்டலங்களால் விளங்குகின்றவனும், குணங்களாலும் அழகினாலும் கொடையினாலும் வீரநடையினாலும் நிகரில்லாதனுமாகிய, கர்ணன் வந்து தோள்தட்டி நின்று இரு ஆசாரியர்கட்கும் வணக்கஞ் செய்தான். அவனும் துரோணரிடம் கல்வி பயின்றான். ஆதலின் அரங்கேற்றத்தில் அவனும் பங்கு பெறலானான். சபையில் உள்ளவர்கள் அவனுடைய வீர தீரத்தைக் கண்டு கண்கொட்டாமல் பார்த்தார்கள். ஆசாரியருடைய அனுமதி பெற்றுக் கர்ணன் வில்லை வளைத்து அர்ச்சுனன் செய்த அஸ்திர ஜாலங்களைச் செய்தான்.

'' துரியோதனன் கரங்களைத் தட்டி அவனைத் தழுவி நீ எங்களுக்குத் தலைவன். எங்களைக் காப்பாற்றுபவன். உன் நண்பன் என் நண்பன்; உன் பகைவன் என்பகைவன் '' என்று சொல்லிக் கொண்டாடினான்.

கர்ணன் கர்வங்கொண்டு '' அர்ச்சுனா! நீ அதிகம் தெரித்தவனாக எண்ணிக்கொள்ளாதே. வா; நீயும் நானும் சிறிது தொந்த யுத்தம் புரிவோம் '' என்றான். அர்ச்சுனன் "நான் கர்வப்படவில்லை. நீதான் கர்வப்பட்டுப் பேசுகின்றாய். என் கணைகளால் நீ அடிபட்டு, அழைக்கப்படாமல் வந்தவனும், கேட்கப்படாமல் பேசுகின்றவனும் அடைகின்ற வுலகையடைவாய் '' என்றான். கர்ணன் ''அர்ச்சுனா! சபை எல்லோருக்கும் பொது. உன் தலையை ஒரே பாணத்தால் எடுப்பேன் '' என்றான்.

அர்ச்சுனன் உருத்திர மூர்த்தியைப் போல் சீறி, வில்லுடன் எதிர்த்தான். துரியோதனன் தூண்டக் கர்ணனும் எதிர்த்தான். மேலே இந்திரனும் சூரியனும் தங்கள் தங்கள் மைந்தர்களின் திறத்தைக் காண ஆசைப்பட்டார்கள்.

அப்போது கிருபாசாரியர் இதை வளரவிடக் கூடாது என்று கருதி, '' கர்ணா! தாய் தந்தையரின் பேர் தெரியாத நீ சிறந்த மன்னவன் மகனுடன் தொந்தயுத்தம் புரிவது தக்கதன்று '' என்றார்.

அப்போது கர்ணன் நாணத்தால் தலை குனிந்தான். துரியோதனன் ''ஆசாரியரே! நீர் பேசியது முறையன்று. ஞானிகட்கும், கற்புள்ள காரிகையர்க்கும், கற்றவர்க்கும், வீரர்க்கும் குலத்தைப் பற்றிப் பேசக்கூடாது. அரசன் அரசனல்லாதவனோடு எதிர்ப்பது கூடாது என்றால், நான் இந்தக் கர்ணனை அங்கதேயத்து அரசனாக்குகின்றேன்'' என்று, அப்போதே கர்ணனை முடிசூட்டி அங்க நாட்டுக்கு அரசனாக்கினன். அரசர்க்குரிய சின்னங்களையெல்லாம் அணிந்து, கர்ணன் வெகு அழகாகக் காட்சியளித்தான்.

தேரோட்டுகின்ற அதிரதன் என்பவன், மேலாடை நழுவி வேர்த்து உடம்பு நடுங்கி, தடியைப் பிடித்துக்கொண்டு அங்கு வந்தான். தன் மகன் அங்க நாட்டரசன் ஆனதைக்கண்டு மகிழ்ந்து அவனைத் தழுவிக்கொண்டான். கர்ணனும் அவனைத் தந்தைபோல் மரியாதை செய்து பணிந்தான்.


பீமன் இதைக்கண்டு ''கர்ணா'' என் தம்பியைக் கொல்லுவதாகக் கூறினாயே! நெருப்பின் அருகில் இருக்கும் நெய்யை நாய் குடிக்க முடியாது. அதுபோல் நீ அங்கநாட்டை யாளத் தகுதியில்லாதவன், சாட்டைக்குச்சியை எடுத்துக் கொண்டு தேரோட்டச் செல்'' என்று கூறிச் சிரித்தான்.

துரியோதனன் சீற்றமுற்று ''பீமா! மகாசபையிலே நீ இப்படிப் பேசுவது அறமன்று., கற்றவரும் நற்றவரும் வீரரும் எங்கே பிறந்தால் என்ன? முருகவேளும் கிருபரும் நாணலில் தோன்றினர்கள். திருமால் தூணில் தோன்றினர். அகத்தியரும் துரோணரும் கும்பத்தில் பிறந்தார்கள். தாமரை சேற்றில் தோன்றுகின்றது. ஆதலால் வீரனை கர்ணன் உலகத்தையே ஆளத்தகுதியுடையவன்' என்று கூறி, கர்ணனுடைய கரத்தைப் பற்றிக் கொண்டு புறப்பட்டான். அத்துடன் அரங்கேற்றம் முடிவு பெற்றது. பலர் பலவாறு உரையாடிக் கொண்டு சென்றார்கள். துரியோதனனுக்குக் கர்ணன் திறத்தைக் கண்டு அர்ச்சுனனிடம் உள்ள அச்சம் அகன்றது. யுதிஷ்டிரர் அர்ச்சுனனுடைய விற்றிறம் போல், கர்ணனிடமும் திறமையுளது என்று எண்ணினர். (தொடரும்)

# திருவண்ணாமலைக் கார்த்திகைத் தீபம்

**முன்னுரை :**

நமது அருமைத் தமிழ் நாட்டிற்குப் பெருமைதரும் எண்ணற்ற பல திருத்தலங்களுள், திருவண்ணாமலை மிகவும் தலைசிறந்த தொன்றாகும். பஞ்ச பூதத் தலங்களுள் நெருப்புத் தலம் எனவும், ஆறு ஆதாரத் தலங்களுள் மணி பூரகத்தலம் எனவும், இதனைப் பெரியோர்கள் விதந்து கூறுவர். சிவபெருமான் சோதிப் பிழம்பாய் வெளிப்பட்டு நின்ற தலம், எனச் சைவ சமய இலக்கியங்கள் இதனைப் பெரிதும் புகழ்ந்து கூறும்.



இராச கோபுரம், திருவண்ணாமலை.

திருவண்ணாமலையை, அப்பர் சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலிய சைவ சமய குரவர்கள், தமது திருப்பாடல்களிற் போற்றித் துதித்துள்ளனர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர், இத்தலத்திலேயே தோன்றி வாழ்ந்து அருள் பெற்று விளங்கியவராவார். குகை நமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலிய அருட்பெருஞ் சான்றோர்களும் இங்கு வாழ்ந்து இத்தலத்தைப் போற்றியிருக்கின்றனர். இங்கு ஈசானிய மடம் என்பது அமைந்து, சிறந்து விளங்கிவருகின்றது. குன்றக்குடி ஆதீனத்தின் முதற்பெருங்குரவராகிய தெய்வசிகாமணி தேசிகர் இந்தத் தலத்திலேயே தோன்றியருளினார். சாமர்செட்மாம், பால்பிரண்டன் முதலிய மேலைநாட்டுப் பேரறிஞர்கள் பலரும், வியந்து போற்றி மகிழ்ந்த சிறப்புடையவராகிய ஸ்ரீ ரமணமகரிஷி அவர்கள், இங்கு வந்து தங்கி வாழ்ந்து அமைத்த ரமணாசிரமமும், இத்தலத்திற்கு ஒரு பெரும் சிறப்பை அளிப்பதாகத் திகழ்ந்து வருகின்றது. சேஷாத்திரி சுவாமிகள் என்பவரும் இங்குத் தவம்செய்து அருள் பெற்றார். சேரர், சோழர், பாண்டியர், இராட்டிரகூடர், ஒய்சளர், துளுவர் முதலிய அரசர்கள் பலர், திருவண்ணாமலைக் கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர். இத்தலத்தில் மொத்தம் 360 தீர்த்தங்களும், 400 இலிங்கங்களும் உள்ளன என்பர். கோயிற் பரப்பும் கோபுரச் சிறப்பும் கண்டு களிக்கத் தக்கவை.

**திருவண்ணாமலைச் சிறப்பு :**

திருவண்ணாமலையின் தன்னிகரற்ற பெருஞ்

சிறப்பினை நம் சமயச் சான்றோர்கள் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். பிறக்க முத்தி தருவது திருவாரூர்; தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்; இறக்க முத்தி தருவது காசி. ஆனால் நினைத்த அளவிலேயே முத்தி தருவது திருவண்ணாமலை என்பது, நம் பண்டைப் பெரியோர்களின் நம்பிக்கை.

துவக்கற அறிந்து பிறக்கும் ஆரூரும்,
துயர்ந்திடாது அடைந்துகாண் மன்றும்,
உவப்புடன் நிலைத்து மரிக்கும்ஓர் பதியும்,
ஒக்குமோ நினைக்கும் நின் நகரை? (1)

என இத்தலத்தின் சிறப்பினைத் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், திறம்தெரிந்து புகழ்ந்து பாடித் துதித்துள்ளார். அவர் தாம் இயற்றிய 'சோணசைலமாலை' என்னும் சிறந்த துதிநூலில் பின்வருமாறு திருவண்ணாமலையின் பலவகைச் சிறப்புக்களை அழகுற விளக்கி பாடியிருக்கின்றார்.

(1) சிவபிரான் திருவண்ணாமலையில் மலை வடிவம் கொண்டு திகழ்தலைக் குறித்துப் பின் வருமாறு அவர் பாடுகின்றார்:—"மனத்திற்கும் எட்டாத நுண்ணியன் என்று மறை யாகமங்கள் எல்லாம் கூறும் குறையறும்படி, உலகுயிர்கள் எல்லாம் தம் கண்களால் கண்டு மகிழும் வண்ணம், மிகவும் பெரிய மலையுருவில்—அதி தூல வடிவில்—இறைடிவன் இங்கு எழுந்தருளி விளங்குகின்றான்."

கருத்தினும் கருத அரியநுண் ணியன்என்
கடன்அற உலகெலாம் காண்பான்
தரித்துஅதி தூல வடிவுறும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (7)

(2) காலம் தவறாமல் உரிய நேரம் உணர்ந்து கோயிலுக்குச் சென்று, முறைப்படி மக்கள் நம்மைத் தரிசித்து உய்தல் அரிது. ஆதலின் அவரவர்கள் தாம்தாம் இருந்த இடத்தில் இருந்தே நம்மைக் கண்டு வணங்கி உய்தி எய்துக! என்றே, இறைவன் இங்கு மிகப்பெரிய மலை வடிவுடன் திகழ்கின்றான்.

காலம்நன் குணர்ந்து சினகரம் புகுந்து
காண்பரிது எனது உலகனைத்தும்
சாலநின் றுழியே கண்டிடும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (11)

(3) ஒவ்வோர் ஊரிலும் ஒரு கோயில் இருக்கும். அக்கோயிற் கருவறையில் சிவலிங்கம் விளங்கும். அதுபோன்று, இவ்வண்டமே ஓர் ஊர் எனக்கொளின், அண்டத்தின் சுவர் மதிலாகவும், அண்டவெளிப்பரப்பு கோயிற் பரப்பாகவும், திருவண்ணாமலைத் தலம் கோயிற் கருவறையாகவும், மலை அக்கோயிலின் கருவறையிலுள்ள சிவலிங்கம் ஆகவும் திகழ்கின்றது.

ஏருலாம் அண்டச் சுவர்மதில் மிசைப்பால்
இலங்குறும் அண்ட கோளகையாச்
சாரும் ஆலயத்தில் இலிங்கமாம் சோண
சயிலனே கயிலை நாயகனே. (16)

(4) சிறந்த மலைகளில் சுனைகள் இருக்கும். அவற்றில் குவளை முதலிய மலர்கள் பூக்கும். அவற்றை மலை யரமகளிர், வான் அரமகளிர், முதலிய தேவகணத்தார் பறித்து அணிந்து மகிழ்வது உண்டு. ஆனால் திருவண்ணாமலையிலுள்ள சுனைகளிற் பூக்கும் மலர்களை, வானவர்கள் எவரும் சூடுதற்கு நினையார். ஏனெனில் அம்மலை பிற மலைகளைப் போல்வது அன்று. இறைவனே மலைவடிவம் கொண்டு விளங்குகின்றான். ஆதலின், அம்மலைச் சுனைகளிற் பூக்கும் மலர்களை, இறைவனின் திருமேனியிற் சாத்தப் பெற்ற நிருமாலியப் பொருள்களுக்கு உரிமையுடைய சண்டேசுவரர் ஒருவரே, மகிழ்ந்து ஏற்று அணிந்து கொள்ளும் தகுதியுடையவர் ஆவார்.

வண்டுழும் குவளை மலர்தடஞ் சுனையின்
மற்றைவா னவர்க்கு உரித்தன்றிச்
சண்டியுள் மகிழ்ந்து கொளமலர் சோண
சயிலனே கயிலை நாயகனே. (20)

(5) உயிர்கள் உணர்த்த உணரும் தன்மையன. தாமே ஒன்றை யுணர்ந்து கொள்ள வல்லன அல்ல. யாம்காட்டி உணர்த்தினால் தான் உயிர்கள் ஒன்றைக் காண இயலும். இவ்வுண்மை, யாம் இத்துணைப் பெயரிய மலைவடிவமாகத் தோன்றியும், முன்பு இருவர் எம்மை உணர்ந்துகொள்ள இயலாமையால் தெளியப்படும் என்று, உலகுக்கு அறிவுறுத்தவே இறைவன் மலைவடிவில் ஓங்கியுயர்ந்து எழுந்து விளங்குகின்றான்.

யாம்முனர் மிகுபே ருருவமாய் வரினும்
இருவரும் உணர்த்திடின் அன்றித்

தாம்உணர் கிலர்என்று எழுந்துயர் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(6) மலைகளில் மேகங்கள் கவிந்து தவழ்தல் இயல்பு. திருவண்ணாமலையிலும் மேகங்கள் அங்ஙனம் மலைமேற் படர்ந்து தவழ்கின்றன. கறுத்த மேகங்கள் தவழ்வது புகை சூழ்ந்தது போலக் காணப்படுகின்றது. புகையிருந்தால் நெருப்பு இருக்கும் அன்றோ? சிவபிரான் திருவண்ணாமலையில் நெருப்பு வடிவமாக— சோதி சுவரூபனாக—ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாகத் தானே விளங்குகிறான்! மேகங்கள் புகைபோலப் படர்ந்து தவழ்வதனாலேயே இறைவனின் நெருப்புருவம், திருவண்ணாமலையின் மலை வடிவமாக அமைந்து விளங்குகின்றது என உணரலாம்.

மழைமுகில் வந்து தவழ்ந்துவிண் படரும்
மலிதரு புகை என எழுந்து
தழலுரு வுண்மை விளக்குறும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (60)

(7) பிற மலைகள் எல்லாம் உடல் நோய் தீர்க்கும் மருந்திற்குப் பயன்படுகின்ற, சில மூலிகைகளை மட்டுமே பெற்றிருக்கும். ஆனால் திருவண்ணாமலையோ தன்னை உட்கொள்பவர் (தியானிப்பவர்)களின் எல்லா நோய்களுக்கும் மூல காரணமான பிறவி நோயையே தீர்த்து விடும் சிறந்த மருந்தாக விளங்கும்.

சினவும்நோய்மருந்துவேறுகொண்டிருக்கும்
சிலம்புகள் நாண, உட்கொள்வோர்
சனனநோய் மருந்தாய் எழுந்தருள் சோண
சயிலனே கயிலை நாயகனே. (65)

(8) இறைவன் கருணையுடையவன். மலை போன்ற பெருமை யுடையவன். அதனால் அவனைக் "கருணைமலை" எனச்சான்றோர்கள் போற்றுவர். "மன்னிய திருவருள் மலையே போற்றி" என்று மணிவாசகர் போற்றுதல் காணலாம். இறைவனுக்குரிய தசாங்கங்கள் என்பனவற்றில், அவனுக்குரிய மலையாக விளங்குவது "கருணை" என்னும் பண்பாகக் கொள்ளலாம். அதனால் இறைவனைக் குறிக்கும் "கருணைமலை" என்னும் தொடர், "கருணையாகிய மலையையுடையவன்" என்றோ, 'மலைபோலும் கருணையை யுடையவன் என்றோ, அன்மொழித் தொகையாக வைத்துப்' பொருள் கொள்ளப்படும். ஆனால் இறைவனே திருவண்ணாமலையில் மலைவடிவம் கொண்டு விளங்குதலின், அத்தொடர் "கருணையையுடைய மலை"என இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கொள்ளக் கிடக்கின்றது.

மொழிதரு கருணை மலைஎனும் பெயர்அன்
மொழிஒரீஇ, வேற்றுமைத் தொகையைத்
தழுவுற நின்று வளர்ந்திடும் சோண
சயிலனே கயிலை நாயகனே. (91)

(9) மற்ற மலைகள் யாவும் தம்மீது ஏறினவர்களுக்கு உலகைக் காட்டி மயக்கும். திருவண்ணாமலையோ, உலகை வெறுத்துத் தன்பால் அடைந்தவர்க்குத் தன்னையே – சிவபரம்பொருளையே—காட்டி உய்விக்கும்.

தன்னை ஏறினர்க்குச் சகம்எலாம் காட்டும்
தரணியோ டிகலி மேவினர்க்குத்
தன்னையே காட்டும் மலைஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(10) ஏனைய மலைகள் வீடு கட்டுபவர்களுக்கு மரங்களைத் தரும். திருவண்ணாமலையோ தன்னை நினைத்தவர்களுக்கு வீட்டையே, மோட்சத்தையே, கொடுத்து வாழ்வளிக்கும்.

ஓவறும் மனைசெய் பவர்கொள மரம் தாங்கு
ஓங்கல்கள் நாண, உன்னினர்க்குத்
தாவறும் உயர்வீடு அளித்தருள் சோண
சயிலனே கயிலை நாயகனே. (99)

(11) இத்தகைய பற்பல சிறப்புடைமையினாலன்றோ எத்தனைதலங்களுக்குச் சென்றாலும் அத்தலத்திற்குரிய பதிகங்களிலெல்லாம் ஒன்பதாம் பாடலில், திருவண்ணாமலையின் சிறப்பினை மறவாமற் குறிப்பிட்டுப் புகழ்ந்தோதிப் பரவுகின்றார் திருஞான சம்பந்தர், எனப்பாடி மகிழ்கின்றார் சிவப்பிரகாசர்.

பூம்பொழிற் புகலிக்கு இறைவன்நா
னிலம்சேர்
புண்ணியத் தலங்களின் அடைந்து

தாம்பு ணைபதிகந் தொறும்புகழ் சோண
சயிலனே கயிலை நாயகனே.

—சோண சயிலமாலை, 58.

## கார்த்திகைத் தீபம் :

இத்துணைச் சிறப்புவாய்ந்த திருவண்ணாமலைக் கோயிலில் நிகழும் விழாக்களுள், கார்த்திகைத் தீபவிழா என்பது, நமது தமிழக விழாக்களிலேயே, தன்னிகரற்ற ஒரு பெருஞ் சிறப்பு விழாவாகத் தொன்று தொட்டு நிலவி வருகின்றது. தமிழகத்திலுள்ள எல்லாக் கோயில்களிலுமே கார்த்திகைத் தீபவிழாக் கொண்டாடப்படுகின்றதாயினும், திருவண்ணாமலைக்கே அவ் விழா மிக்க சிறப்புரிமை உடையதாகத் திகழ்கின்றது. தமிழகத்தின் பலபாகங்களிலும்இருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆண்டு தோறும் மிக்க அன்புடன் திரண்டு இவ் விழாவைத் தரிசித்து மகிழ்கின்றனர். புகழ்மிக்க இப்புனிதப் பெருவிழாவைப் பற்றிய பல குறிப்புக்கள், ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முற்பட்ட நமது பழந்தமிழ்ச் சங்க இலக்கியங்களிலும் அமைந்து காணப்படுகின்றன.

இங்ஙனமெல்லாம் திருவண்ணாமலையின் சிறப்பினைப் போற்றிப் பாடும் சிவப்பிரகாசர், அங்கு நிகழும் கார்த்திகைத் தீபச் சிறப்புப்பற்றிப் பாடாமல் இருப்பரோ? அதனைத் தம் வாழ்நாளில் அவர்பலகாலும் தரிசித்து மகிழ்ந்திருப்பாரன்றோ. தாம் பலகால் தரிசித்து மகிழ்ந்த கார்த்திகைத் தீபத்தின் கீர்த்தியினை மிகவும் வியந்து போற்றி, அவர் பின்வருமாறு பாடி மகிழ்கின்றார்.


(1) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது புற இருளை மட்டுமேயன்றி, அதனைக்கண்டு வழிபடும் அன்பர்களின் அகஇருள் ஆகிய அறியாமையும் போக்கி, மெய்யுணர்வு ஒளியை நல்கி நலம் புரிந்து விளங்குகின்றது.

"கார்த்திகை விளக்குமணிமுடிசுமந்து
கண்டவர் அகத்திருள் அனைத்தும்
சாய்த்துநின் றெழுந்து விளங்குறுஞ்சோண
சயிலனே கயிலைநா யகனே"

(2) திருவண்ணாமலைக் குன்றின் சிகரத்திற் கார்த்திகை மாதத்தில் ஏற்றப்படும் விளக்கானது, அவரவர் இல்லங்களில் ஏற்றப்பெறும் சிறுசிறு விளக்குப் போல் இல்லாமல், உலகம் முழுவதற்கும் இடப்பெற்ற ஒரு பெரும் ஒளி விளக்கு எனும்படிச் சிறந்து திகழ்கின்றது.

சீர்தரும் மணியின் அணிந்தன எனக்கட்
செவியும், ஒண் கேழலின் மருப்பும்,
சார்தரும் உலக விளக்குஎனும் சோண
சயிலனே கயிலை நாயகனே

(3) திருவண்ணாமலையில் கார்த்திகை மாதத்தில் முழுநிலா நாளில் மலையுச்சியின் மீது பேரொளி விளக்கு ஏற்றப்படும் இனிய காட்சியானது எவருள்ளத்தையும் கவர்ந்து கொள்ளை கொள்ளும் மாட்சிமை உடையதாகும். மலை உச்சியில் தண்மை மிக்க முழுவெண்ணிலாத் தோன்றித் திகழ்தலும், அதனருகே செழுஞ்சுடர்ப் பேரொளி விளக்குச் சுடர்விட்டு எரிதலும் கவின் மிகுந்து, காண்பவர் உள்ளத்தைக் களி துளும்பச்



ஸ்ரீ அண்ணாமலைநாதர்

செய்யும். திருவிளக்கின் ஒளிச் செழுஞ்சுடர் செந்தாமரை மலரைப் போலவும், அதனை அடுத்து விளங்கும் முழு வெண்ணிலாவின் தோற்றம் அத்தாமரை மலரின் அருகே சென்று அணையும் அழகிய வெள்ளை அன்னம் போலவும், அமைந்து காணப்படுகிறது.

மடலவிழ் மரைமாட் டெகின்என அருகு
மதியுறக் கார்த்திகை விளக்குத்
தடமுடி யிலங்க வளர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

(4) திருவண்ணாமலைக் கார்த்திகை விளக்கீடு, ஒரு கலங்கரை விளக்குப் (Light House) போல, உயர்ந்து எரிந்து ஒளி தந்து விளங்குகின்றது. அது பிறவி ஆகிய கடலைக் கடந்து, வீடுபேறு ஆகிய கரையினை அடைய விரும்புபவர், வழி தெரியாமையால் ஏற்படும் திகைப்பு நீங்கித் தவவொழுக்கம் ஆகிய கப்பலைச் செலுத்தி உய்யும்படி செய்து உதவுகின்றது.

பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற்
படர்பவர் திகைப்பற நோக்கித்
தவக்கலம் நடத்த உயர்ந்தெழும் சோண
சயிலனே கயிலை நாயகனே.

முடிவுரை :

இத்தகைய பல சிறப்புக்களை உடைய திருவண்ணாமலையையும், அங்கு நிகழும் கார்த்திகை விளக்கீட்டு விழாவினையும், நாம் அனைவரும், அன்புடன் கண்டு வழிபட்டு, அண்ணாமலை அண்ணலின் அருளைப் பெற்று உய்யமுற்படுவோமாக.

—ஆசிரியர்



நாகப்பட்டினம் காயாரோகண சுவாமி—நீலாய தாட்சியம்மை கோயிலுக்கு முன்னுள் அறநிலையத்துறை ஆணையர் திரு. இரா. இராம சுப்பிரமணியம் B.Sc., B.L., அவர்கள் வருகை தந்த நிகழ்ச்சி (15—9—'59)

# செய்திச் சுருக்கம்

## இராசராசன் சதயத் திருநாள்விழா :

தஞ்சாவூர்ப் பெருவுடையார் கோயிலில், அக்டோபர் மாதம் 20, 21, 22 தேதிகளில், 'அருள் மொழிவர்மன் காவணத்தில்' சிறப்புற நடைபெற்றது. முதல் நாள், 20—10—1969 அன்று திங்கட்கிழமை காலை, 48 ஓதுவா மூர்த்திகளுடன் கோயில் வலம்வந்து திருமுறைப் பாராயணத்துடன் விழா தொடங்கியது. நிர்வாக அதிகாரி நாவீறர் திரு. அரங்கசாமி, B.Sc., B.L., வரவேற்புரை கூறினர். திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு. எம். எஸ். கோபால், திரு. ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை, B.A., B.L., திரு. டி. எம். நாராயணசாமி பிள்ளை, M.A., B.L., திரு. நீ. கந்தசாமிபிள்ளை, B.A., திரு. என். கிரிதாரி பிரசாத், B.A., B.L. மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் திரு. எம். விசுவநாதன், B.A., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று மாலை, சதய விழா துவங்கியது. தஞ்சை அரண்மனைத் திருக்கோயில்களின் பரம்பரை அறங்காவலர் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாகேப் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர்கள். அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A., B.L., I.A.S., அவர்கள் தலைமையில், மன்னை திரு. ப. நாராயணசாமி, 'தஞ்சை அமுதம்' இதழ் ஆசிரியர் திரு. ந. தருமலிங்கம் M.L.A., புலவர் திரு. முருகையன், M.L.A., கோவைக் கௌமார மடாலயத்தின் தலைவர் வித்துவான் தவத்திரு. சுந்தர சுவாமிகள் ஆகியோர் உரையாற்றிச் சிறப்பித்தனர். 'திருக்கோயில்' ஆசிரியர் புலவர் திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L., அவர்கள், 'இராஜ ராஜனின் ஆட்சியும் மாட்சியும்' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு ஆற்றினர்கள். தஞ்சைச் சரபோஜி கலைக்கல்லூரி முதல்வர் கேப்டன் திரு. வி. முருகையன், M.A., அவர்கள் நன்றியுரை நவின்றுர்கள்.

இரண்டாம் நாள், 21—10—1969 செவ்வாய்க்கிழமை அன்று காலை, இராஜராஜன் பிறந்த ஐப்பசிச் சதய நாளை முன்னிட்டு, பெருவுடையாருக்குப் பெருமுழுக்கு நடைபெற்றது. அன்று மாலை நடந்த சிறப்புக் கூட்டத்திற்கு, தஞ்சைத் துணையாணையர் திரு. டி. என். சிங்காரவேலு, B.A.B.L., அவர்கள் வரவேற்புரை கூறினர்கள். திருமடங்களின் தலைவர்கட்கு, ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப் அவர்கள் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்கள். திருமதி சௌந்தரா கைலாசம், தவத்திரு. குன்றக்குடி அடிகளார், M.L.C., தவத்திரு. இராமசாமி அடிகள், தவத்திரு. சுந்தரசுவாமி அடிகள், ஆகியோர் அருளுரைகள் வழங்கினார். தஞ்சைக் கோட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. துரைசாமி, B.A., அவர்கள் நன்றியுரை நவின்றுர்கள். அன்று இரவு பஞ்சமூர்த்திகள், இராஜராஜன் செப்புத் திருமேனியுடன் திருவீதி உலா வந்தனர். சிலம்பம் கரகம் பொய்க்கால் குதிரை ஆட்டம் முதலியன நடைபெற்றன. திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவர் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் ஏற்பாடு செய்யப்பெற்றுள்ள திருமுறை இன்னிசை நிரந்தரக் கட்டளை நிதியிலிருந்து, இரவு முழுவதும் திருமுறைப் பாராயணம் நடைபெற்றது.

மூன்றும் நாள், 22—10—1969 அன்று புதன்கிழமை காலை, ஸ்ரீ பெருவுடையாருக்கு ஏக தின லட்சார்ச்சனை துவங்கி, மாலை 4—30 மணி அளவில் மகா தீபாராதனைகள் சிறப்புற நடத்தப் பெற்றன. பின்னர் 6—30 மணி அளவில் 'இராஜராஜனின் பெருஞ்சிறப்பிற்குக் காரணம், பெரிய கோயில் கண்டதா திருமுறை கண்டதா' என்னும் பொருள்பற்றி, தவத்திரு குன்றக்குடி அடிகளார், M. L. C., அவர்கள் தலைமையில், ஒரு பட்டி மன்றம் நிகழ்ந்தது. அதற்குத் தஞ்சைத் துணை ஆணையர் திரு. டி. என். சிங்காரவேலு, B.A.,B.L., அவர்கள் வரவேற்புரை கூறினர்கள். நமது அறநிலைய அமைச்சர் மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா, B.A., அவர்கள் துவக்க உரை நிகழ்த்தினர்கள். 'பெரிய கோயில் கண்டதே' என்னும் சார்பில் முறையே புலவர் திரு. முருகையன், M.L.A., புலவர் திருமதி. துரை. அரங்கசாமி, B.Sc., B.L., திரு. கி. கோதண்டபாணி, M.A., M.O.L., ஆகியோரும்; 'திருமுறை கண்டதே' என்னும் தலைப்பில்,

திரு. ஔவை து. நடராஜன், M.A., M.Litt., திருமதி. த. அன்புவல்லி, இலஞ்சி திரு. முத்துக் குமாரசாமி, B.A., (Hons.)., புலவர் திரு. அறிவொளி, B. A., ஆகியோரும் கலந்து கொண்டு வழக்குரை நிகழ்த்தினர். தலைவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார், M.L.C., அவர்கள் இருதிறத்தினரின் வாதங்களையும் வழிமொழிந்து தொகுத்துத் கூறி முடித்து, திருமுறைகண்டதே இராசராசனின் பெருஞ்சிறப்பிற்குக் காரணம் என்று அரியதோர் விரிவுரை நிகழ்த்தித் தீர்ப்புரை வழங்கினார்கள். திருமுறைப் பாடல்களுடன் விழா இனிது நிறைவெய்தியது.

சதயநாள் விழாவை ஒட்டித் தஞ்சை நகரின் பல பகுதிகளிலும், பெரும் அளவில் உணவுப் பொட்டலங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 48 ஓதுவா மூர்த்திகளுக்கும் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்களால், உருத்திராக்க மாலையும், திருநீற்றுச் சம்புடமும் வழங்கப் பெற்றன. உறையூர் திரு கு. அ. அருணாசல முதலியார் அவர்களால் ஆடைகள் வழங்கப்பட்டன. ஷை மூன்று தினங்களிலும் தமிழ் நாடு தெய்விகப் பேரவையின் சார்பில் சமயப் படக்காட்சிகளும், சமயப் பிரச்சாரங்களும் நடத்தப்பெற்றன. ஐப்பசிச் சதயப் பெருநாள் விழா, தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் இங்ஙனம் மிகப் பெருஞ் சிறப்புடன் இரண்டு ஆண்டுகளாக நிகழ்வதற்கு மூலகாரணராக அமைந்து, பெரு முயற்சிகளை மேற்கொண்ட தஞ்சைத் துணையாணையர் திரு. டி. என். சிங்காரவேலு, B A. B.L. அவர்களின், அரும்பெருந் தொண்டின் சிறப்பினை அனைவரும் வியந்து புகழ்ந்து போற்றிப் பாராட்டியமை, இங்கு விதந்து குறிப்பிடத் தக்கது.

—ஆசிரியர்

**பரிசளிப்பு விழா :** காஞ்சிபுரம் வட்டம், மாகறல், திரிபுவனநாயகி உடனுறை திருமாகறலீசுவரப் பெருமானின் திருக்கோயில் தூய்மையுடன் சிறந்த நிலையில் வைக்கப்பட்டிருப்பதற்காக, நமது அறநிலையத்துறையின் சுழற கோப்பையும் நற்சான்றிதழும் வழங்கப் பெறும் பரிசளிப்பு விழா, 30—10—1969 வியாழனன்று சிறப்புற நடைபெற்றது. நமது அறநிலைய ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A., B.L., I.A.S., அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பரிசளித்தார்கள். உதவி ஆணையர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், B.Sc., அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். 'திருக்கோயில்' ஆசிரியர், புலவர் திரு. ந.ரா. முருகவேள், M.A., M.O.L., 'இறைவழிபாடும் ஆலயத்தூய்மையும்' என்பது பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். சென்னைத் துணை ஆணையர், திரு. கே. இராஜா, B.A., B.L., அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார்கள். தருமை ஆதீனம் தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், பரிசு பெற்ற பரம்பரை அறங்காவலர் திரு. எம். டி. நடராஜ முதலியார் அவர்களின் சிறந்த தொண்டுகளைப் பாராட்டி, விரைவில் குடமுழுக்கு விழாவையும் அவர்கள் சிறப்பாக நடத்தித்தருதல் வேண்டும் என்று வாழ்த்துரை வழங்கியருளினார்கள். நிர்வாக அதிகாரி திரு. கே. நடராஜன் அவர்கள் நன்றியுரை நவில, இறைவணக்கத்துடன் விழா இனிது நிறைவேறியது.

அவ்விழா நாளிலேயே அடுத்துள்ள கடம்பர் கோயிலில், கடம்பநாதப் பெருமானின் திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்களின் குடியிருப்புக் கட்டிடத்திற்கும், நமது அறநிலைய ஆணையர், திரு. கே. எஸ். நரசிம்ம முதலியார், B.A., B.L., I.A.S., அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். ஷை கோயிலின் பரம்பரை அறங்காவலர் திரு. நயினார் கன்னியப்ப முதலியார் அவர்கள் அனைவரையும் வரவேற்றுச் சிறப்பித்தார்கள்.

—ஆசிரியர்.

# பொய்யாவிளக்கு

(ஸ்ரீ-ல-ஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகள், காஞ்சிபுரம்.)

"எல்லா விளக்கும் விளக்கல்ல
சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு"

புறத்திருள் கடியும் உலகத்தார் விளக்குகள் எல்லாம் விளக்காகா. துறவான் அமைந்தார்க்கு விளக்காவது அக(மன)த்திருள் கடியும் பொய்யாமையாகிய விளக்கே, திருக்குறளிற் "பொய்யா விளக்கு" என்றுள்ளது. உரையிற் "பொய்யாமையாகிய விளக்கு" என்று உள்ளது. இதனை உற்றுணர்க.

வழக்கிற் பறவாக்கொக்கு, பாயா வேங்கை, பிறவாப் புளி, இறவாப் பனை, சாகாக்கால், வேகாத்தலை முதலியன பல உள. அவற்றின் பொருளைப்போல "பொய்யா விளக்கு" என்றதற்குப் பொருள் கொள்ளலாகாது. அங்ஙனம் கொள்ளின் இக்குறட்பாவின் கருத்துக்கெடும். கெடுமாறு இது:—

இங்குப் பொய்யாமை (வாய்மை)யை விளக்கு என்றார் திருவள்ளுவர். பொய்யாத விளக்கு எனக் கொண்டால், விளக்கினது பொய்யாமை என்று கருத்தாகும். எவ்விளக்கு பொய்த்தாலும் பொய்யாது விளங்கினும் அது கருத்தன்று இக்குறட்பாவில். பொய்யாமையாகிய விளக்கு என்னும் உருவகம் இங்குவேண்டும். அஃதாவது விளக்கு, உண்மை விளக்கு உருவக விளக்கு என்றிருதிறத்தன. உண்மை விளக்கு "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு" என்று விளக்கப்பட்டது. "சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" என உருவக விளக்கே விதிக்கப்பட்டது. இதிற் பொய்யா விளக்கு என்னுந்தொடர் எதிர்மறைப் பெயரெச்சத் தொடர் அன்று. மேற்குறித்த பறவாக் கொக்கு, பாயா வேங்கை, முதலியன போல. அப்பெயரெச்சத் தொடரே அவற்றிற்குப் பொருள் கொள்ளுங்கால், பறவாத, பாயாத, பிறவாத, இறவாத, சாகாத, வேகாத என்று எதிர்மறைப் பெயரெச்சப் பொருள்களில் தாம் கொள்ளல் வேண்டும். ஈண்டுப் பொய்யாத விளக்கு எனப் பொருள் கொள்ளல் பொருந்தாது. ஏனெனில், பொய்யாமையை விளக்கு என்றார் திருவள்ளுவர். விளக்குப் பொய்யாதது என்று குறிக்குங் கருத்துற்றார் அல்லர். பொய்யா விளக்கு எனின் தூண்டா விளக்கு, நந்தா விளக்கு, நொந்தா ஒண்சுடர் என்னும் பொருளே பயக்கும். ஆண்டு எல்லாம் தூண்டாமையாகிய விளக்கு, நுந்தாமையாகிய விளக்கு, நொந்தாமையாகிய வொண்சுடர் எனப் பொருள் கோடல் அமையாது. அவ்வாறே ஈண்டுப் பொய்யாமையாகிய விளக்கு என்னும் பொருட்டாய்ப் பொய்யாத விளக்கு என்பது அமையாது. "பொய்யா விளக்கு" என்னுந் தொடர்க்குப் பொய்யாத விளக்கு என்றும் பொருள் கொள்ளல் உரியதேயாகும். இத்திருக்குறளிற் சான்றோர்க்குப் பொய்யாமையே விளக்கு; மற்று எல்லா விளக்கும் விளக்கல்ல என்றுணர்த்திய ஆசிரியர், விளக்கினது பொய்யாமையை விளக்கக் கருதினர் அல்லர். அக்கருத்து இங்குசிறிதும் அமையாது. இங்கு அதனை அமைத்துக்காட்ட அவராலும் ஆகாது. ஆண்டவனாலும் ஆகாது. சான்றோர்க்கு எல்லா விளக்கும் விளக்கல்ல, விளக்குப் பொய்யாததே விளக்கு எனல் ஒல்லுமோ? ஒரு கோயிலுள் என்றும் பொய்யாத விளக்கு ஒன்றிருப்பதாக வைத்துக்கொள்க. அத்திரு நந்தா விளக்குப் பொய்யாமைக்கும் சான்றோர்க்கு விளக்கமாகும் பொய்யாமைக்கும் தொடர்பு யாது? உண்மைத் தொடர்பு அமையக் கூறலாம். ஆயினும் இத்திருக்குறளில் அதனை அமைத்துரைத்தல் இயலாது. இவ்வுண்மையை உணர்த்த வேண்டிப் பரிமேலழகர் எச்சஉரையில் "பொய்யா விளக்கு என்பது குறைந்து நின்றது" என்று விளக்கம் எழுதினர். அதனோடு அவர் அமைந்தார் ஆயின், இப்பொழுது அவ்வுரைக்கண் உள்ள பிழை தவிராது பிழையெனப் புலமையில்லார் புலப்படவுணர முடியாது. 'பொய்யாத விளக்கு' என்றது பொய்யாவிளக்கு எனப் பாட்டில் தவ்வீறு குறைந்து நின்றது என்றே பாமரர் பலருங் கொள்வர் பரிமேலழகர் உரைப் பதிப்பெல்லாம் இப்பிழையின் நீங்கில. "பொய்கூறாமையாகிய விளக்கு என்றவாறு" என்று அத்தொடர்க்கு (பொய்யா விளக்கு என்னும் தொடர்க்கு)ப் பொருள் கொள்ளும் ஆற்றை விளக்கியிருந்தும், பதிப்பெல்லாவற்றுள்ளும், பொய்யாத விளக்கு என்பது பொய்யா திருக்கலாமா? தகரம் தகராதிருப்பது தமிழ்ப் புலமையைத் தகர்ப்பதேயாகும் அன்றோ? இனி வெளிவரும் பதிப்புக்களிலேனும் தகரம் தகர்க்கப்படுக. இதுபோல இன்னுஞ் சிற்சில குறளுரைகளுள் ஒவ்வோரெழுத்து நின்று பரிமேலழகருரையைக் குற்றமாக்கி விட்டிருத்தலை, வாய்ப்பு நேர்ந்தால் எழுதி விளக்கும் நாட்டம் உடையேம். ★

# திருவள்ளுவர் கண்ட மெய்ந் நெறி

திரு. நல். முருகேச முதலியார், B.A.

சமயக் கணக்கர்கள், தெய்வத் திருவள்ளுவர் மொழிந்த உண்மைகளைத் தத்தம் மதங்கட்கு ஆதரவு தருவதாக எடுத்துக் காட்டுவர். நாயனுர் கூறிய உண்மைகள் யாதொரு சமய வரம்பிலும் நின்று பேசப்பட்டவையல்ல. மெய்ந்நெறியாவது வீடு-பிறப்பு இவைகளில் உண்மைகளை உணர்ந்து மீண்டும் பிறவா நெறியில் நிற்றலாகும்.

நாயனுர் தம் நூலில் கண்டுள்ள முடிபுகளெல்லாம் மக்கள் பொய்தீர் ஒழுக்க நெறியில் நின்று நீடு வாழ வேண்டுமென்ற குறிக்கோளைக் கொண்டவையாகும். இக வாழ்வில் மக்கட்கு உறுதி பயப்பது அறம், பொருள், இன்பம் எனும் மூன்றுமாம். அவற்றுள் பொருளும் இன்பமும் அறத்தின்பால் ஒழுகினல்லாது உறுதியாகா. அறந் தானும் கடவுள் உண்மைக் கொள்கையை உணராதார்க்குப் பயனுகாது. அறமானது இருவினையின் வகை தெரிந்து செல்லும் நெறி. வினைப் பயனை வகுத்துத் தருதல் முதல்வனது ஆணையே. அறத்தின் முதலாகக் கருதி ஒழுகும் நெறியே மெய்யுணர்வுக்கு ஏதுவாகிய மெய்ந்நெறி. இவைபடின், மெய்யுணர்வானது அறத்தின் முதலாகவும் பயனுகவும் உள்ளது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இதற்குச் சான்று நாயனுரின் பாயிரத்து முதல் அதிகாரமும், மெய்யுணர்தல் என்ற 36ஆம் அதிகாரமே சாலும்.

எந்நெறி உணர்விற்கும் அறிவு அடிப்படை என்பதை நாயனுர் முதற்கண் வலியுறுத்தும் முறையால் அளவை, இலக்கணம், உணர்வு என முத்திறனுல் கடவுள் உள்பொருள் என்ற முடிவுக்கு நூலறிவு மட்டுமின்றி வாலறிவன் நற்றுள் தொழுதலால் பெறும் பேரறிவும் வந்துழியல்லால், பொய்ப்பால பொய்யாய் விளங்கா எனச் சாற்றுகிருர். மக்கட் பிறப்பில் வாராத உயிர்கள் பருவுடம்பைச் சார்ந்த பொறியுணர்வோடு மட்டும் அமையும். மக்கட் பிறவிக்கு மனஉணர்வு என்ற ஆற்றலும் கூடியுள்ளது. அறவுணர்வாகிற பண்புக்கும் பயனுக்கும் அறிவொன்றே கருவியாய் இருத்தலால்—

“ அறிவுடையார் எல்லாம் உடையார்
அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் ”

என்பரராயினர்.

நிலமறிந்து செலுத்தும் வாதுவன் போல் மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு. எனவே அறிவு மனத்தைப் புலத்தின்கண் செலவிடாது நன்றின்பால் உய்ப்பது மக்கள் பெற்ற அறிவாகும். ஒருகாலும் நிரம்பா இயல்புடைய மனமானது அவா நீப்பில் பேரா இயற்கை பெறும். பிறப்புக்கு வித்து அவா. அவா ஒழிந்துழி பிறப்பென்னும் பேதமை நீங்கப் பெற்று சிறப்பென்னும் செம்பொருள் ஆன்ற அறிவில் பெறப்படும்.

“ பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்
பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு ”... (358)

அறிவு ஒன்றே செம்பொருளைக் காண உதவும் கருவியாகும். செம்பொருளாவது தோற்றக் கேடுகளின்றி நித்தமாய், நோன்மையால் தன்னை ஒன்றும் உவத்தலின்மையால் தூயதாய் தானெல்லாவற்றையும் கலந்து நிற்கின்ற முதற் பொருளாகும்.

அன்பின் வழி நில்லாக்கால் அவா நீக்குதல் சாலவும் அரிதாகும். அன்பே அறத்துக்குச் சார்பும் மறத்திற்குத் துணையுமாகும். அஃது அவா வழி நில்லாது அன்பின் வழிப்பட்ட தொன்ருகும். காமம், வெகுளி, அவா, அன்

பின்மையின் வழி நின்று இயங்குவனவே. அன்பின்மை அருளின்மைக்கு மூலகாரணமாகும். அருளுடைமையாவது தொடர்பு பற்றுது இயல்பாகவே எல்லா உயிர்கள் மேலும் செல்வதாகிய கருணை. மனத்தின் கண் மாசிலாது ஒழுகலுக்கு இருள் சேர்ந்த நெஞ்சைப் பயிலுவித்தலாகும்.

“ அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை இருள் சேர்ந்த
இன்னா வுலகம் புகல் ” ......(243)

என்பர் நாயனர்.

பிற அறங்கட்கெல்லாம் அருளுடைமை மூலம். எனவே வீடு வேட்கையுற்றார் அறநெறி மட்டுமின்றி அருள் நெறி நிற்றலே கைக்கொள்ளற்பாலது. மன்னுயிரோம்பும் அருளாளர்கள் மறுமைக்கண் நரகம் புகுவதற்கு ஏதுவாகும் பழி பாவங்கள் வழி நில்லாமல் நலநெறி கடைப்பிடிப்பர். அவ்வழி நிற்கவே இம்மையிலும் அல்லல் அன்னர்க்கு இல்லதாகும். அருள் நீங்கி அல்லல் செய்தொழுகுவார் உண்மைப் பொருளாகிய மெய்ந்நெறி நீங்கித் துன்பப்படுவர். என்னை ? அத்துன்பம் ஒருகால் மாருதோ எனின், பொய்ப்பொருளாகிய செல்வம் முதலானவை ஊழ்வலியால் மீண்டும் வரப்பெறின் பொலிவடையலாம். ஆனல் “ அருளற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது ” என்று சாற்றுவர் பொய்யாப் புலவர் வள்ளுவனர்.

உயிர்கண்மாட்டு அருள் செய்யாதான் எவ்வறம் செய்யினும் நிலைபெற்ற ஞானமில்லாதவன். மெய்ப்பொருளை ஒருகால் உணரப் பெறினும் அது நிலையாது மாயுமா போல். எனவே அருளுடைமையிலன்றி உறுதிப் பொருளான அறம் நிலை பெருது. அருளின்மை என்ற இருளால் சூழ்ந்து மாயும்.

“ தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்றேரி
னருளாதான் செய்யும் அறம் ” (249)

அஃதன்றே மீமாஞ்சர் முதலாயினோர் செய்யும் வேள்வியாவும் ; அருளுடைமையில்லையேல் ஒரு பயனுமற்றுப்போம். எனவே அஜம் கொன்று அவி சொரிந்து ஆயிரம் வேள்வி செய்தல் நன்றன்று, கொல்லாமை ஒன்றே ஒப்பற்ற தபமாகும். அஃது, தம் உயிர்க்குத் துன்பங்களை ஏற்றும் பொறுத்தும், பிற உயிர்கட்கு இதம் செய்தலாகும். பிற உயிர்களை ஓம்புதல் அருள் முதிர்ந்த ஒருமைப்பாட்டின் வழியில் இயல்பாக நிலைக்கும் தவமும் தயையுமாகும். தான தர்மங்கள் தவமாகமாட்டா என்பது ஒருதலை. தவத்தின் வடிவு என்னையோ எனின்

“ உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு ” (261)

மற்றைய உயிர்கட்கு உறுகண் செய்யாமையிலேயே நன்னெறியாவும் அடங்கும். அத்தகைய செய்கையே தவம் செய்வார்க்கு இயைந்த தருமமாகும். மற்றவர் ஆசையில் உட்பட்டு மயங்கி அவம் செய்வாராவர். அந்நோன்பில் நின்றுழி தமக்கு எத்தகைய துன்பம் வரினும் தம்மொடு கலந்த பாவம் நீங்கி ஞானமாகும்.

மனித உலகத்திலே இந்நோன்பு பெரும்பாலோர் கொள்ளாத இழிவு பற்றியே உலகத்தில் இலர் பலராகி, துன்பம் விளைந்து, அமைதி குலைகிறது.

“ இலர் பலராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர் ” (270)

மன்பதை இந்நோன்பைப் பற்றி ஒழுகுமாயின் அஞ்ஞான்றே உலகில் அறநெறி மன்னி மிளிரும்.

தவவேடங்கள் பூண்டு அல்லவை செய்தல் வேட்டுவன் புதரின்கண் மறைந்து புட்களைப் பிணித்தற் போலாகும். பசுந்தோல் போர்த்த புலி பைங்கூழை மேய்ந்தாற் போலாகும். எனவே

“ மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின் ” (280)

நெஞ்சில் துறவாது பற்றற்றார் போலும், உலக நன்மைக்கு விழைபவர் போலும், வேடம் தாங்கி நடிப்பது வஞ்சனையில் வஞ்சனையாகும். இவர்கள் மனமிருண்ட மக்கள், கயவர்களாவர்.

மனத்துக்கண் மாசிலராதல் அறத்தின் உறைகல். மனம் தீயஎண்ணங்கட்கும், ஒழுக்

கங்கட்கும், வினைகட்கும் பிறப்பிடமாயின் வேறு தவம் என்ன பயத்தது ? அத்தூய்மை அன்மையை அழுக்காறு, அவா, வெகுளி, பயனில கூறல், புறங்கூறல், இன்னுச்சொல், நன்மை பயக்காத சொல் முதலிய காட்டிவிடும். அவர்கள் போலிகள், கயவர்கள், கள்ளர்கள் கணக்கில் வைத்து எண்ணப்படும். அவர்கள் பெறுதற்கரிய மானிடப் பிறப்பின் ஆற்றல் புரியாத அறிவிலிகளாவர்.

"களவென்னுங் காரறி வாண்மை அள வென்னும்
ஆற்றல் புரிந்தார்க ணில்" (287)

இக்கயமையை விட்டாரே கூற்றையும் குதிக்க வல்லார்கள். புத்தேளிர் உலகும் அன்னோரை எதிரழைக்கும். மனிதன் விலங்கு மனத்தனுகாமல் மேல் நோக்கி உயர்வானே மெய்ந் நெறியைக் கடைப்பிடித்தவனுவன்.

நன்னெறியின் பயன் ஐயம் திரிபு விபரீதம் என்ற மூன்றையும் தவிர்த்து, உண்மையை உள்ளபடி உணரும் ஆற்றலும் உயர்வுமே.

"நில்லா தவற்றை நிலையுள வென்றுணரும்
புல்லறிவாண்மை கடை" (331)

உடம்போடு உலகோடு உயிரின் நட்பின் உண்மை இயல்பை உணர்தலே ஞானமாகும். உடம்பையோ உலகையோ வெறுத்தல் ஞானமாகாது. யாக்கை நிலையாமையை உணர்தல் யாக்கையை வெறுத்தலென்று பொய்யில் புலவர் கூருமை கூர்ந்து நோக்கற் பாலது. இது தமிழ்த் தத்துவத்தில் அமைந்த சிறந்ததோர் கூற்று என்று மேனுட்டவரும் புகழும் ஒரு சிறப்பை நாயனுர் விளக்கிப் போயினர். புலனடக்கமே வேண்டற்பாலது, உடலழித்தலால் யாது பயனுமில்லை.

"அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல் வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு" (343)

புலனை அடக்காது நுகர்தல் விறகு பெற்ற தழல் போலத் தம்மை அழித்து விடும். இது அகப்பற்றுக்கவல்லார் உணர்தற்குரிய ஞானமாகும். என்னை ? உடலே வேண்டாமெனப் பெறப்படுமோ வெனின், அற்றன்று. உடலை 'நான்' என எண்ணுவது மிகை. அது ஞானத்திற்கு விரோதம்.

"மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப் பறுக்க
லுற்ருர்க் குடம்பு மிகை" (345)

என்பது நாயனுர் குறள். தானல்லாத உடம்பை யானென்றும், தன்னோடு இயைபில்லாத பொருளை எனதென்றுங் கருதிப் பற்றில் திளைத்து மயங்கின் வீடு என்னும் செம்பொருள் காண்பரிது.

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்" (346)

பற்றை விடுதலே வீடெய்துவதற்கு நல்மருந்து. இருவினையின் கயனுகிய பிறப்பிறப்பு என்பவை நிலையாமை ; அவற்றை மதியாது "யான் யார்" என்ற உண்மையை அறியும் தத்துவ நிலையே வீடு பேருகும்.

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்".... (349)

எதுவாயினும், எத்தன்மைத்தாயினும், யார் யார்வாய்க் கேட்பினும், புலன்கள் எவ்வழி ஈர்த்துச் சென்ருலும் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்று நாயனுர் மீண்டும் மீண்டும் கூறுவர். அவ்வறிவு இல்லையேல் இப்பிறவி மாண்பின்மையாகும்.

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணுப் பிறப்பு".... (351)

அம்மட்டோ ? சாரும் பொருளை உணராது சார்வனவற்றைச் சார்ந்து நிற்பனுயின், சாரக் கடவனவாய் நிற்கும் வினைகள் ஒருவன் உணர்வொழுக்கங்களை யொழித்து செந்நெறியிலிருந்து விலகச் செய்யும்.

"சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.... (359)

மெய்ச்சார்புடன் அணைந்து நிற்பின் பொய்ச் சார்புகள் வலியற்று அழியும். இம்மெய்ப்

பொருளைக் கற்பதனால் மட்டும் உணர இய லாது. உள்ளதை ஒரு தலையாக ஓர்ந்து உணர் தல் வேண்டும்.

'' ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு'' (357)

இஃது ஒரு தலையாய் நிற்றலை 'நிட்டை' என் றும் 'சமாதி' என்றும் சமயாசிரியர்கள் கூறு வர். இந் நிலை யெய்திய பின்னும் முன் தொடர் பினாலோ ஊழ்வலியினாலோ, பற்று தொடர்ந்து தாக்குமாகையால் அவாவறுத்தல் மிக மிக அவசியமாகும். மெய்யுணர்தலின் சிகரம் அவா வின்மையாகும்; அவாவுடைமை மீண்டும் பிறப் புக்கு வித்தாகும். அவா நீப்பின் மனிதன் தன் முழுத் தன்மையை அடைகிறான். அதை 'ஆனந்தம்' எனக் கூறுவர் சிலர். நாயனார் 'பேரா இயற்கை' என்று அழகுபடக் கூறுவர்.

''ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்'' ... (370)

ஒரு வினையின் பயனாக மறுபிறப்பு உண்டு, இல்லையென்ற வாதங்கட்கு அப்பாற்பட்டதாய் மனிதத் தன்மையின் சிகரமான பேரா இயற் கையே பொய்யில் புலவர் கண்ட வீட்டிலக் கணமாகும்.

நாயனார் கண்ட நெறி, காட்டிய நெறி, சைவம், வைணவம், பௌத்தம், ஆருகதம் முத லிய எல்லாச் சமயங்கட்கும் மேலாய் எச்சம யத்திற்கும் சம்மதமாய் நிற்கும் சிறப்புடையது.

மேலைநாட்டுத் தத்துவம் கீழ்நாட்டுத் தத்து வம் என்ற கூறுபாடுகட்கும் கட்டுப்பாடுகட்கும் அடங்காமல் தனித்தமிழ்த் தத்துவமே வள்ளு வர் காட்டிய மெய்ந் நெறியாகும். அது எக் காலத்துக்கும் யாவர்க்கும் உடன்பாடு உடைய தாய் நிற்பது கண்கூடு. அக்காரணம் பற்றியே வள்ளுவர் கூறியது 'பொது மறை' என உல கம் போற்றிற்று; இன்றும் போற்றுகிறது. பல திறச் சமயத்தவர்களாகிய சங்கப் புலவர்கள் திருவள்ளுவர் மாலையில் திருவள்ளுவர் மெய்ந் நெறியைப் போற்றியுள்ளார்கள்.

'' ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனி
னன்றேன்ப வாறு சமயத்தார்—நன்றென
வெப்பா வலருமியையவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி ''... என்பது கல்லாடர் வாக்கு.

இருபதாம் நூற்றாண்டுச் செந்தமிழ்ப் புலவர், '' மனோன்மணியம் '' ஆசிரியர் சுந்தரம் பிள்ளை யவர்கள்,

''வள்ளுவர் தம் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி ?''

என உணர்ச்சியுடன் பாடியுள்ளார்.

தொல்காப்பியர் நாள்தொட்டு இந்நாள் வரை தொல் ஆறு என்றும், திருநெறி, செந்நெறி என்றும், அவிரோதம் என்றும், சன்மார்க்கம் என்றும் பொதுப்படக் கூறும் மெய்ந்நெறி யாவற்றையும் தழுவி நின்று ஒப்பில்லா ஒரு நீதியாய் நிற்கும் திருவள்ளுவர் வகுத்த நெறி எக் காலத்தும் எந் நெறியாளரும் மேற்கொண்டு கடைப்பிடித்து உய்வடைய உதவி புரியும் சிறப்பு வாய்ந்ததால், உலக சமுதாயம் நன் குணர்ந்து தெளிந்து அறிவுக்கும் அளவைக் கும், உணர்வுக்கும் முரணாகாமையால் போற் றிப் பாராட்டத் தக்க சிறப்புடைத்து.

# ஐன்ஸ்டனும் அண்டப்பகுதியும்

(கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியார்)

யோகசமாஜம், அடையாறு, சென்னை—20

(கவியோகி உலகம் சுற்றிய புலவர். அவர் பெர்லினில் திருவாசகம் பற்றிப் பேசினர். சில அறிஞர் ''திருவாசகத்தில் விஞ்ஞானக் கருத்துக்கள் உண்டா'' என்று வினவினர். அல்பர்ட் ஐன்ஸ்டனின் அன்பர் சிலர் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். கவியோகி திருவண்டப் பகுதியில் ஐன்ஸ்டன் கருத்துக்கள் நிரம்பியிருப்பதை விளக்கினர். இந்த விளக்கம் ஸ்ப்ரே நதிக் கரையில் உள்ள ஜோனஷோப் என்ற பெரிய ஊணகத்தில் நிகழ்ந்தது.)

— ஆசிரியர்.

ஐன்ஸ்டன் உலக அறிஞருள் சிறந்த ஒருவர். அவரது விஞ்ஞானக்கணக்குகள் உலகில் வியன்பெரும் புரட்சியை உண்டாக்கின. அவரது தொடர்ப்பமைதி (Doctrine of Relativity), ஒளியமைதி, பொருட் செறிவமைதி, எல்லாம் அணு - விஞ்ஞானத்தை ஆளுகின்றன. காந்தி கடவுளைச் சத்தியவடிவு என்றுர்; காந்தியை வியந்த ஐன்ஸ்டன் கடவுளைச் சக்திமயம் என்றுர். சாந்தியுள்ளமும் ஐன்ஸ்டன் மூளையும் சேர்ந்தால் மனித வாழ்வு சமநிறைவுபெறும் - யோக விஞ்ஞானச் சுடராகும். யோகமும் விஞ்ஞானமும் ஒன்றுபட்டால் அமைதியும் ஆக்கமும் நிலவும். உலகம் மனங்கடந்த சக்திமயம். ஒவ்வொரு அணுவிலும் அந்தச் சக்தி கனல்கிறது. ஆகவே வாஞகி மண்ணுகி ஊஞகி உயிராகி யாங்கணும் பரந்து நிறைந்து பலவாக விளைகிறது என்று ஐன்ஸ்டன் உணர்ந்தார்.

''பாரொடு விண்ணுய்ப் பரந்தளம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்''

என்ற மணிவாக்கு ஐன்ஸ்டன் கருத்தோவியமாயிருக்கிறது. திருவண்டப் பகுதியில் ஐன்ஸ்டனின் சிந்தனைச் சிற்பம் திகழ்கிறது. நமது நாட்டில் ஆள்வார், நாயன்மார் இருந்தது போலவே அறிவியல் மேற்கிலும் அருட்புலவர் புலர் விளங்கினர். அவருள் மிகச் சிறந்த ஒருவர் ஆல்பர்ட் ஐன்ஸ்டன். ஐன்ஸ்டன் வரலாற்றிற் புகுந்து, அண்டபகுதிக்கு வருவோம்.

## அறிவுப்புரட்சி:

இஃது அணுயுகம்; இக்காலத்தில் அறிவுப் புரட்சி செய்த புலவர் ஐன்ஸ்டன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே யூக்ளிட் என்பவர், எகிப்தில் வடிவியலையும், உருவியலையும் வகுத்தார். நீள-அகல-உயரப் பொருள்களின் பண்பைத் துவக்கினர். பதினேழாவது நூற்றுண்டில் நியூட்டன் என்னும் அறிஞர். இயற்கையுலகின் ஈர்ப்பு, கவர்ச்சி முதலிய தன்மைகளை ஆராந்தார். லாவனரோயா, பாஸ்கல், பாயில், ஃபாரடே, ருதர் ஃபோட்டு. மாதரசி கூரி முதலியோர் அரிய பேருண்மைகளைக் கண்டனர். ஒரு பென்சில் முனையில் அறிவைநாட்டி, கணக்குப்போட்டு மண், விண், வெளி, ஒளி எல்லாம் அளந்து அற்புதஉண்மைகளை உலகிற்கு அளித்தவர் ஐன்ஸ்டன். அணுவைப்பிளந்து அனலை வெடித்தெழச்செய்யும் இந்த அணுக் காலத்தின் மூலச்சிற்பி ஐன்ஸ்டனே; நீள—அகல—உயரத்துடன் காலத்தையும் நான்காவது அளவையாக (Fourth Dimension) அவர் கணக்கிட்டார். நமது வித்தியாதத்துவங்களிற் காலம் ஒன்று. ஒளிவேகத்தை நொடிக்கு 186,000 மைல் என்று நிலைநிறுத்தினர். பொருள்—திணிவு திட்பநுட்பங்களையும் ஆற்றலையும் தொடர் புறுத்தினர். ஒளி—மின்—காந்த அலைகளின் இயக்கமும் முயக்கமும் ஒன்றெனக் கண்டார். அணுச்செறிவையும், திரிபையும், திறனையும் அளந்து கண்டு அணு வெடிக்கு அடிகோலினர்.

அணுக்கனலால் உலகம் ஆக்கவேலைகள் செய்யவே அவர் கருதினர். அவ்வாறின்றி அணுத்திறனை அணுவெடியாக்கி அறிவு செய்யும் தீமையைப்போக்க அணுவியலுடன், அருளியலையும் பொருத்தினர். எவ்வாறெனக் காண்போம்.

காந்த ஊசி :

ஐன்ஸ்டன் தென்ஜெர்மனியில் உல்ம் என்ற ஊரிற் பிறந்தார் (14.3.1879). தந்தை ஹெர்மன் யூதவேத அறிஞர். மின்—காந்தத் தொழிலாளர் (Electro-magnet.) தாய் பவுலின் அருங்கலைச் செல்வி; கடவுளன்பினள். இருவரும் செய்யும் வழிபாடுகளை ஐன்ஸ்டன் கூர்ந்து கவனிப்பார். காலைக்கதிரவனையே கண்டுகண்டு மெய்மறந் திருப்பாள். ஆள்நோஞ்சல்; சிரிப்பு விளையாட்டில்லை; தனிச்சிந்தனையே அவருக்கு இனிது. தனது சிந்தனைக் கனவை அவர் தாயிடம் சொல்லுவார். அன்புத் தாய் ''சான்றோன், புலவன்'' என மகனைப் புகழ்வாள். தந்தையின் மின்காந்த வேலைகளை ஐன்ஸ்ட்டன் கண்டு சிந்திப்பார். பிறந்த நாள் பரிசாக, தந்தை அவனுக்கொரு திசைக் கருவியைத் தந்தார். அதன் காந்த ஊசியைச் சுழற்றிச் கழற்றி அது வடக்கையே காட்டும் வியப்பைக் கண்டுகண்டு சிறுவன் சிந்தித்தான். எந்தத் திறமையால் காந்த ஊசி வடக்கை நோக்குகிறது? அதை ஈர்ப்பது எது? அதேமாதிரி அவன் மனதையும் உள்ளே ஒன்று ஈர்க்கிறது; உள்ளிருந்து சிந்திப்பது எது? நான் யார்? என் உள்ளம் யார்? ஞானங்கள் யார்; என்னுள் அறிவது எது?'' என்ற தன்னுராய்ச்சியில் ஐன்ஸ்டன் கருத்தூன்றினுர். பிரான்சில் தெஸகார்த்து (Descarte என்ற கணக்குப் புலவன் ''என்னுள் சிந்திப்பது எது? கணிப்பது எது?'' என்று ஆய்ந்து ஆய்ந்து, ''நான் எனும் பொருளே உள்ள பொருள்; அஃது உள்ளது; அதனுல் உள்ளுகிறேன் (I think; hence I am); அதுவே மூளையிற் சிந்திக்கிறது, உள்ளத்தில் உணர்கிறது'' எனக் கண்டான். அவ்வாறே ஐன்ஸ்டனும் ''தான்'' என்ற பொருளே ''நான்'' என்று உள்ளத்தில் நடமாடுகிறது. அதுவே '' இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் திருவடி நடனம்'' எனக் கண்டார். ஐன்ஸ்டன் நாளடைவில் பிண்டத்தில் நடமாடும் ஒன்றே அண்டத்திலும் நடமாடுவதை உணர்ந்தார். அளப்பரிய, எல்லையற்ற வான் வெளி, உலக— நிறைவான சக்தியே தன்னுளும் என்றுணர்ந்தார்.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பறு தன்மை வளப்பெரு காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடி மேற்பட விரிந்தன''

என்ற திருவண்டப் பகுதியின் கருத்திற் கலந்தது ஐன்ஸ்டன் உள்ளம்,

ஃபிடிலிசை :

ஐன்ஸ்டன் பள்ளிப்படிப்பை விட உள்ளப்படிப்பில் ஊன்றிநின்ருர் ஏழைத் தந்தை தொழிலாக்கம் பெற மூனிச்சில் (Munich) கடைவிரித்தார். அங்கே லூயிபோல்கு பள்ளிக்கூடத்திற் படித்தார் ஐன்ஸ்டன். அவருக்கு வடிவியல் (Geometry) பிடித்திருந்தது. கோட்டுக் கணக்கில் அவர் புலமை காட்டினுர். வீட்டில் பிடில் கற்ருர், திருப்பாடல்களைப் பாடிப் பிடில் வாசித்துக் காட்டினுர். மொஃசார்ட்டு, பேதோவன் பாடல்களைப் பாடிப்பாடிக் களித்தார்.

''ஏழிசையும் இசைப்பயனும் இதயத்தானே ; என்னிசை என்னுள்ளத்தான் குரலே'' என்கிருர் பேதோவன் (Beethovan). னும் அவ்வாறே ஐன்ஸ்டனும் ''பிடிலிசையின் விசை என் உள்ளத்தின் இசை ; அதுவே ஓசை ஒலியெலாம் ஆனது'' என்ருய்ந்தார்..

,,ஓசை ஒலியெலாம் ஆனுய் நீயே
உலகுக்கு ஒருவனுய் நின்ருய் நீயே''

என்ற தேவார உணர்ச்சி அவர் உள்ளத்திற் கலந்து கடவுட் காதலைத் தூண்டியது. ரூஸ் என்ற ஆசிரியர், ஐன்ஸ்டனிடம் அன்பு கொண்டார். பைபிளைப் படித்து விளக்கினுர். ''வானரசு உன்னுள்; அதன் அடைவே அனைத் தடைவு'' என்ற பைபிள் மொழி அவர் சிந்தனையைத் தூண்டிவிட்டது. வானரசு அடைவதைத் தான் சைவம் ''வீடுபேறு'' என்சிறது. எச்சமயமும் இதையே குறிப்பதை அறிஞர் உணர்ந்தார்.

''அறுவகைச் சமயத்து அறுவகை யோர்க்கும்
வீடுபேருய் நின்ற கிழவோன்''.

எச்சமயத்தும், எவருள்ளும் தானே பொருளாயிருந்து ஆன்மாக்களை வழிநடத்தி வீடுபேறுதரும் முழுமுதலை ஐன்ஸ்டன் உள்ளே உணர்ந்தார். புறத்தியற்கையிலும் அதன் ஆடலை உணர்ந்தார்.

''ஏதோ மறைபொருள் ஒன்று உலகாக விளையாடுகிறது. அது அழகுமயம், உணர்ச்சித்திரள். அதனுலேதான் புலன்கள் உணர்கின்றன, நுகர்கின்றன. அதுவே எல்லா அறவியலுக்கும் விஞ்ஞானத்திற்கும் சக்தியாக விளங்குகிறது. அதுவாக்கும் மனமும் கடந்தது; எனினும் அதுவே மெய்ப்பொருள்'' என்கிருர் அறிஞர் ஐன்ஸ்டன். * *

**உயிர்கலந்த ஒன்று :**

இந்த உள்ளுண்மையை உன்னி உன்னி ஐன்ஸ்டன் உள்ளது பரமாத்மா என்று கண்டார். தனக்குக் கவலை, துயர் கலக்கம் வந்த போதெல்லாம் அவர் சூரியனைப் பார்ப்பார். அதில் ஒளியாய் ஒளிரும் ஒன்றை நினைப்பார். தீயைப்பார்ப்பார்; அதில் வெம்மையான ஒன்றை நினைப்பார். இயற்கையே யாக்கை, இறைவனே ஆன்மா, உயிர்க்குலம் ஆன்மத்தொகுதி (God embodied in Nature is ensouled in my body) என்றுணர்வார்.

அருக்கனிற்சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியின் தன்மை வைத்தோன் ; பொய்தீர்
வானிற் கலப்புவைத்தோன்; மேதகு
காலில் ஊக்கங் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்''

என்னும் திருவண்டக்காட்சி இந்த யூதப்புலவன் உள்விழியிற் பொலிந்தன. கேனோபநிடதம் ''கண்ணல்ல கண் எதனாற் காண்கிறதோ அதுவே பிரமம்''

''யச் சக்ஷு ஷ ர ந பயதி
ஏன சக்ஷூம் ப யதி
ததேவ ப்ரம்மத்வம் வித்தி''

என்கிறது. கண்ணிற் காண்பான், காதிற் கேட்பான், மனதில் நினைப்பான் எவன் என்ற கேள்வி பிறந்தால் ''அவன், சிவன்'' என்ற முடிபுண்டாகும். சீவன் இருப்பது சிவனால்.

''Hail Inner One
Light in the Sun''

என்ற பாட்டைப்பாடி பிடில் மீட்டுவதுண்டு ஐன்ஸ்டடன்.

**உள்ளத்தான் வழிநடத்தினர் :**

ஐன்ஸ்ட்டனின் தந்தை இதாலி சென்று மிலானில் தொழில் நடத்தினர். தொழில் தோற்றது; வறுமை வாட்டியது. ஐன்ஸ்டனுக்குப் பதினைந்து வயது ; மேற்படிப்புக்குப் பணமில்லை. ''மகனே இனி உழைத்துப் பிழை'' என்று உத்தரவிட்டார் தந்தை. உலகின் இயல்பை ஐன்ஸ்ட்டன் அறிந்தார். வீட்டை நீத்தார்; தன்னம்பிக்கையுடன் முன் சென்றார்; '' தன்னை வழி நடத்துவது உள்ளத்தான்; அவனே உலகத்தான்;

உள்ளத்தான் ஓங்கும் உலகத்தான், பேரின்ப
வெள்ளத்தான் விண்ணின் விளக்கு.

''அவனே வழிவகை'' என நம்பி நடந்தார். ''உலகம் சூதாட்டமில்லை; அது இறைவன் கோயில்''* என்று உணர்ந்தார். ஜூரிச்சில் ஒரு நண்பரைக் கண்டார். அவர் உதவியால் ஒரு கலைப்பள்ளியிற் சேர்ந்தார் ஆனல் அவர் கருத்தெல்லாம் கணக்கில் இருந்தது. இதையறிந்த தலைமையாசிரியர், அவரை ஆரௌ (Harrow) என்ற பள்ளிக்கு அனுப்பினர். அது அவருக்குப் பிடித்திருந்தது. அங்கே ஆசிரியர் விந்தலர் (Wintler) ஐன்ஸ்டனின் கணக்குப் புலமையை ஊக்கினர். இவரும் யூதர். இவர் மகன் ஐன்ஸ்டனின் தங்கை மஜாவை மணந்தார். இப்பள்ளியிற் படித்த பிறகே ஐன்ஸ்ட்டன் கல்லூரியிற் கற்றார்.

ஹெர்மன் மிங்கோவ்ஸ்கி என்ற உருசியக் கணக்கர் ஐன்ஸ்டனை மிகவும் போற்றிக் கணக்கு, பூதநூல் இரண்டிலும் அவரைப் பயிற்றினர். 1901—ல் ஐன்ஸ்டனுக்குக் குடியுரிமை கிடைத்தது. ஒரு மாணவர் விடுதியில் சாப்பிட்டார் அறிஞர். அதனது தலைவருடைய மக்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துப் பிழைத்தார். பிறகு பர்ன் (Berne) நகர் சென்றார். ஒரு நண்பர் துணையால் உரிமைப் பதிப்பகத்தில் (Patent Office) வேலை கிடைத்தது. அங்கே ஏழாண்டுகள் வேலைபார்த்தார். போதிய ஊதியம் கிடைத்தது. ரூ. 600/— வயிற்றுப் பசிக்கு வகையானது.

மனப்பசி கனலிட்டது. வயது இருப்பத்திரண்டு. வயதிற்குரிய காதல் வந்தது. 1903இல் மிலேவா என்ற குமரி இவரை மனந்தாள். நல்லறமான இல்லறம் இனித்தது. இரண்டு ஆண்மக்கள் பிறந்தனர். இதன் பின்னர் ஐன்ஸ்டன் அறிவாராய்ச்சியிற் பெரிதும் ஈடுபட்டார்.

** The most beautiful and most profound emotion we can experience is the sensation of the mystical. It is the power of all true Science. What is impenitrable to mind really exists.''

* I ''cannot believe that God plays dice with Cosmos. It is His temple''.

அறிவாராய்ச்சி :

நூலுரிமைப் பதிப்பகத்திற்குப் பலதுறை நூல்கள் வரும். அவற்றையெல்லாம் ஐன்ஸ்டன் கருத்துடன் படித்து அறிவை வளர்த்தார். அவரது அறிவாராய்ச்சிகளையும் கணிதப் புலமையையும் புலவர் வியந்து பாராட்டினர். பெஸ்ஸோ என்ற தோழரும் விஞ்ஞானப்புலவர். கணித விஞ்ஞானப் பேச்சிற் புகுந்தால் பொழுதுபோவதே தெரியாது. இவற்றிடையே தன்னை இந்நிலையில் உய்த்த தற்பரனை மறவாமல் ஐன்ஸ்டன் நெஞ்சத்துடிப்புடன் நினைத்துத் துதிப்பார்.

முன்னோங் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் தானே காண்க
இன்னிசை வீணையில் இசைத்தோன் காண்க
அன்னதொன் றவ்வையின் அறிந்தோன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க.

என்று ஐன்ஸ்டன் உருகிஉருகி நினைத்தார். திருவண்டப்பகுதியின் உண்மை எப்படி ஓர் உலகறிஞனிடம் உருக்கொண்டதுகாண்க !

இறைவனே! இவ்வுலகம் உனது கலைவிளக்கம். இது தானுமாகாக ஏனோதானோ என்று உண்டானதன்று. இந்த அண்டப்பகுதி நீ நிரல்பட, நிறைவுற அமைத்து. இதில்: நீ உயிர்மேனிப் பெருமானாக உலவுகிறாய் அணுவுக்கு அணு மகத்துக்கு மகத்தாக விளங்குகிறாய், அணுக்களை இணைத்து அனைத்தையும் அமைத்த நீ இணையில்லாப் பெருமையன், என்று உருகினார் ஐன்ஸ்டன். இக் கருத்தையே திருவண்டப்பகுதியிற் காண்கிறோம்.

"அணுத்தகு தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க!
அரியதில் அரிய அரியோன் காண்க.
மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க!"

எனது ஜெர்மன் நண்பர் ஒருவர் "ஐன்ஸ்டன் பூந்தோட்டங்களில் உலாவும்போது வானத்தையும் பூம்பசு நிலத்தையும் கண்டு கண்டு, கடவுளே நீ அழகன் அமுதன் அளப்பறு சிறப்பன். மேலே நாண்களாய் மிளிர்கின்றாய். கீழே நாண்மலர்களாய் நகைக்கிறாய் — யஹாவா யஹோவா — வணக்கம் வணக்கம்" என்று தலைவணங்கி உரையடங்கி உள்ளே நினைப்பது வழக்கம் என்று என்னிடம் தெரிவித்தார். அறிவியற் பேரறிஞன் ஆகிய ஐன்ஸ்டனின் இறையருளுணர்வின் திறனைவிளக்க இதனைவிட வேறு சான்று வேண்மோ ?

** The Unique one that is the All, the Soul in all, guides me step by step.

800 009
158573

## செய்திச் சுருக்கம்

(1) திருப்பணித் துவக்கவிழா :—ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ நாச்சியார் தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலின் திருப்பணி வேலையை, மதுரைத் துணை ஆணையர் திரு. பி. ஆர். பக்கிரி சங்கர், M. A., B. L., அவர்கள் தொடக்கிவைத்தார்கள். இராமநாதபுரம் உதவி ஆணையர் திரு. பி. சீனிவாசன் அவர்களும் திருப்பணித் தொடக்கவிழாவிற் கலந்து கொண்டார்கள். திருப்பணிக் கமிட்டித் தலைவர் திரு ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, மேற்படி திருப்பணிக்கு ரூ. 30,000/- செலவிட இருப்பது குறித்தும், ஷ திருப்பணியின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். (11—9—1969)

(2) அறங்காவலர் அறிமுக விழா :—இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் திரு. கே. எஸ். நரசிம்மன், B. A.,B.L., I.A.S., அவர்களுக்குச் சென்னை நகர இந்துசமய ஆலய அறங்காவலர்களை அறிமுகப்படுத்தும்விழா, இராயப்பேட்டைபசுவாகத் விடுதியில் நடைபெற்றது. அவ்விழாவில் தமிழ்நாடு அரசின் சட்ட இலாகாச் செயலாளர் திரு. ஆர். இராமசுப்பிரமணியம், B.Sc.,B.L., அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். அறங்காவலர் குழுச் செயலாளர்கள் திரு. எஸ். சூரியநாராயணன், திரு. வே. அ. பாலகிருஷ்ணன் ஆகியோர், ஆலய அறங்காவலர்களை ஆணையர் அவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார்கள். (17—10—1969)

ஆசிரியர்.





ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்ரீ கிருஷ்ணன் கோயில் திருப்பணி வேலையை மதுரைத் துணை ஆணையர் திரு. பி. ஆர். பக்கிரி சங்கர், M.A.,B.L., அவர்கள் தொடங்கி வைத்தல். (11-9-69)



இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானத்தைச் சேர்ந்த சித்த வைத்தியசாலையை, மதுரைத் துணை ஆணையர் திரு. பி. ஆர். பக்கிரி சங்கர், M.A.,B.L., அவர்கள் திறந்து வைத்தல். (8-9-69)



கும்பகோணம் ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி கோயில் அறங்காவலர்பால், ஆலயத் தூய்மைப் பரிசளிப்புச் சுழற்கோப்பையினைத் தஞ்சைத்துணையாணையர் திரு. T. N. சிங்காரவேலு முதலியார் B.A., B.L., அவர்கள் வழங்குதல். (11-9-69)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Admn.) Dept., Madras-34.
Printed at General Printers, 14, Poonamallee High Road, Madras - 3.